[20th March 1965

திரு. ர. ஜீவரத்னம் : எங்கள் ஜில்லாவில் உள்ள பக்தர்கள் திருப்பதி, திருச்சானூர், ஸ்ரீபெரும்புதூர் போன்ற இடங்களில் உற்சவ காலங்களில் அன்னதானத்திற்கு ஏற்பாடு செய்வது வழக்கம். கடந்த ஆண்டு தடையுத்தரவின் காரணமாக அந்த அன்னதானம் திருப்பதி, திருச்சானூர் போன்ற இடங்களில் *தடைபட்டு போய்விட்டது. அம்மாதிரி பக்தர்கள் அன்னதானம் செய்யவேண்டுமென்ருல் அதற்குரிய மனுக்களை அனுப்பினுல் கலெக்டர் பரிசீலனை செய்து அனுமதி வழங்கவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. வெ. ராமையா : அதுபோன்ற நல்ல காரியங்கள் செய்வதற்கு உண்மையிலேயே யாரேனும் முயற்சி எடுத்திருப்பவர்கள் இதற்கு முன்பு எடுத்த நடவடிக்கைகளையெல்லாம் விவரமாகக் குறிப்பிட்டு கலெக்டருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அவர்கள் கவனிப்பார்கள்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note:*—An asterisk at the commencement of a speech indicates revision by the Member.]

II. ANNOUNCEMENTS.

(1) HOURS OF SITTING OF THE ASSEMBLY ON 22ND MARCH 1965.

9-30 a.m. MR. SPEAKER : Under Rule 20 of the Legislative Assembly Rules, I have to announce to the House that the Assembly will sit from 2 p.m. to 7 p.m. on the 22nd March 1965 instead of from 8-30 a.m. to 1.30 p.m.

(2) BUSINESS OF THE HOUSE.

MR. SPEAKER : I have also to announce to the Houes that the Madras General Sales Tax (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 6 of 1965) will be taken up for consideration as the first item after question hour on the 29th March 1965. Discussion on the Official Language Policy will take place on the 1st and 3rd April 1965, as the 2nd April 1965 is a public holiday.

SRI A. G. BALAKRISHNAN : Sir, on a point of order. திங்கட்கிழமை மாலை 2 மணியிலிருந்து இரவு 7 மணி வரைக்கும் சட்ட மன்றக் கூட்டம் நடைபெறும் என்று தாங்கள் அறிவித்தீர்கள். அதற்குக் காரணம் என்ன என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : It is not a point of order. I have referred to Rule 20 and let the hon. Member, Sri Balakrishnan, please read that Rule.

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1965-66.

DEMAND NO. III—GENERAL SALES TAX AND OTHER TAXES AND DUTIES —ADMINISTRATION.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,06,42,900 under Demand No. III—General Sales Tax and Other Taxes and Duties—Administration'.

20th March 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை சம்பந்தமாக சில பொதுவான விஷயங்களை ஆரம்பத்தில் கூறலாம் என்று நான் நினைக்கிறேன். 1959-ம் வருஷம் பொது விற்பனை வரி அமலுக்கு வந்த காலத்திலிருந்து தமிழ்நாட்டிலே விற்பனை வரியின் மூலம் வருமானம் ஆண்டு தோறும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இந்த இடைக் காலத்தில் வரிகள் அதிகரிக்கப்படவில்லை. என்றாலும், வருமானம் பெரிய அளவுக்கு நமக்குக் கூடிக்கொண்டு வருவதற்கு முக்கிய காரணம், ராஜ்யத்தில் பொருளாதாரத் துறையில் ஏற்படுகிற முன்னேற்றமும், தொழில், வர்த்தகம் செழிப்பாக நடந்து வருவதும் தான்.

இதற்கான புள்ளி விவரங்களை இந்தச் சமயத்தில் சொல்லலாம் என்று நினைக்கிறேன். 1959-60-ம் ஆண்டில் நமக்குப் பொது விற்பனை வரி மூலமாகக் கிடைத்த தொகை 12 கோடி 82 லட்சம் ரூபாய். இது 1963-64-ம் ஆண்டில் 20 கோடி ரூபாயாக உயர்ந்தது. 1964–65-ம் ஆண்டில் பட்ஜெட் எஸ்டிமேட்டில் நாம் 21 கோடி 50 லட்சம் ரூபாய் வரும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், திருத்திய மதிப்பீட்டின்படி நமக்கு 22 கோடி 66 லட்சம் ரூபாய் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், 1965–66-ம் ஆண்டுக்கு 25 கோடி ரூபாய் பொது விற்பனை வரியின் மூலமாகக் கிடைக்கும் என்று நாம் மதிப்பீடு செய்து, நம்முடைய வரவு செலவுக் கணக்கைத் தயார் செய்திருக்கின்றோம்.

அதே போல, மத்திய விற்பனை வரியை எடுத்துக்கொண்டாலும் 1959–60-ம் ஆண்டில் நமக்கு 1 கோடி 88 லட்சம் ரூபாய் கிடைத்தது. இது 1963–64-ம் ஆண்டில் 4 கோடி 85 லட்சம் ரூபாயாக உயர்ந்தது. 1964–65-க்கு திருத்திய மதிப்பீட்டில் இது ஐந்து கோடி எழுபது லட்சம் ரூபாயாக இருக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். 1965–66-ம் ஆண்டில் 6 கோடி 40 லட்சம் ரூபாய் வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது.

என்டர்டெயின்மென்ட் டாக்ஸ், பெட்டிங் டாக்ஸ் மூலமும் ஓரளவு வருமானம் பெருகி வந்திருக்கிறது. ஆனால், Sales of Motor Spirit Taxation—இலே வருமானம் குறைந்திருக்கிறது. எதிர்பார்த்த அளவு நமக்குக் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம், பெரிய அளவுக்கு இப்பொழுது மோட்டார் வாகனங்கள் ஓட்டுகின்றவர்கள் பெட்ரோல், டீஸல் இவற்றுக்குப் பதிலாக மஞ்சள் எண்ணெய் (Kerosene oil) உபயோகிப்பதாகச் சர்க்காருக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இது சட்டத்திற்குப் புறம்பானது ; சட்டத்திற்கு விரோதமானது ஆகவே, சர்க்கார் இதைத் தடுப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் இப்பொழுது சட்டசபைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு இந்த நிர்வாகத்திலே சில சலுகைகள் கொடுத்தோம். தொழிலாளர்களுக்காக நடத்துகிற காண்டீன்களைப் பொறுத்த வரையில், தொழிலதிபர்கள் அந்தச் செலவில் 25 சத வீதம் கொடுப்பார்களானால், அந்தக் காண்டீனில் விற்பனையாகும் பண்டங்களுக்கு விற்பனை வரி கிடையாது என்று சலுகை கொடுத்திருக்கிறோம். அது போல காந்தி கிராமத்தில் உற்பத்தி செய்கிற பல பண்டங்களுக்கு விற்பனை வரி இல்லை என்ற சலுகை கொடுக்கப்பட்டு இருக்கிறது. திருச்செங்கோடு காந்தி ஆஸ்ரமத்தில் அவர்கள் செய்து வருகின்ற ஸ்பின்னிங், வீவிங், இம்பிளிமெண்ட்ஸுகளுக்கு விற்பனை வரிச் சலுகை கொடுத்திருக்கிறோம். ராணுவத்தில் இருக்கின்ற ஜவான்கள் தங்கள் உபயோகத்திற்காக காண்டீன் ஸ்டோர்சுகளில் பண்டங்கள் வாங்குகிறார்கள். அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காக அந்த ஸ்டோர்கள் மூலம் அவர்கள் என்ன பண்டங்கள் வாங்கினாலும், மோட்டார் சைகிளில் இருந்து பின்னுக இருந்தாலும், அவைகளுக்கு விற்பனை வரி கிடையாது என்ற சலுகை கொடுத்திருக்கிறோம். அது போலவே பல மாதர் சங்கங்கள் பல்வேறு பண்டங்களை, குறிப்பாக சிறுவர்களுக்கான ஆடைகள் எல்லாம் தைத்து விற்பனை செய்து அதன் மூலமாகக் கிடைக்கின்ற பணத்தைக் கொண்டு திக்கற்ற பெண்களுக்கு உதவி செய்து கொண்டு வருகிறார்கள். அந்த விதமான மாதர் சங்கங்கள்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [20th March 1965

விற்பனை செய்கிற பண்டங்கள் எல்லாவற்றுக்கும் விற்பனை வரி கிடையாது என்ற சலுகை கொடுத்திருக்கிறோம். சென்னையில் இருக்கிற காதி கிராமோத்யோக் பவன் விற்பனை செய்கிற பண்டங்களுக்கு விற்பனைச் வரி சலுகை கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதே போல் ஸ்வீடிஷ் ராஜ்யத்தில் இருந்து இங்கு வந்து காட்பாடியில் அங்க ஹீனர்களுக்கு உதவி செய்கிற கருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை வைத்திருக்கிறார்கள். அவர்கள் விற்பனை செய்கிற பண்டங்களுக்கும் விற்பனை வரி கிடையாது என்று செய்திருக்கிறோம். இவை எல்லாம் விற்பனை வரிச் சலுகையாகக் கடந்த ஆண்டில் நம் ராஜ்யததில் கொடுக்கப்பட்டவை.

விற்பனை வரி வசூல் செய்வதிலே ராஜ்ய சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்து பல விடங்களில் அவர்கள் சோதனைகள் எல்லாம் போட்டு வரி வசூல் செய்திருக்கிறார்கள். அதன் காரணமாக சர்க்காருக்கு 6 கோடியில் இருந்து 7 கோடி ரூபாய் வரை அதிகமான வருமானம் கிடைக்கும் என்று இன்றைக்கு நாம் எதிர்பார்க்கிறோம். அதே சமயத்தில் இது சம்பந்தமாக ஹைக்கோர்ட்டிலே தாவா போடப்பட்டு இருக்கிறது. அந்தத் தாவாவின் முடிவில் ஹைக்கோர்ட்டார் இந்த விதமாக விற்பனை வரி அதிகாரிகள் "சர்ச்" செய்வது நம்முடைய அரசியல் சட்ட அடிப்படைக்கு முரணானது என்று தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு மேல் சுப்ரீம் கோர்டுக்கு அப்பீல் செய்வது என்று சர்க்கார் முடிவு செய்துள்ளது. அதன்பேரில் அப்பீல் செய்துகொள்ள நேற்றையதினம் ஹைக்கோர்ட்டின் அனுமதியும் பெறப்பட்டுவிட்டது. இதற்கிடையில் ஹைக்கோர்ட்டில் சொல்லியிருக்கிற அளவு நம் ராஜ்ய சட்டத்தையும் திருத்த முடியுமா என்பதைச் சர்க்கார் பரிசீலனை செய்துகொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஒரு விஷயத்தில் கனம் அங்கத்தினர்களுடைய அபிப்பிராயத்தை நான் கோருகின்றேன். 1958-ம் ஆண்டு சட்டம் கொண்டு வருகிற காலத்தில் நான் வற்புறுத்திச் சொன்னேன்—விற்பனை வரி என்பது பல முனை வரியாக இருப்பது நல்லது, ஒரு முனை வரியாகப் போடுவதால் பலவிதமான தொல்லைகள், தொந்தரவுகள் ஏற்படும். ஆகவே பலமுனை வரியாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று கோரினேன். இருந்தாலும் வர்த்தக வரிச் சமூகத்தினர் ஒரு முனை வரியாகச் செய்ய வேண்டுமென்று விரும்பி மிகவும் வற்புறுத்திய காரணத்தினால், அவர்கள் விரும்பியபடியே நிபுணர்கள் செய்த சிபார்சை ஏற்றுக்கொள்ள முன் வந்து ஒரு முனை வரி கொடுத்தோம். அந்த ஒரு முனை வரி ஏற்பாடு அமலுக்கு வந்த பிறகு அதில் பல தொல்லைகள் ஏற்படுகின்றன என்பதை இன்றைக்கு அவர்களே முன் வந்து சொல்லுகிறார்கள். காரணம் என்னவென்று சொன்னால் ஒரு முனை வரி போடுகிறபோது இன்ன இன்ன பொருள்களுக்கு 2 சத வீதம், இவற்றுக்கு 3 சத வீதம், இவற்றுக்கு 6 சத வீதம், இவற்றுக்கு 5 சத வீதம் என்று பலவாரியாக வைத்துள்ளோம். வரி விதிக்கப்படுகிறபோது எந்தப் பண்டம் எந்த க்ளாசிபிகேஷன் கீழ் வருகிறது என்ற பிரச்சினை எழுகிறது. உதாரணமாக இப்போது பெயிண்ட்ஸ்களை எடுத்துக்கொண்டால் அவற்றுக்கு 6 சத வீதம் ஒரு முனை வரி. அப்படிச் சொல்லுகிறபோது சாதாரண கலர்கள், சுண்ணாம்பு அடிக்க, டிஸ்டெம்பர் அடிக்க உபயோகப்படுகிற கலர்கள் பெயிண்ட்ஸ் என்ற இனத்தில் வரி விதிக்கப்படவேண்டுமா, இல்லையா என்ற பிரச்சினை எழுகிறது. இவை பற்றி அடிக்கடி சர்க்காரிடம் விளக்கங்கள் கோரப்படுகின்றன. சர்க்கார் என்ன விளக்கம் கொடுத்தாலும் அவை சட்டப்படி செல்லாது. ஒன்றிரண்டு முறைகள் விளக்கம் கொடுத்தோம். இருப்பினும் தாவா கோர்ட்டுக்குப் போன காலத்தில் அவர்கள் இவற்றுக்கு மாறாகக் கொடுத்துவிட்டார்கள். இப்படிப் பல சிக்கல்கள், தொல்லைகள் இந்த ஒரு முனை வரி விதிப்பினால் வருகின்றன.

இப்போது இன்னொரு பிரச்சினை கூட எங்களுக்கு முன்னால் இருக்கிறது. எலெக்ட்ரிகல் குட்ஸ் என்றால் அவை என்ன ? மின்சாரம் உற்பத்தி செய்கிற பண்டங்களா ? அல்லது மின்சாரத்தைக் கொண்டு உபயோகப்

20th March 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

படுத்துகிற பண்டங்களா ? சில பொருள்கள் மின்சார இணைப்புக் கொடுத்தாலும் இயங்கும். மின்சார இணைப்பு இல்லாமலேயும் கூட இயங்கும். இவையும் அதில் சேர்க்கப்படுமா என்கிற பல சிக்கல்கள் எல்லாம் இன்றையதினம் வருகின்றன. பல முனை வரி என்று இருந்து விட்டால் எந்தவிதமான பண்டமாக இருந்தாலும் 2 சத வீதம் என்ற முறையில் வைத்து விட்டால் மாதம் ஒருவருக்கு மொத்த விற்பனை, டர்ன் ஓவர், எவ்வளவோ அந்த அடிப்படையில் எவ்விதத் தகராறும், ஏற்படாதவாறு வரி வசூல் செய்து விட முடியும். தனித்தனியாக அவ்வப் போது ஏற்படுகிற சிக்கல்களைத் தீர்க்க விளக்கங்கள் கொடுக்க வேண்டிய நிலை இருக்காது. இது பற்றி அகில இந்திய சேல்ஸ் டாக்ஸ் கான்பரன்ஸ் நடந்தபோது நான் விளக்கிச் சொன்னேன். அதற்குப் பிறகு வர்த்தக சபைக் குழுவினர் எல்லோரும் சேர்ந்து கலந்து ஒரு மெமோராண்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மெமோராண்டத்தில் ஒரு முனை விற்பனை வரியை எடுத்துவிட்டு மீண்டும் பல முனை வரியாக மாற்றி அமைத்துவிட வேண்டும். மத்திய சர்க்கார் லக்ஷுரிப் பண்டங்கள் போக, ராஜ்ய சர்க்கார் சலுகை கொடுத்திருக்கிற பண்டங்கள் போக, மற்ற பண்டங்களுக்கு ஒரு விதமான பல முனை வரியைப் போடுவது நல்லது என்று கொடுத்திருக்கிறார்கள். நான் வர்த்தகச் சமூகத்தினர்களிடமே சொல்லி யிருக்கிறேன். இந்தச் சட்ட சபை அங்கத்தினர்கள் சொல்கின்ற கருத்துக் களுக்கு ஏற்ப, இந்தச் சர்க்கார் அதன் பேரில் முடிவு செய்யும் என்பதாகத் தெரிவித்திருக்கிறேன். ஆகையால், இது பற்றி மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய அபிப்பிராயத்தைக் கூறவேண்டும் என்று கோருகிறேன். அவர்கள் கொடுக்கிற நல்ல யோசனைகள் சர்க்கார் இது விஷயத்தில் முடிவு செய்ய உதவியாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சுப்ரீம் கோர்ட்டில் ஒரு தீர்ப்புக் கொடுக்கப்பட்டு இருக் கிறது. அந்தத் தீர்ப்பில் விற்பனை வரியை உள்ளிட்டு மொத்தம் என்ன வியாபாரம் இருக்கிறதோ அதற்கு விற்பனை வரி கட்டவேண்டுமென்று கொடுத்தார்கள். Since it is a legal matter, I will read the relevant portion in English and then continue my speech :—

" Based on the decision of the Supreme Court in the case (George Oakes *vs*. State of Madras) and the decision of the Madras Sales Tax Appellate Tribunal, the Government have ordered that the sales tax should be collected on the total amount received by the dealers including the tax. In other words, the sales tax collections should be included in the total and taxable turnover of the dealer. This order takes effect from 1st October 1964."

ஒரு வியாபாரிக்கு மொத்த வியாபாரம் என்ன ஆகின்றதோ அதன்மேல் எவ்வளவு அவர்கள் வரி வாங்குகிறார்களோ அதையும் சேர்த்துத் தான் டர்னோவர் என்று வைத்துக் கணக்கிடவேண்டும். அவ்வாறு கணக்கிட்டு வருகின்ற மொத்தத் தொகையின் மீது விற்பனை வரி விதிக்க வேண்டும் என்பது அந்தத் தீர்ப்பின் அடிப்படை. இதை ஒட்டி ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து, 1964, அக்டோபர் 1-ம் தேதி முதல் வரி வசூலிக்கவேண்டுமென்று உத்தரவு போட்டோம். இதை எதிர்த்து இப்போது ஹைக்கோர்ட்டில் ரிட்டுகள், மனுக்கள் எல்லாம் போட்டிருக்கிறார்கள். நான் இந்த மானியக் கோரிக்கையை இந்தச்சபை முன் வைப்பதற்கு முன்னால் அவர்களுடைய தீர்ப்பு சொல்லியாகிவிடும் என்று நம்பினேன். ஆனால் இது வரை தீர்ப்புச் சொல்லப் படவில்லை. விற்பனை வரியைச் சேர்த்து வசூலிப்பது அவ்வளவு நியாய மல்ல என்று நினைக்கிறேன். ஆகவே, சர்க்கார் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து விற்பனை வரியை நீக்கி, பாக்கி இருக்கின்ற, பண்டங்கள் விற்பனை செய்த தொகையின் மேல், விற்பனை வரியை விதிக்க வேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறது. அந்த முடிவை நிறைவேற்று வதற்குச் சட்டத்தை மாற்றியமைக்கவேண்டும். அந்தச் சட்டத்தை இப்பொழுது செய்வதற்குக் காலம் இல்லாத காரணத்தால், நான் அடுத்த செஷனிலே கொண்டுவந்து ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்து—

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [20th March 1965

1965-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்தே அந்த வரியைச் சேர்த்து வசூலிக்கவேண்டாம் என்ற முடிவை, சர்க்கார் எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இது சம்பந்தமாக நான் வர்த்தக சமூகத்தினரிடத்தில் பேசுகின்றபொழுது நான் சொன்னேன், ஹைக்கோர்ட்டிலிருந்து முடிவு எப்படி வந்தாலும், நம்முடைய சர்க்காரைப் பொறுத்த அளவில் நியாயமான ஒரு அளவு விற்பனை வரி விதிப்பதைத் தான் அது ஏற்றுக்கொள்ளும். ஆகவே, இது சம்பந்தமான முடிவு ஹைக்கோர்ட்டிலிருந்து வந்த பிறகு செய்யலாம் என்று கூறப்பட்டது. ஆனால் ஹைக்கோர்டிலிருந்து தீர்ப்பு வருவதற்குக் காலதாமதம் ஆகின்ற காரணத்தால் இந்த வரியை வசூல் செய்யத் தேவையில்லை என்றும் பாக்கி இருக்கிற பண்டங்கள் விற்பனை செய்த தொகையின் மீது வரி வசூலிப்பதென்றும் சர்க்கார் முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அட்மினிஸ்ட்ரேஷன் சம்பந்தமாக பலவிதமான குறை பாடுகள் இருக்கத்தான் செய்யும். பரந்த நிர்வாகத்திலே, பல பண்டங் களின் மீது வரி வசூலிக்கப்படுகின்றபொழுது, குறையே இல்லாத நிர்வாகம் இருக்குமென்று சொல்லமுடியாது. அவைகளையெல்லாம் அங்கத்தினர்கள் நல்ல முறையில் எடுத்துச் சொன்னால், அவைகளைத் தீர்ப்பதற்கும், நிவர்த் திப்பதற்கும் சர்க்கார் முயற்சிகளை எடுத்துக்கொள்ளும் என்று தெரிவித்துக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, உணவுப் பொருள் களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கவேண்டுமென்ற என்னு டைய பெயரில் உள்ள வெட்டுப் பிரேரணையை நான் முன்மொழிகிறேன்.

"That the allotment of Rs. 1,06,42,900 under Demand No. III --General Sales Tax and Other Taxes and Duties--Administration be reduced by Rs. 100".

MR. SPEAKER : The Demand and the cut motion are before the House for discussion.

* **திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, விற்பனை வரி, மானியத்தின்மீது புலவர் கா. கோவிந்தன் அவர்கள் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையையொட்டி நான் சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

இந்த விற்பனை வரி, மதுவிலக்கு நமது நாட்டிலே கொண்டுவரப்பட்ட பொழுது, அதன் மூலமாகத் துண்டு விழுகிற பணத்தை ஈடுகட்டுவதற்காகப் புகுத்தப்பட்டதாகும். ஆனால், இப்பொழுது இந்த வரி மிக அதிகமாக வளர்ந்து வந்திருக்கிறது. இந்த ஆண்டு இந்த வரியின் மூலம் வரு மானம் ரூ. 25 கோடி எதிர்பார்க்கப்படுகிறது. இந்த 25 கோடி ரூபாய் நம்முடைய மொத்த வரி வருமானத்தில் மூன்றில் ஒரு பங்காக இருக் கிறது. 76 கோடி ரூபாய் நம்முடைய வருமானம் என்றால் அதில் மூன்றில் ஒரு பங்கு விற்பனைவரியாக இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், நம்முடைய மத்திய சர்க்காரிடமிருந்து நமக்கு இன்கம்டாக்ஸ் முதலிய வரிகளின்மூலம் வருகின்ற பங்கை விட இது அதிகமாகவே இருக்கிறது என்று கூறலாம். அந்த அளவுக்கு மிக அதிகமான வரு மானமுள்ள இந்த வரியை விற்பனை வரி என்று கூறுவதைவிட வாங்கு வோர் வரி என்று கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் டாக்ஸேஷன் என்கொயரி கமிட்டி இதைப் பரிசீலனை செய்து அறிவித்த பொழுது,

'First of all, there is the consumer, the buyer of taxable goods . . . .By and large the revenue comes from the consumer".

20th March 1965] [திரு. து. ப. அழகமுத்து]

என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். ஆகவே, இதை கன்ஸ்யூமர் வரி என்றுதான் சொல்லவேண்டும். இந்த வரியைப் போடுகின்ற முறை வேறு நாடு களிலேயும் சில காலங்களிலே இருந்திருக்கிறது. பிரிட்டனிலே இந்த வரியை "பர்ச்சேஸ் டாக்ஸ்" என்று போட்டிருக்கிருர்கள். எப்பொழுது என்ருல், திரு. பிரகாசா அவர்கள் ஒரு கட்டுரையிலே

"The purchase tax was levied by the British Government during the last war to mop up a part of the excess purchasing power in the hands of the people, which was competing with Government in the purchase of scarce resources."

என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். அதாவது, இந்தப் பண்டங்ளின்மீது வாங்கு வோருக்கு வரி விதித்தது எதற்காக என்ருல் யுத்தகாலத்தில் பர்ச்சேஸிங் பவர் மக்களிடத்திலே அதிகமாக இருந்தபொழுது, பற்ருக்குறை பொருள் களை சர்க்கார் வாங்குகின்ற சமயத்தில் மக்கள் சர்க்காரோடு போட்டிபோடுகின்ற அளவுக்கு மக்களிடத்தில் வளர்ந்திருக்கிற அதிகப்படியான வாங்கும் சக்தியைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த வரியைப் போட்டார்கள். அதோடு, நம்முடைய மாநிலத்தினுடைய விற்பனே வரியைப் பார்க்கின்றபொழுது அந்த அளவுக்கு மக்களிடத்திலே வாங்கும் சக்தி இருக்கிறதா என்பதை முதலிலே பார்க்கவேண்டும். மக்களிடத்திலே வாங்கும் சக்தி இல்லே. இதை நாம் குறிப்பிடுவதை விட, டாக்ஸேஷன் என்கொயரி கமிட்டியே கூறியிருக்கிறது.

"In this capacity most people are affected including those whose income levels are well below that which attracts income-tax. ...... Sometimes the consumer is painfully aware, and sometimes is left to be painfully curious, of what he pays as sales tax."

ஆகவே, வாங்குவோர் மிக ஏழைகளாக இருப்பதால் மிகக் கஷ்டப்பட்டு இந்த வரியைக் கொடுக்கக்கூடிய நிலேயில் இருக்கிருர்கள். அந்த வரியைக் கொடுக்கக்கூடிய அளவுக்கு அவர்களிடம் வாங்கும் சக்தி இல்லே. வாங்குவோர் இந்த வரியைக் கட்டாயம் கொடுத்துத் தீரவேண்டிய நிலேயிலே இருக்கிருர்கள். இந்த நிலே, சர்க்கார் தன் னுடைய கொள்கையாக வைத்திருக்கின்ற சோஷலிஸத்திற்குப் பொருத் தமாக இருக்குமா என்பதைப்பற்றி இந்தச் சந்தர்ப்பத்தில் சிந்தித்துப் பார்ப்பது பொருத்தமாக இருக்குமென்று நினேக்கிறேன். வேருெரு மானியத்தில் பேசுகிறபொழுது தொழில் அமைச்சர் அவர்கள் சர்க்கார் திட்டவட்டமாக ஒரு கொள்கையை வைத்திருக்கிருர்கள் என்றும், அதன் படிதான் நடப்போமே தவிர எதிர்க்கட்சியிலே சொல்வதைக் கேட்டுக்கொண்டு நடக்கமுடியாதது என்று குறிப்பிட்டார்கள் என்பது அங்கத்தினர்களுடைய கவனத்தில் இருக்குமென்று நினேக்கிறேன். இதை வைத்துக்கொண்டு பார்க் கும்பொழுது, சர்க்காருடைய கொள்கையாக இருப்பது சோஷலிஸம். சோஷலிஸம் என்ருல் இருக்கிறவர்களிடத்திலே வரியை வாங்கி இல்லாத வர்களுக்கு அதைக் கொடுத்து ஈடுசெய்வது என்பதுதான் சோஷலிஸத் தினுடைய அடிப்படைத் தத்துவம். அப்படிப் பார்க்கும்பொழுது அந்த அடிப்படையில் இந்த சேல்ஸ்டாக்ஸ் இருக்கிறதா என்ருல் இல்லே. இல் லாதவர்கள் தான் கொடுக்கக்கூடிய நிலே இருந்து வருகிறது. இல் லாதவர்கள்தான் மேலும் மேலும் வரி கொடுக்கக் கூடிய சூழ்நிலே உருவாகியிருக்கிறது. ஏழைகள் சேமித்து வைக்கக் கூடிய நிலே இல்லாமல் போகிறது. ஆகவே, சர்க்காரின் அடிப்படைத் தத்துவத்திற்கும் இந்த சேல்ஸ்டாக்ஸ்க்கும் முரண்பாடு இருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், சேல்ஸ்டாக்ஸ் கொடுக்கின்றவர்களில் ஏழைகள் பெரும் பான்மையினராக இருக்கிருர்கள். சேல்ஸ்டாக்ஸின் பங்கிலே மொத்த லக்ஸூரி குட்ஸுக்காகப் போடப்படும் டாக்ஸ் எவ்வளவு இருக்கிறது என்று பார்த்தால் அது மிகக் குறைவாகத்தான் இருக்கும். உணவுப் பொருள்கள் போன்ற மற்ற அத்தியாவசியப் பண்டங்கள் மூலமாகத் தான் சேல்ஸ் டாக்ஸ் அதிக வசூல் செய்யப்படுகிறது. ஆகவே, ஏழைகள்தான் பாதிக்கப்படுகி

ருர்கள் என்பதற்கு இது இன்னும் ஒரு படி அதிகமாக ஆதாரமாகிறது. ஆகவே, உணவுப்பண்டங்களின் மீது போடப்பட்டுள்ள வரியையாவது நீக்கி விட்டால் நன்ருக இருக்குமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் இப்பொழுது இருக்கின்ற ஒருமுனை விற்பனை வரிக்குப் பதிலாக பலமுனை விற்பனை வரியைக் கொண்டுவரலாம் என்று யோசித்து வருகிருேம் என்றும், அதற்கு அங்கத்தினர்கள் எல்லோரும் கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டுமென்றும் கேட்டார்கள். ஒரு முனை விற்பனை வரியைப் பற்றி டாக்டர் லோகநாதன் அவர்கள் இந்த மாநிலத்தினுடைய விற்பனை வரியைப் பரிசீலனை செய்த பொழுது, "எல்லா வியாபாரிகளும் ஒரு முனை விற்பனை வரி வேண்டுமென்று கூறினுர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். அப்படிக் கூறியதற்குக் காரணம் பல முனை விற்பனை வரி இருக்கின்ற காரணத்தால் வரி மறைப்பு போன்ற காரியங்கள் நடக்கின்றன, ஆகவே, பலமுனை விற்பனை வரிக்கு பதிலாக ஒரு முனை விற்பனை வரி வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டார்கள் என்று அந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

10–00 a.m. லோகநாதன் அவர்கள் அறிக்கையில் ஒரு முனை விற்பனை வரி, பல முனை விற்பனை வரி என்று தர வாரியாகப் பிரித்து வைத்திருக்கிருர்கள். இப்போது எல்லாவற்றுக்குமே பலமுனை விற்பனை வரியாகக்கொண்டு வரப் போவதாக அமைச்சர் அவர்கள் கூறினுர்கள்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பல முனை விற்பனை வரியாகக் கொண்டு வரப் போவதாக நான் கூறவில்லை. இதைப் பற்றி அபிப்பிராயம் சொன்னுல் சர்க்கார் முடிவு செய்ய உதவியாக இருக்குமென்று தான் கூறினேன். சர்க்காரைப் பொறுத்த அளவில் ஒரு முனை விற்பனை வரியாக இருந்தாலும், பல முனை விற்பனை வரியாக இருந்தாலும் வருமானம் போதிய அளவு வந்து கொண்டிருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : கனம் அமைச்சர் அவர்கள் 20—2—65 அன்று சவுத் இந்தியன் சேம்பர் ஆப் காமர்சில் பேசும்போது ஒரு முனை விற்பனை வரியை "மல்டி பாயிண்ட் டாக்ஸ்" ஆகக் கொண்டு வரப் போவதாகக் கூறினுர்கள்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : **Sir, again I want to clarify the position.** நான் அவ்வாறு சொல்லவில்லை. நான் சொன்னதெல்லாம், இன்றைக்கு மக்கள் சமூகம் விரும்பினுல் இப்போது இருக்கிற திட்டத்தை மாற்றிக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்பதுதான். "அவர்கள் சொன்னுல் அல்ல; சட்டசபையில் பெருவாரியான அபிப்பிராயம் சொன்னுல் அதையொட்டி முடிவு செய்கிறேன்" என்று தான் சொன்னேன்.

திரு. து. ப. அழகமுத்து : எப்படியானுலும் அமைச்சர் அவர்களுக்கு அப்படி ஒரு விருப்பம் இருக்கிறது என்று தெரிகிறது. மேலும் இப்போது பேசும் போது 2 சதவிகிதமாக அந்த பலமுனை வரி இருக்கலாம் என்று கூறினுர்கள். இந்தியன் சேம்பர் ஆப் காமர்சில் பேசும்போது 1·5 சதவிகிதம் என்ற அளவிலே இருக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்திருப்பதாகப் பத்திரிகைகளில் பார்த்தேன். அவருக்கு அந்த மாதிரி பல முனை விற்பனை வரியாக மாற்றவேண்டுமென்று உத்தேசம் இல்லையென்ருல் நல்லதுதான். நாங்கள் பல முனை விற்பனை வரியை விரும்பவில்லை. மல்டி பாயிண்ட் டாக்ஸ் ஆக்கினுல் எப்படி டாக்ஸ் எவேஷனைச் சமாளிக்கப் போகிருர்கள் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சபைக்குச் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். இதைப் பற்றியெல்லாம் திரு. லோகநாதன் அறிக்கையில் மிக விரிவாகப் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது.

வரி ஏமாற்றுவோர்களைக் கண்டு பிடிக்கும் காரியத்தில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டார்கள். பல கேஸ்களைக் கண்டு பிடித்தார்கள். அதன் பிறகு வியாபாரிகள் தங்கள் கணக்கைத் தாங்களாகவே இன்ன தேதிக்குள்

20th March 1965] [திரு. து. ப. அழகமுத்து]

கொடுத்துவிட்டால் சர்க்கார் அதை ஏற்றுக்கொள்ளும் என்ற வகையிலே ஒரு கால வரையறையைக் கொடுத்தார்கள். இந்தக் காலவரைக்குள்ளாக வியாபாரிகள் அதிகமாக வந்து கணக்குகளைக் கொடுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் முன்பொரு கேள்விக்கு பதிலாக தெரிவித்தார்கள். அந்தக் காலவரையறை அந்த வியாபாரிகள் தங்களுடைய கணக்குகளை மேலும் மறைப்பதற்குத்தான் பயன்படுத்தப்பட்டது ; சர்க்கார் அதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுத்தது போல் ஆகாதா என்று கேட்க விரும்புகிறேன். ஹைகோர்ட் தீர்ப்பின் காரணமாக "ரெய்டு" செய்யும் முறை நிறுத்தப் பட்டு விட்டது. மேற்கொண்டு அப்பீல் செய்திருப்பதாகவும், தீர்ப்புக்குப் பிறகுதான் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித் திருக்கிறார்கள். இதிலே இன்னொன்றையும் சிந்தித்துப் பார்க்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். எவ்வளவு கேஸ்கள் பிடிக்கப்பட்டன, அதி லிருந்து வந்த வருமானம் எவ்வளவு, கேஸ்களைப் பிடிப்பதற்கு செய்யப்பட்ட செலவு எவ்வளவு என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வரி அதிமகாக ஏமாற்றப்படுவதைக் கண்டு பிடிக்க வேண்டு மென்பதை ஒப்புக் கொள்கிறோம். அதே சமயத்தில் சிக்கனத்தைக்கை யாள வேண்டுமென்பதையும் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நான் கேள்விப்பட்ட அளவில் வரிகள் ஏமாற்றப்படுவது கண்டுபிடிக்கப் பட்டதை விட, அதிகாரிகள் அதிகமாகச் செலவு செய்திருப்பதாகக் கூறு கிறார்கள். இவ்வாறு வியாபாரிகள்தான் கூறுகிறார்கள். இது உண்மை யாக இருந்தால் இதிலும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சினிமா டாக்ஸ் வசூல் செய்வதிலுள்ள குறைகளைக் கண்டுபிடிப்பதிலே அதிகாரிகள் திறமையாக நடந்துகொண்டு வருகிறார்கள். அது பாராட்டப்பட வேண்டிய ஒன்றுதான். அதே சமயத்தில் மேலும் அதிலே அக்கறை காட்ட வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

சவுத் இண்டியன் சேம்பர் ஆப் பிலிம்ஸ் சர்க்காரிடத்திலே ஒரு கோரிக்கையைக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அதிலே, எண்டர்டைன் மெண்ட் டாக்ஸ் சர்சார்ஜை எடுக்கவேண்டும் ; முழுவதும் எடுக்காவிட்டாலும் 25 சத விகிதமாவது குறைக்கவேண்டும் என்றும் ஷோ டாக்ஸ் சர்சார்ஜை நீக்க வேண்டும் என்றும் அப்படி நீக்காவிட்டால் தமிழ்ப்பட உற்பத்தி குறையும் தமிழ்ப்படம் மற்ற மொழிப் படங்களோடு போட்டி போட முடியாது என்ற கோரிக்கைகளை யெல்லாம் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அந்தத் தொழில் நன்றாக நடக்கவேண்டுமென்பதை உத்தேசித்து சர்க்கார் இதைப்பற்றி ஆலோசனை செய்வார்கள் என்று கருதுகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் ஒரிஸா பாராபடி லாட்டரிச் சீட்டுகள் விற்கப் பட்டன. அதைக் கொள்கை பூர்வமாக நிறுத்தவில்லை ; விற்பதற்கு அனு மதித்து விட்டார்கள். ஆயினும் நமது சர்க்காருக்கு வரியாக என்ன லாபம் கிடைத்தது என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட வேண்டும் மென்று நீண்ட நாட்களாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. ஆனால் சென்ற தடவை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது "குதிரைகள் நன்றாக வளர்க்கப்படுவதற்கு இந்தப் பந்தயங்கள் இருக்கவேண்டுயது அவசியம்" என்று கூறினார். இதிலே எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறதென்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. வருமானம் இருக்கிறது என்று சொன்னால் அதைப் புரிந்து கொள்ளலாம். குதிரைப் பந்தயத்தின் மூலமாக ஏழை மக்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அதோடு, அதை நடத்துகிற கம்பெனிக்காரர்களுக்கு சர்க்கார் வசூலிக்கிற வரியிலிருந்து 1 சதவீதம் கமிஷன் கொடுக்கிறது. இந்தக்கமிஷன் ஏன் கொடுக்கவேண்டும், எதற்காகக் கொடுக்கவேண்டுமென்று புரியவில்லை. அவர்கள் அந்த பந்தயத்திலும் லாபம் அடைகிறார்கள், சர்க்காரிடத்திலிருந் தும் லாபத்தை எதிர்பார்க்கிறார்கள். இந்தக் கமிஷனைக் கொடுக்க வேண் டாம் என்று கூறி, மறைக்கப்பட்ட வரிகளைக் கண்டு பிடிக்க அதிகாரிகள் மேலும் நல்ல முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறி என் னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[20th March 1965

***திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** கனம் சபாநாயக அவர்களே விற்பனை வரி மானியத்திலே என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன். இப்போது பல பண்டங்களை ஒரு முனை வரியிலிருந்து பல முனை வரிக்கு மாற்றவேண்டுமென்று வர்க்த்தக ஸ்தாபனங்களிடமிருந்து மனுக்கள் வந்திருப்பதாகக் கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவ்வாறு மாற்றுவதனால் உற்பத்தி செய்கிறவர்களுக்குத்தான் நன்மை ஏற்பட முடியுமே தவிர, சாதாரண சிறிய வியாபாரிகளுக்கு அதனால் நன்மை கிடைக்காது. ஆகவே, பல முனை விற்பனை வரியாக மாற்றாமல், இப்போது இருப்பது போலவே ஒரு முனை வரியாக இருப்பதுதான் நலம் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, மதுரையிலே, சுங்கிடி சேலை வியாபாரிகள் சங்கம் இருகிறது. அந்தச் சங்கத்தில் "ஆக்சுவல் யூசர்ஸ்" அவர்களுக்குத் தேவையான சாயப் பொருள்களை வரவழைத்து அவர்களுக்குள்ளாகவே பங்கிட்டுக் கொள்கிறார்கள். முதலில் வரவழைக்கப்படுகிற சாயப் பொருள்களுக்கு விற்பனை வரி கொடுக்கப்படுகிறது. சங்கத்தில் இருக்கின்ற ஒவ்வொரு அங்கத்தினரும் அதைப் பிரித்துக் கொள்கின்றபோது கூட விற்பனை வரி கொடுக்க வேண்டுமென்று கூறுவது அவர்களுக்கு மிகவும் பாதகத்தை விளைவிக்கும். ஆரம்பத்தில் சாயப் பொருள் வேண்டுமென்று கேட்டபோது, அமைச்சர் அவர்கள் "ஒவ்வொருவரும் தனித்தனியாகக் கேட்காமல் ஒரு சங்கமாக அமைத்து மொத்தமாகக் கேட்டால் வரவழைத்துக் கொடுக்க முடியும்" என்று சொன்னார்கள். அதற்கு ஒப்ப சங்கத்தை அமைத்து கேட்ட போது சாயத்தைக் வாவழைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதைப் பிரித்துக் கொள்ளும்போது மறுபடியும் விற்பனை வரி விதிப்பது நலமாக இருக்காது என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் அதனைப் பரிசீலித்து விற்பனை வரியிலிருந்து விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சில பொருள்களுக்கு எக்ஸைஸ் வரி இருந்தால் விற்பனை வரி கிடையாது என்று கூறப்படுகிறது. இப்போது தீப்பெட்டி போன்றவற்றை அடுத்த மாகாணத்தில் டெப்போ வைத்து விற்பனை செய்கிறார்கள். தீப்பெட்டி போன்ற பொருள்களுக்கும் இப்போது விற்பனை வரி கொடுக்கவேண்டுமென்று கூறப்படுகிறது. அது முறையல்ல , அவற்றுக்கு எக்ஸைஸ் வரி விதிக்கப்படுகிறது ; அவைகளுக்கும் விற்பனை வரியிலிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

இந்த விற்பனை வரியானது நம் அரசாங்கத்திற்கு நல்ல வருமானத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு வரி. அது இல்லை என்று யாரும் சொல்லமுடியாது. நமக்கு அது மிகவும் அனுகூலமாக இருக்கிறது. அப்படியிருந்தாலும் கூட விற்பனை வரியை வசூல் செய்வதில் பல சங்கடங்களை உண்டாக்குகிறார்கள் விற்பனை வரி அதிகாரிகள். அவற்றை நீக்க வேண்டுமென்று ஒவ்வொரு சட்ட சபைக் கூட்டத்திலும் நான் சொல்லி வருகிறேன். சிறு சிறு வர்த்தகர்கள், சிறிய சிறிய வருமானம் பெறக் கூடியவர்கள் இவர்களிடமிருந்து விற்பனை வரி வசூல் செய்யும்போது அதிகாரிகள் நல்லமுறையில், ஒழுங்கான முறையில் அவர்களை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது விற்பனை வரிக்கு டிமிக்கி கொடுப்பவர்களை அல்லது கள்ளக் கணக்கு ஒளித்து வைத்திருப்பவர்களை ரெயிட் செய்கிறார்கள், சோதனை போடுகிறார்கள். அதை யாரும் வேண்டாம் என்று கூற முடியாது. யார் யார் விற்பனை வரிக்கு டிமிக்கி கொடுக்கிறார்களோ அவர்களை நன்கு கண்காணித்து அவர்கள் கணக்குகளை சோதனை செய்து, பரிசீலித்து அவர்கள் தவறு செய்திருப்பார்களேயானால் அந்த வரியை விதிக்க வேண்டியதுதான், எடுக்க வேண்டியதுதான். ஆனால் இந்த சுதந்திர நாட்டிலே எல்லோரும் மானத்துடன் வாழ விரும்புகிறார்கள். அப்படி விரும்பும்போது இந்த ரெயிட் செய்யும் முறை இருக்கிறதே அது வியாபாரிகளை முறையாக வாழ வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கு மிகவும் அவமானத்தைக் கொடுக்கும் முறையில் இருக்கிற காரணத்தினால் வேறு எந்த முறையிலாவது நல்லமுறையில் வசூல் செய்வதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டு

20th March 1965] [திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்

மென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு மாதர் சங்கங்கள் போன்ற வை தயாரித்த பண்டங்களுக்கு விற்பனைவரியிலிருந்து விதி விலக்கு அளித் திருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள். அதற்காக அவர்களுக்கு என் நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற ஆண்டே சொல்லியிருக்கிறேன். ட்ருவலிங் பெட்ஸ் கைத்திறியில் நெசவு செய்யப்பட்டு விற்கிற ஒரு பொருள். அதற்கு விற்பனை வரி விதிக்கப்படுகிறது. சென்ற ஆண்டு அதற்கு 2 சதவீதம் தில் இருந்து 1 சதவீதம் ஆக குறைத்தார்கள். அந்த 1 சதவீதத்தை யையும் எடுத்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் சொல்லும்போது சுப்ரீம் கோர்டு தீர்ப்புப்படி விற்பனை வரிக்கும் சேர்த்து விற்பனை வரி விதிக்கப்பட வேண்டும் என்ற தீர்ப்பையொட்டி வசூல் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆனால் அதை மறுபடியும் திருத் திக் கொண்டோம். 1965-ல் இருந்து அதை நிறைவேற்றுவதற்காக அதற்காக ஒரு சட்டம் கொண்டு வர ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று கூறி னார்கள். அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெ னில் விற்பனை வரிக்கும் வரி என்று சொல்வது மிகவும் அநியாயம் என்று தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனக்கு முன் பேசிய அங்கத் தினர் அவர்கள் குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிட வேண்டுமென்றெல்லாம் கூறினார்கள். கேளிக்கை வரியில் மிக அதிகமான வரி கிடைப்பது இந்தக் குதிரைப் பந்தயத்தில் இருந்துதான். மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். அதை இப்போது எடுக்க வேண்டுமென்று பல அங்கத்தினர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதை ஒழித்துவிட்டால் மறுபடியும் அதை வைக்க வேண்டுமென்று கூறுகிற அங்கத்தினர்களும் இருப்பார்கள். ஆகவே குதிரைப் பந்தயத்தை எடுக்க வேண்டியதில்லை. அது தொடர்ந்து இருக்கலாம். அதை தொடர்ந்து நடத்தலாம். தவறாகச் சென்று கஷ்டப் படுகிறவர்கள் அதை உணர்ந்து கொண்டு அதற்கு செல்லாமல் இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதிலிருந்து நமக்கு அதிக வருமானம் வருவதால் குதிரைப் பந்தயம் இருக்கலாம் என்று தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. வை. சங்கரன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விற்பனை வரிச் சட்டம், இந்தத் துறை நன்கு வளர்ந்து வருகிறது. நாட்டில் இன்று தொழில் அதிகமாக வளர்ந்திருக்கிறது, வர்த்தகம் அதிகமாக வளர்ந்திருக் கிறது. அதற்கு ஒரு அளவுகோல் இந்த விற்பனை வரி அதிகமாகியிருப்பது தான். நாம் அதுபற்றி பெருமைப் படவேண்டும். சேல்ஸ் டாக்ஸ் எவ்வளவு வருகிறது என்பதிலிருந்து வர்த்தகம் எவ்வளவு பெருகியிருக்கிறது என்று கூற முடியும். 1959–60-ல் இருந்ததை விட இன்று இந்த வரி இரண்டு மடங்கு அதிகமாக பெருகியிருக்கிறது. ஆகவே தொழிலும் இந்த நாட்டில் பெருகி வளர்ந்திருக்கிறது என்பது இதிலிருந்து தெரிய வரும். 12 கோடி ரூபாய் இருந்ததை இந்த ஏழு ஆண்டுகளுக்குள்ளாக அதை இரண்டு மடங்கிற்கு அதிகமாக தேடித் தந்திருக்கும் இவ்விலாகா பிரதம அதிகாரி களை நாம் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். சில ஆண்டுகளுக்கு முன்பாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள், நம் ராஜ்யத்தில் விற்பனை வரி 14 கோடிக்கு அஷ்யூரன்ஸ் கொடுத்தால் போதும் என்று சொன்னார்கள். அதை நான் "பின்" செய்ய விரும்பவில்லை. 14 அல்லது 15 கோடி என்று நிறுத்திவிட முடியாது. ஆனால் இந்த சமயத்தில் ஒரு சில கன்ஸஷன்ஸ் கொடுப்பது அல்லது விகிதாசாரத்தை சிறிது குறைக்கலாம். 25 கோடி ரூபாய் வரை ஜெனரல் சேல்ஸ் டாக்ஸிலிருந்து கிடைக்கிறது. இது தவிர சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ், எக்ஸைஸ் போன்றவைகளைச் சேர்த்தால் 35 கோடி ரூபாய்க்குமேல் வரும் ஆகவே இப்போது ஓரளவு ரிலீப் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். கம்பைன்ட் சேம்பர் ஆப் காமேர்ஸ் மல்டி பாயின்ட் டாக்ஸ் இருந்தால் போதும் என்று சொல்லுகிறார்கள். நானும் பல தடவை வற்புறுத்தியிருக்கிறேன். கூடுமான வரை சிங்கிள் பாயின்ட் ஆக மாற்ற வேண்டுமென்று வர்த்தக சமூகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நானும் அதை வற்புறுத்தியிருக்கிறேன். நடைமுறையில் வர்த்தகர்களுக்கு இதனால் பாதகம் ஏற்படுகிறது. ஆகவே இதை மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்க முன்வந்திருக்கிறார்கள். கூடுமான வரையில் லக்ஷுவரி குட்ஸ் தவிர மற்றவைகளுக்கு மல்டி பாயின்டாக மாற்ற வேண்டுமென்று சொல்லி

இருக்கிறார்கள். அதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டில் இருந்து $1\frac{1}{2}$ சதவீதம் ஆக ஆக்க முடியுமா என்றும் பார்க்க வேண்டும். திரு. அழகமுத்து அவர்கள் பேசும்போது "ரப்பிங் ஆன் தி ராங்க் ஸைட்" என்றார்கள். அமைச்சர் அவர்களை வேண்டிக் கொண்டால் அவர்கள் இணங்குவார்கள், அவர்கள் பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். ஆகவே இதற்கு மாட்டேன் என்று சொல்ல மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே இதை $1\frac{1}{2}$ சதவீதம் ஆக மாற்றலாம். அப்படிச் செய்வதினால் எவேஷன் கூட குறைந்து விடும். ரேட்டைக் குறைக்கும்போது எவேடிங் டெண்டன்ஸி குறைந்துவிடும். ஆகவே இது பற்றி பரிசீலித்து முடிவு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். லக்ஷுவரி குட்ஸ் சம்பந்தமாக ஸிங்கிள் பாயின்ட் என்று போடப்பட்டிருக்கிறது, ஒரு பாலிஸியாக. ஆனால் நாம் போடுவது மற்ற ராஜ்யங்களோடு இணைந்திருக்க வேண்டும். அடுத்த ராஜ்யங்களில் 6 சதவீதம் என்றிருக்கும்போது இங்கு 7 சதவீதம் என்றிருந்தால் அங்கிருந்து உற்பத்தியாகி இங்கு கொண்டு வந்து டம்ப் செய்து அதனால் நம் இண்டஸ்ட்ரீஸ் நசித்துப் போகக் கூடிய நிலை ஏற்படும். ஆகவே பாலிஸியாக இருந்தாலும்கூட அண்டை ராஜ்யங்களில் இருக்கக் கூடிய விகிதாசாரம் என்ன என்று பார்த்து அந்த அளவில் இங்கும் அமைக்கவேண்டும். இப்போது எக்ஸெம்ஷன்ஸ் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். பருப்பு வகைகள், புட் க்ரெயின்ஸ் இவற்றிற்கு எக்ஸெம்ஷன் கொடுக்கமுடியுமா என்று பரிசீலிக்க வேண்டும். பருப்பு இல்லாவிட்டாலும், அரிசி நெல் போன்றவைகளுக்கும் பாலுக்கும், வறுகடலை, பட்டாணி போன்ற ஏழை மக்கள் உபயோகிக்கும் உணவுப் பொருள்களுக்கும் விலக்கு அளிக்க வேண்டும். இதனால் ஒரு சில லட்சம் ரூபாய்தான் குறையும். ஆனால் அது நல்லதொரு "ஜெஸ்ச்சர்" ஆக இருக்கும். ஏனென்றால் இவை அன்றாடம் வாங்கி சாப்பிடும் பொருட்களாக இருக்கிறது, ஆகவே இதற்கு விதிவிலக்கு கொடுத்தால் பலரும் இதை வரவேற்பார்கள் என்பதை வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ரெடிமேட் கார்மெண்ட்டுக்கு டாக்ஸ் கொடுத்து வாங்கிய துணியை உபயோகித்துத்தான் கார்மெண்ட் தயார் செய்திருக்கிறார்கள். இதற்கு குறைந்த அளவில் தான் மார்ஜின் பிராஃபிட் வைக்கிறார்கள். ஏற்கனவே இவர்கள் துணிக்கு எக்ஸைஸ் ட்யூடி கொடுத்து வாங்குகிறார்கள். அதற்கு மேல் ஒரு சதாமானம் என்று போட்டிருப்பதால் அவர்களுக்கு கஷ்டம்தான் ஏற்படும். ஆகவே இதையும் எடுத்துவிட்டால் நலமாக இருக்கும்.

அடுத்தபடியாக, இப்போது சேல்ஸ் டாக்ஸ் கொடுக்கவேண்டும் என்பதில் லோயர் லிமிட்டேஷன் 10 ஆயிரம் ரூபாய் என்று வைத்திருக்கிறோம். இவ்விதம் டாக்ஸ் காம்பௌண்ட் செய்து கொள்ளலாம் என்று சொல்வதற்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற அளவு அதாவது 10 ஆயிரம் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை என்று வைத்திருப்பவர்களை கணக்கிட்டால் 32 ஆயிரம் கேஸ்கள் தான் வருகின்றன. ஆகவே இப்போது 10 ஆயிரம் ரூபாய் என்றிருப்பதை 25 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்திவிட்டால் பலருக்கு லாபகரமாக இருக்கும். இதையும் சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கின்ற நிலைமைக்கு ஏற்ப 10 ஆயிரம் என்றிருப்பதை 25 ஆயிரம் என்று வைத்துவிட்டால் இதற்குள் இருப்பவர்களிடமிருந்து டாக்ஸ் வாங்க வேண்டிய நிலைமை ஏற்படாது, இதனால் பலர் அனுகூலம் அடைவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மல்டி பர்ப்பஸ் என்ற வகையில் இருக்கின்ற பல பொருட்கள்க்கு பலவிதத்தில் வரி வசூல் செய்யப்படுகிறது. காண்டுட் பைப்பால், பேரிங்ஸ், வுடன் ப்ளக்ஸ் இவைகளை எல்லாம் எடுத்துக் கொண்டால் இதை சாதாரண ஜென்ரல் மெர்ச்சண்ட் விற்கும் போது 6 சதவீதம் என்றிருக்கிறது, இதையே ஆட்டோமாபைல் டீலர்ஸ் விற்றால் 10 சதவீதம் என்றிருக்கிறது. ஒரே சாமானுக்கு யார் யார் விற்கிறார்கள் என்பதைப் பொறுத்து டாக்ஸ் இருக்கிறது. இதனால்

20th March 1965] [திரு. வை. சங்கரன்]

பல சிக்கல்கள் வருகின்றன. இனிமேல் எல்லாவற்றுக்கும் சேர்த்து 2 சதவீதம் என்று வைத்துவிட்டால் நல்லது. அப்போது இம்மாதிரியான சிக்கல்கள் வராது என்று நம்புகிறேன்.

அடுத்தப்படியாக, சேல்ஸ் டாக்ஸ் ஆபீஸ் இருக்கும் இடங்களை எடுத்துக்கொண்டால் மதுரை போன்ற இடங்களில் இந்த டாக்ஸ் சம்பந்தமான ஆபீஸ்கள் எல்லாம் ஒரே இடத்தில் இல்லாமல் பல இடங்களிலும் இருப்பதால் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படு கின்றன. இந்த இலாகா மூலம் அரசாங்கத்திற்கு பெருவாரியான அளவில் வருமானம் வருகிறது. பல சர்க்கிள் ஆபீஸ்களும் பல இடங்களில் இருக்கின்றன. அதிலும் இருக்கின்ற ஆபீஸ்கள் எல்லாம் வாடகை கட்டிடங்களில் இருக்கின்றன. இன்றைக்கு இருக்கின்ற இடத்திலிருந்து திடிரென்று நாளைக்கு வேறொரு இடத்திற்கு மாற்றிவிடுவார்கள். அதோடு பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை வாடகையாகவும் கொடுத்து கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் சேர்த்து ஒரே இடத்தில் ஆபீஸை ஏற்படுத்தவேண்டும் என்று எண்ணி, ஒரு இடத்தை முன்னால் நிச்சயித்திருந்தார்கள், இப்போது அது கான்ஸல் ஆகிவிட்டதாக தெரிகிறது. இந்த கஷ்டங்களை எல்லாம் போக்குகின்ற வகையில் மதுரையில் ஒரு மல்டி ஸ்டோரிஸ் கட்டிடம் ஒன்று கட்டி, அதில் சேல்ஸ் டாக்ஸ் சம்பந்தமான எல்லா ஆபீஸ்களையும் வைத்துவிட்டால் மிகவும் வசதியாக இருக்கும். அதிகாரிகளுக்கும் வசதி, அஸெஸிகளுக்கும் சௌகரியமாக இருக்கும். இப்போது பல தனிப்பட்ட வீடுகளில் ஆபீஸ்களை வைத்திருப்பதால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே இதை போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் முக்கியமாக இருக்கின்ற பிரச்னை கனம் அமைச்சர் அவர்களிடத்தில் முன்னமேயே சொல்லியிருக்கிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே சொல்லியிருக்கிறேன். அதாவது ஸேல்ஸ் டாக்ஸ் வாங்கிக்கொண்டிருந்த பல பொருட்களுக்கு அதை நிறுத்தி விட்டு அடிஷனல் எக்ஸைஸ் ட்யூடி போட்டு நாம் அதற்குரிய பங்கை பெற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் இது எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்றால் 56-57-ல் இருந்த நிலைமையை அடிப்படை யாக வைத்துக் கொண்டு கொடுக்கப்படுகிறது. 1956-57-ல் 2 கோடி 85 லட்சம் என்று கொடுக்கப்பட்டது. இப்போது 4 கோடி ரூபாய் அளவுக்கு கொடுக்கிறார்கள். நாம் சேல்ஸ் டாக்ஸ் வாங்கிக் கொண்டிருந்த சில சாமான்களுக்கு அடிஷனல் எக்ஸைஸ் ட்யூடி போட்டு சென்ட்ரல் கெவர்ன்மெண்ட் வசூல் செய்து கொடுத்து விடும், நமக்கு வசூல் செய்யவேண்டிய வேலை இல்லை என்ற காரணத்தால் தான் இவ்விதம் கொடுக்கப்பட்டது. ஆனால் இப்போ துள்ள நிலைமையை எடுத்துக்கொண்டால் வரியிலிருந்து கிடைக்கின்ற வருமானம் இரண்டு மடங்காக ஆகியிருக்கிறது. அந்த நிலைமையை வைத்துக்கொண்டு பார்க்கும்போது, 56-57 ல் 2 கோடி 85 லட்சம் என்றிருந்தால் இன்றைக்கு 6 கோடி ரூபாயாவது சேல்ஸ்டாக்ஸ் மூலம் வரக்கூடும். நாமே வைத்துக்கொண்டிருந்தால் இந்த சாமான்களிலிருந்து 6 கோடி ரூபாய் நமக்கு கிடைத்திருக்கும். ஆனால் சென்ட்ரல் கெவர்ன்மென்டிலிருந்து இதற்காக இப்போது நமக்கு கிடைப்பது 4 கோடி ரூபாய் தான். இதன் மூலமாக நமக்கு இழப்பு 2 கோடி ரூபாய். ஒரு வேளை சிரமத்தைப் பார்க்காமல் நாமே வைத்துக்கொண்டிருந்தால் இந்த இழப்பு நமக்கு ஏற்படாது. இந்த இரண்டு கோடி ரூபாயும் நம்முடைய கஜானுவுக்கு வந்து சேரும். இப்போது இரண்டு கோடி ரூபாய் நமக்கு நஷ்டம். இதைப்பற்றி நான் இரண்டு வருடங்களுக்கு முன்பே சொன்னேன். அதை அமைச்சர் அவர்களும் ஒத்துக்கொண்டதாக ஞாபகம். ஆகவே இதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாக, சேல்ஸ் டாக்ஸ் அட்வெசரி கமிட்டிக்கு கலக்டர் தலைவராக இருக்கிறார். கலக்டருக்கு எத்தனையோ வேலைகள் இருக்கின்றன. இதன் காரணமாக பல நாட்களில் இந்தக் கமிட்டிக் கூட்டமே நடைபெறுவதற்கு வசதியில்லாமல் போய்விடுகிறது. பல சமயங்களில் தள்ளி வைக்கின்ற நிலைமையும் பார்க்கிறோம். ஆகவே, இந்தக் கமிட்டிக்கு கலெக்டர் தலைவராக இருப்பதற்கு பதிலாக சேல்ஸ் டாக்ஸ் டெப்யுடி கமிஷனர் அவர்களையே சேர்மெனாக போடுவது நல்லது. ரயில்வேயை எடுத்துக்கொண்டால், டெப்யுடி சூப்ரன்டண்ட் ஆஃப் ரயில்வேஸ் தான் அட்வைஸரி சேர்மெனாக இருக்கிறார். அந்தந்த இலாகாக்களிலுள்ள அதிகாரிகள்தான் கலெக்டர்களை விட சேர்மன்னாக இருப்பதற்கு பொருத்தமானவர்கள். கலெக்டர் பல அலுவல்களுக்கு போகவேண்டி யிருக்கிறது. இதற்கென்று இலாகா அதிகாரிகளைப் போட்டால் விவரங்களை எல்லாம் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். வேண்டுமென்றால் கூட்டங்களுக்கு பல இடங்களுக்கு போய்விட்டு வரலாம். அதில் பெரிய தவறு ஒன்றும் ஏற்பட்டுவிடாது. இதையும் அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, "க்ரிவன்ஸஸ் டே" என்று இப்போது கலக்டர்கள் வைத்திருப்பதுபோல், இந்த இலாகாவிலும் வைத்துவிட்டால் நல்லது. கலெக்டர் அவர்கள் இப்போது இம்மாதிரி க்ரிவன்ஸஸ் டே. என்று வைத்து போதுமக்கள் தங்கள் குறைகளை வந்து சொல்வதால், கலெக்டர் அவர்கள் கேட்கிறார்கள், இதன் மீது எடுக்கப்படுகின்ற நடவடிக்கை எப்படியிருந்தாலும், ஏதோ கலெக்டர் கேட்டார் என்ற ஆறுதல் மக்களுக்கு இருக்கும். அதோடு சில இடங்களில் சுறுசுறுப்பாக வேலையும் நடக்கிறது. அதேபோன்று கமர்ஷியல் டாக்ஸ் சம்பந்தமாகவும் இருக்கின்ற குறைபாடுகளை சொல்வதற்கும் அஸெஸ்மென்ட்டில் இருக்கின்ற தொந்தரவுகள், கஷ்டங்கள் இவைகளை எல்லாம் எடுத்துச்சொல்வதற்கு வசதியாக மாதத்திற்கு ஒரு முறை "க்ரிவன்ஸஸ் டே" என்று வைத்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், "டாக்ஸ் ஆன் டாக்ஸ்" என்று வைத்திருப்பது சரியாக இல்லை, டாக்ஸ் கொடுத்து அதற்கு மேலும் டாக்ஸ் என்று போடுவது சரியாக இராது. இதனால் வியாபாரிகளுக்கு சாமான்களை வாங்கி விற்கும் போது பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே இதையும் மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நல்ல முறையில் இந்தத் துறையில் பல அனுகூலங்களையும் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சபாநாயகர் அவர்களே, விற்பனை வரி இலாகா மான்யத்தில் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு புலவர் கோவிந்தன் அவர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுப்பிரேரேணையை வற்புறுத்துகின்ற வகையில் என்னுடைய சில கருத்துக்களை கூறலாம் என்று கருதுகிறேன். இந்த இலாகா மான்யத்தை கொண்டுவரும்போது அதை முன்மொழிந்து பேசிய அமைச்சர் அவர்கள் இந்த இலாகாவில் இருக்கின்ற நிலைமைகளை விளக்கி காட்டினார்கள். இவைகளை கூறிவிட்டு, இப்போது இருக்கின்ற முறை வேண்டுமா, அல்லது பல கட்ட விற்பனை வரி முறை வேண்டுமா என்றெல்லாம் கேட்டார்கள். இதிலே பல சிக்கலான பிரச்னைகள் இருக்கின்றன. அந்தப் பிரசனைகளை எல்லாம் ஆர அமர யோசனை செய்து விற்பனை வரி செலுத்துகின்ற பல்வேறுபட்ட வியாபாரிகளை கலந்து கொண்டு இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல கட்ட விற்பனை வரியை நீக்கிவிட்டு, ஒரு முனை

20th March 1965] [திரு வெ. கிருஷ்ணமூர்த்தி]

விற்பனை வரியை கொண்டுவரவேண்டும் என்று முன்னால் வியாபாரிகள் எல்லாம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்கள். சட்ட மன்றத்திலும் நாங்கள் எடுத்துச் சொன்னோம். காரணம், பலகட்ட விற்பனை வரியை ஒரு சதவிகிதம் என்று போட்டால் கூட ஒரு பொருளானது ஆரம்பத்தில் ஒரு வியாபாரியிடத்திலிருந்து கை மாறி கன்ஸூமர் கைக்கு வரும்போது 4 சதவீதம், 5 சதவீதம் என்று ஏழெட்டு வியாபாரிகளிடத்தில் போய் பெருகிவிடுகிறது. இவ்விதம் ஏழெட்டு வியாயாரிகளிடத்தில் போகும்போதும் ஒவ்வொருவரிடத்திலும் ஒரு பெர்சன்ட் என்று போடும் போது, கடைசியில் கன்ஸூமர் கையில் வரும்போது ஒரு பொருளுக்கு 8 சதவீதம் அல்லது 9 சதவீதம் என்றாகிவிடுகிறது. இவ்விதமாக உபயோகிக்கின்றவர்களுக்கு இந்த வரிமுறையானது பாதகமாக இருக்கிறது. ஆகவே இந்த பலகட்ட விற்பனை வரி தேவையில்லை என்று எடுத்துச்சொன்னோம். அதைப் போலவே வியாபாரிகளும் எடுத்துச்சொன்னார்கள். பலமுனை விற்பனை வரி வைத்து இருப்பதின் மூலம் பல கணக்குகளை எழுதவேண்டி யிருக்கிறது. கொள்முதல் கணக்கு எழுதவேண்டும், விற்பனை கணக்கு எழுத வேண்டும், சிட்டா எழுத வேண்டும், இப்படியாக பல கணக்குகள் எழுத வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அதோடு ஏதாவது கணக்குகள் எழுதவில்லை என்றால் அதிகாரிகள் வந்து தொந்தரவு கொடுத்து, கணக்கு எழுதவில்லை என்று சொல்லி அபராதம் போட்டுவிடுகிறார்கள். ஆகவே எங்களுக்கு பலமுனை விற்பனை வரி முறை தேவையில்லை என்று வியாபாரிகளும் எடுத்துச் சொன்னார்கள்.

இப்போது வியாபார சங்கத்தினரால்—சேம்பர் ஆஃப் காமர்ஸால்—பல கட்ட விற்பனை வரி வேண்டுமென்று சொல்லப்பட்டாலும் கூட அதைப் பற்றி வியாபாரிகளிடத்திலே கருத்து வேற்றுமை இருக்கிறது. வியாபாரத் திலே சின்னஞ்சிறு வியாபாரிகள் இருக்கிறார்கள், பெரிய எஸ்டாப்ளிஷ்ட் ட்ரேடர்ஸ் இருக்கிறார்கள். சிறு வியாபாரிகள் சரியாகக் கணக்கு எழுதுவது கிடையாது. பெரிய பெரிய வியாபாரிகள், எஸ்டாப்ளிஷ்ட் ட்ரேடர்ஸ், சுந்த ரம் மோட்டார்ஸ் போல எஸ்டாப்ளிஷ்ட் கன்ஸர்ன்ஸ் வைத்திருக்கிறவர்கள் ஒரு ரூபாய்க்கு விற்றால் கூட விற்பனை வரியில் கணக்கு எழுதி விடுகிறார் 10–30 a.m.
கள். அவர்களுக்கு ஒரு கட்ட விற்பனை வரியினால் பாதகமாகத் தான் இருக்கும். சிறு வியாபாரிகளாக இருந்தால், 50,000 டர்னோவர் என்று வைத்து விடுகிறார்கள். 2 சதவீதம் என்று வரி போட்டு, 1,000 ரூபாய் தொகையைக் கட்டி விட்டு வியாபாரம் செய்கிறார்கள். அந்த முறையில் கட்டி விட்டு கணக்கு எழுதாமலேயே வியாபாரம் செய்ய முடிகிறது. ஆகையால் சிறு வியாபாரிகள் ஒரு கட்ட விற்பனை வரியை ஆதரிக்கிறார்கள், பல கட்ட விற்பனை வரியை ஆதரிக்கவில்லை. இது அவர்களுக்குச் சாதக மாக இருக்கிறது. பெரிய வியாபாரிகளைப் பொறுத்த வரையில் ஒரு கட்ட வரியை ஆதரிக்கவில்லை, பல கட்ட வரியை ஆதரிக்கிறார்கள். ஏனென்றால் அது அவர்களுக்குச் சாதகமாக இருக்கும். அதோடு மட்டுமல்ல, நம் அரசாங்கத்தின் வருவாயைப் பொறுத்த வரையில் ஒரு கட்ட விற்பனை வரி போட்டதற்குப் பிறகு வருமானம் கூடியிருக்கிறது. ஏற்கெனவே 15 கோடி அல்லது 16 கோடியாக இருந்தது, 1961–62-ல் 21 கோடியாக உயர்ந்து, 27 கோடி ரூபாய் 1963–64-ல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது என்றால், வருவாய் துறையைப் பொறுத்த வரையில் இது லாபக் கணக்குத் தான், நஷ்டக் கணக்கு அல்ல. அதோடு மட்டுமல்ல, கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அடிக்கடி கணக்குகளைப் பரிசோதிப்பதன் காரணமாக 6—7 கோடி ரூபாய் அதிகமாகக் கிடைக்கிறது என்று சொன்னார்கள். ஒரு கட்ட விற்பனை வரி இருப்பது அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் நல்ல லாபகரமானது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல கட்ட விற்பனை வரி கொண்டு வந்தால், பல வழிகளில் அரசாங்கத்திற்கு வர வேண்டிய வருவாய் சரியாக வராது. வரக் கூடிய வருவாய் குறைந்து விடும். பல கள்ளக் கணக்குகளை எழுதுவதற்கும், அதிகார வர்க்கத் தினருடைய தவறான போக்குகளுக்கு வழிகாட்டி, வழி வகுத்துக் கொடுத் தது போல ஆகும். இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து நடவடிக்கை

எடுக்கவேண்டும். தனிப்பட்ட முறையில் சொல்ல வேண்டுமென்ருல், என்னைப் பொறுத்த வரையில் ஒரு கட்ட வரியே சாலச் சிறந்தது, அதையே வைத்துக்கொள்ளலாம். அல்லது அதை மாற்றவேண்டுமென்ருல், இப்போது அதை மாற்றவேண்டுமென்று சேம்பர் ஆஃப் காமர்ஸ் மட்டும் சொல்லுகிருர்கள், அதை வைத்துச் செய்யவேண்டாம். மாவட்ட வாரியாக வியாபாரிகளை அழைத்து கான்ஃபரன்ஸ் கூட்டலாம். மாவட்டத்திலுள்ள வியாபாரிகள், மளிகைக் கடைக்காரர்கள், ஷாப்காரர்கள் எல்லோரையும் அழைத்து, ஆலோசனை செய்து அவர்கள் எல்லோரும் விரும்பிஞல், அரசாங்கத்திற்கு வருவாய் குறையாது என்று தெரிந்தால், அப்போது ஒத்துக்கொள்ளலாம். அப்படியில்லாமல் உடனடியாக இதை மாற்றுவது சாலச் சிறந்ததல்ல என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம் அரசாங்கம் வியாபாரிகளுடைய கணக்குகளைப் பரிசோதிப்பதில் எடுத்துக்கொண்டுள்ள முயற்சிகளைப் பொறுத்த வரையில் அது வியாபாரிகளுடைய ஃபண்டமெண்ட்டல் ரைட்ஸை பாதிப்பதாக இருக்கிறது, அந்த மாதிரிச் செய்ய அரசாங்கத்திற்கு உரிமை இல்லை என்று உயர் நீதி மன்றத்திலே கொடுத்த தீர்ப்புக்கு மேல் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்ய நேற்றைய தினம் லீவ் கிடைத்திருக்கிறது, அப்பீல் செய்யப் போகிருேம் என்று சொல்லியிருக்கிருர்கள். இதற்கு இடையில் வேண்டுமாஞல் சட்டத்தைத் திருத்தலாம் என்றும் சொல்லியிருக்கிருர்கள். அதை நான் வரவேற்கிறேன். காரணம் 6—7 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வரக் கூடிய வருமானத்தை வசூலித்துத்தான் தீரவேண்டும். அவர்கள் ஒரு கணக்கை வைத்துக்கொள்ளுகிருர்கள் என்ருல் வைத்துக் கொள்ளட்டும். வாங்குகிற வரியை அரசாங்கத்திற்குச் செலுத்தித்தான் தீர வேண்டும். அரசாங்கத்திற்கு டிமிக்கி கொடுக்கிருர்கள் என்ருல் அதை விட்டுக் கொடுக்க நாங்கள் கூடத் தயாராக இல்லை என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்லிக்கொள்கிறேன். இதைப் பரிசீலித்துத்தான் தீரவேண்டும். அதற்காகச் சட்டத் திருத்தம் கொண்டு வருவார்களாஞல் அதை ஆதரிக்க நாங்கள் தயாராக இருக்கிருேம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆஞல் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நம் வருமானத்தில் அதிக அளவு கொடுக்கின்றவர்கள் வியாபாரிகள். இந்த ஆண்டிலே 27 கோடி ரூபாய் அவர்கள் கொடுத்திருக்கிருர்கள். அரசாங்கத்தின் கணக்குப் பிரகாரம் 30 கோடி ரூபாய் அளவுக்குக் கொடுக்க இருக்கிருர்கள். அவர்களுக்கு அளிக்கப்படுகிற ட்ரீட்மெண்ட் இருக்கிறதே அதைப் பற்றி வியாபாரிகள் சொல்லுவதைப் பார்த்தால் கஷ்டமாக இருக்கிறது. அவர்கள் வரியைக் கொடுக்கிருர்கள் என்ற முறையில் அவர்களை நல்ல முறையில் அனுசரிக்கலாம். திடீரென்று இரவு 12 மணிக்குப் போய்க் கதவைத் தட்டி, படுத்துக் கொண்டிருப்பவரை எழுப்பி, படுக்கை அறைக்குப் போய், பூஜை அறைக்குப் போய் கணக்குப் புத்தகங்களை எடு என்று சொல்லுகின்ற நிலை வந்திருக்கிற காரணத்திஞல் வியாபாரத்தைக் கூட மூடி விட்டு சும்மா இருக்கக் கூடிய அளவுக்கு வந்திருக்கிருர்கள். இதை ஏதாவது ஸயண்டிஃபிக்காகச் செய்ய முடியாதா என்று பார்க்க வேண்டும். இன்றைக்கு 30 கோடி ரூபாய் வருகிறது. அடுத்த ஆண்டு 35 கோடி ரூபாய் வந்தால் ராஜ்ய சர்க்காரின் நிதி நிலைமைக்குப் போதுமானதாக இருக்கும் என்ருல் ஒரு கன்ஸர்ன் இந்த ஆண்டு 1,500 ரூபாய் கொடுக்கிருர்கள் என்ருல், அடுத்த ஆண்டு 1,800 ரூபாய் கொடுங்கள் என்று கம்பவுண்ட் செய்யலாம், அல்லது 2,000 ரூபாய் கொடுங்கள் என்று சொல்லலாம். அவர்கள் டர்ஞேவர் காட்டவேண்டியதில்லை என்று சொல்லிவிடலாம். அந்த முறையில் இருந்தால், அவர்களுக்கு டர்ஞேவரும் கூடும், வியாபாரமும் நல்ல முறையில் நடக்கும், அவர்களுக்கும் தொந்தரவு இல்லை, அரசாங்கத்திற்கும் வரவேண்டியது வந்து விடும். சில சமயங்களில் பத்திரிக்கைகளில் வருகின்ற ரிப்போர்ட்ஸைப் பார்த்தால் பயங்கரமாக இருக்கிறது. திருடர்களைப் பிடிக்கிற மாதிரி, கள்ளக் கணக்கு எழுதியிருக்கின்றவர்களை அண்டர் கிரவுண்டில் இருக்கிறவர்களைப் பிடிப்பது

20th March 1965] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

போல இருக்கிறது. இது வியாபாரிகள் மத்தியில் தவருன எண்ணங்களை உருவாக்குகிறது. அதைத் தடுக்க அரசாங்கம் முயற்சி செய்தால் இதனை நல்ல முறையில் செய்யலாம் என்று நினைக்கிறேன்.

இப்போது சில கோளாறுகள் இருக்கின்றன. போன வருஷத்தில் திரு. ராயப்பா அவர்கள் கமிஷனராக வந்தவுடனே ரெய்ட் ஆரம்பித்தார்கள். சில கன்ஸர்ண்களைப் பிடித்து டர்னேவர் அதிகமாக இருக்கிறது என்று டர்னேவரை அதிகமாகப் போட்டவுடனே வியாபாரிகள் கம்பெனி பெயரை மாற்றி விடுகிருர்கள். அதனுல் அரசாங்கத்திற்குப் பல கோடி ரூபாய் நஷ்டம் வரும். இன்றைய தினம் ராஜா அண்ட் கம்பெனி என்று இருக்கும். அந்தக் கம்பெனிக்கு 2,500 ரூபாய் அஸெஸ்மெண்ட் போட்டிருப்பார்கள். திடீரென்று 5,000 ரூபாயாக டாக்ஸ் போட்டிருப்பார்கள். அடுத்த வருஷம் 5,000 என்பது 6,000-ஆக உயரும். போன வருஷம் இருந்தது திடீரென்று டபிள் ஆகி விட்டது என்று உடனே பெயரை மாற்றி விடுகிருர்கள். ராஜா அண்ட் கம்பெனி என்பதற்கு பதில் லட்சுமணன் அண்ட் கம்பெனி என்று மாற்றி விடுகிருர்கள். அதே ஆள், அல்லது அதே பார்ட்னர்ஸ், அதே உரிமையாளர், இப்போது பழைய டர்னேவர் பாதிக்காது. சட்டப்படி புதுக் கணக்கு எழுதவேண்டும். இந்த முறையில் வரியை ஏமாற்றும் முயற்சி இருக்கிறது. அதையும் செக் செய்யவேண்டும். ரிஜிஸ்டர் செய்து, ரிஜிஸ்ட்ரேஷனை அரசாங்கத்தின் அப்ரூவல் இல்லாமல் மாற்றக் கூடாது என்று ஒரு முறையை வைத்தால் நலமாக இருக்கும். பல கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படும் முறையில், திடீர் திடீரென்று சோதனை செய்வதன் காரணமாக, பெயரையே மாற்றி விடுகிருர்கள். பெயர்போன பெரிய கம்பெனிகள் அந்த மாதிரி மாற்ற மாட்டார்கள். ஏனென்ருல் அவர்களுக்கு குட்வில் இருக்கும். லட்ச ரூபாய்க்குள் இருக்கும் சிறு சிறு வியாபாரிகள் போர்டை மாற்றி விடுகிருர்கள். இதையும் தவிர்க்க இந்த அரசாங்கம் முயற்சி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல, ஸேல்ஸ் டாக்ஸ் வசூல் செய்வதிலே ஸேல்ஸ் டாக்ஸுக்கு ஸேல்ஸ் டாக்ஸ் போடாமல் இருக்கவேண்டும் என்ற முடிவு நல்ல முடிவு. வட்டிக்கு வட்டி வாங்கும் முறை இருக்கிறது என்ருலும் அதைக் கண்டிக்கிருேம். அது அருவருக்கத்தக்கதாக இருந்தது. உயர் நீதி மன்றமும், சுப்ரீம் கோர்ட்டும் எடுத்துச் சொன்ன பிறகாவது..........

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படி அல்ல. சுப்ரீம் கோர்ட்டில் வாங்கவேண்டுமென்று சொன்ஞர்கள். இப்போது நாங்கள் பரிசீலனை செய்து வாங்க வேண்டாமென்று சொல்லியிருக்கிருேம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸேல்ஸ் டாக்ஸுக்கு ஸேல்ஸ் டாக்ஸ் வேண்டியதில்லை. சர்க்காருடைய வருமானம் 27 கோடியிலிருந்து 30 கோடிக்கு மேல் வளர்ந்திருக்கிறது. சிற்சில பொருள்களை இப்போது லக்ஷுரி குட்ஸ் என்று வைத்திருக்கிருர்கள். கிளார்க்குகள் உபயோகப்படுத்துவதைக் கூடவா லக்ஷுரி குட்ஸ் என்று சொல்லுவது ? பணக்காரர்கள் உபயோகிப்பதை வேண்டுமானுல் சொல்லலாம். 150 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்கள் கட்டிக் கொள்ளும் கடிகாரத்தை லக்ஷுரி குட்ஸாக வைத்திருக்கிருர்கள். சைக்கிள்கூட லக்ஷுரி குட்ஸாக இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இதிலேகூட அதிகமாக வருவாய் கிடைப்பதாகத் தெரியவில்லை. இப்பொழுது இருக்கிற சட்டப் பிரகாரம் பெயிண்டுக்கு ஸிங்கிள் பாயிண்டு டாக்ஸ். பெயிண்டையும், டிஸ்டெம்பரையும் எடுத்துக்கொண்டால், அதுவும் பெயிண்டு, இதுவும் பெயிண்டு, கிளாரிபிகேஷன் கஷ்டம் என்று சொல்லப்படுகிறது. அதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை. கன்ஸ்யூமர்ஸ் குட்ஸ், 100, 200 பொருள்கள் தான் இருக்கும். இங்கே இருக்கிற ஸேல்ஸ் டாக்ஸ் கமிஷனரோ அல்லது மற்ற மேலதிகாரிகளோ இன்னென்ன பொருள்கள் இந்த ஷெட்யூலில் வரும் என்று கிளியராக கிளாரிபிகேஷன் கொடுத்து விடலாம். அதிலே ஒன்றும் தவறு வந்துவிடாது. கிளாரிபிகேஷன் கொடுப்பதிலே "கன்ப்யூஷன்" இருக்கிறது என்று சொல்லுவதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. பல கட்ட விற்பனை வரி ஏழை மக்களை பாதிக்கும், சிறு சிறு வியாபாரிகளை

பாதிக்கும். ஆகவே, இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்த பிறகுதான் அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விற்பனை வரி மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். விற்பனை வரியைப் பொறுத்தவரையில். அது பெருத்த வருமானத்தைக் கொடுக்கக்கூடியது, ஏதோ காமதேனு, கற்பக விருக்ஷம் என்று சொல்வது போல் நம்முடைய மகாணத்தில் முக்கிய வருமானத்தைக் கொடுக்கக்கூடிய வரி இனம் அது. அதை விற்பனை வரி என்று சொல்வதை விட வாங்குவோர் வரி என்றுதான் சொல்ல வேண்டும். எனென்றால் விற்பவர்கள், வியாபாரிகள் அவர்கள் கையிலிருந்து இந்த வரியைக் கொடுப்பது கிடையாது. வாங்குவோர் தான் அந்த வரியை கொடுக்கிறோம். வாங்குவோர்களின் வரி மூலம் வருமானம் அதிகரிக்க, அதிகரிக்க அதில் ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. காரணம், மக்களுடைய வாங்கும் சக்தி அதிகரித்திருக்கிறது, அது நாட்டிலே ஏற்பட்டிருக்கும் பொருளாதார வளர்ச்சியைக் காட்டுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே சமயத்தில் வாங்குவோருக்கு அதிக தொல்லை இல்லாமல் இருக்கவேண்டும். அப்படி இருக்கிற தொல்லைகளை நிவர்த்திப்பது மிகவும் அவசியம் என்று நினைக்கிறேன்.

முதலில் ஒரு முனைவரி வரி தேவையா, பல கட்ட வரி தேவையா என்பதைப்பற்றி ஆராயப்பட்டது. வியாபாரிகள் ஒரு சில ஆண்டுகளுக்குமுன் பலகட்ட வரி வேண்டாம், ஒருமுனை வரி தேவை என்று மகாநாடு கூட்டி, தீர்மானம் போட்டு, அமைச்சர்களைப் பார்த்து கேட்டுக்கொண்டார்கள். அப்பொழுது ஒருமுனை விற்பனை வரி வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது ஒருமுனை வரியை எடுத்துவிட்டு, பல கட்ட வரியைக் கொண்டு வந்தால் பரவாயில்லைபோல் இருக்கிறது, மிகத் தொல்லையாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். யூனிபார்மாக எல்லாவற்றிற்கும் 2 பர் செண்ட் மல்டிபாயிண்டு டாக்ஸ் போட்டு விட்டால் மிக வசதியாக இருக்கும் என்று சிலர் சொல்லுகிறார்கள். அதுவும் நல்லது தான் என்று நினைக்கிறேன். ஏன் அப்படி நினைக்கிறேன் என்றால், ஒருமுனை வரி என்று சொல்லும்பொழுது, 7, 5, 3 பர் செண்ட் என்ற அளவிலே வரி இருக்கும் பொழுது, முக்கால் பங்கு எப்படி அந்த ஒருமுனை கட்டத்தில் வரியை ஏமாற்றுவது என்ற எண்ணம் தான் ஏற்படுகிறது. ரூ. 1,000, 2,000-க்கு சாமான் வாங்கினால் அதற்கு 7 பர் சண்ட் ஸிங்கில் பாயிண்டு வரி என்று சொல்லும்பொழுது, பில் தேவையில்லை, பில் போட்டால் தானே வரி கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் தாராளமாக வந்துவிடுகிறது. ஒருகட்ட வரியாக இருப்பதனால், அதிகமான தொகை வரி ஏமாற்றப்படுகிறது என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏறக்குறைய இப்பொழுது 45 ஐடெம்கள் இந்த ஷெட்யூலில் இருக்கின்றன. எவ்வளவுக்கு எவ்வளவு குறைந்த பொருள்களின் மீது $\frac{1}{2}$ ஸிங்கில் பாயிண்டு டாக்ஸ் போடுகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு சாலச்சிறந்தது. பலகட்ட வரியாக இருந்தால், ஒரு கட்டத்தில் ஏமாற்றினாலும், இன்னொரு கட்டத்தில் பிடித்துவிடலாம். ஒரு கட்டத்தில் 2 பர்சண்ட் போனால், அடுத்த கட்டத்தில் 2 பர்சண்ட் போட்டு பிடித்துவிடலாம். இல்லாவிட்டால் ஒருமுனை வரியாக இருந்தால், ஒரேடியாக 5 பர் சண்ட், 7 பர் சண்ட் வரி ஏமாற்றப்பட்டுவிடுகிறது. ஆகவே, ஒருமுனை வரியைவிட, பல பொருள்களின்மீதும் பல கட்ட வரி 2 பர் சண்ட் என்று விதித்துவிட்டால் சிறந்ததாக இருக்கும். மீண்டும் வியாபாரிகளைக் கூப்பிட்டு, கலந்து பேசி என்ன முடிவு எடுக்கவேண்டுமென்று கேட்டு, அவர்களுக்கு என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதையும் சிந்தித்துப் பார்த்து, சீர்தூக்கிப் பார்த்து ஒரு நல்ல முடிவுக்கு வருவது நல்லது என்று நினைக்கிறேன்.

நமது மாகாணத்தில் உணவுப் பொருள்களுக்கு வரியிலிருந்து விதிவிலக்கு தேவை என்று சொல்லப்படுகிறது பல ஆண்டுகளாக. எல்லோரும் வரி கொடுக்கவேண்டும் என்ற முறையில், எல்லோரும் உணவுப்

20th March 1965] [திருமதி டி. என். அனந்தநாயகி]

பண்டங்களை வாங்குவதால் அதற்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்றாலும், உணவுப் பொருள்களின் விலை ஏறிக்கொண்டே போகிறது. ஆகவே அதற்கு வரியிலிருந்து விதி விலக்கு வேண்டும் என்று மக்கள் கருதுகிறார்கள். சில மாகாணங்களில் கூட உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரி கிடையாது. ஆகவே, நம்முடைய மாகாணத்திலும் அம்மாதிரி ஒரு நிலைமையை ஏற்படுத்துவது சிறந்தது என்று நினைக்கிறேன்.

"மில்க் அண்டு மில்க் ப்ராடக்ட்ஸ்" பொறுத்தவரையில் 3 சதவிகிதம் ஒரு முனைவரி போட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு அதைக் குறைத்ததாக எனக்கு ஞாபகம். சரியாகத் தெரியவில்லை. குறைத்திருந்தால் நல்லது. இல்லாவிட்டால், அதைக் குறைப்பது மிகவும் அவசியம். காரணம், மில்க் அண்டு மில்க் ப்ராடக்ட்ஸ் மிகமிகத் தேவைப்படுகிறது. இன்றைக்கு மக்கள் அதை அதிகமாக உட்கொள்ளக் கூடிய வசதி இல்லாமல் இருக்கிறார்கள். அதை உட்கொள்ளுவதே மிகக் குறைவு என்ற நிலைமையில் இருக்கும் பொழுது, அதற்கு வரியைக் குறைக்க வேண்டும். முடியுமானால் அதற்கும் வரியிலிருந்து விதி விலக்குக் கொடுக்க முடியுமா என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

வறுகடலை ஏழை எளிய மக்கள் அதிகமாக உட்கொள்ளக் கூடியது. ப்ரோட்டீன் சத்தை அதிகரிப்பதற்கு அது தான் குறைந்த விலையில் கிடைக்கக் கூடிய பொருள். உடல் நலத்திற்காக ஏழை எளிய மக்கள் அதிகம் வாங்கி உண்ணக் கூடிய பொருள். அதற்கு வரியிலிருந்து விதி விலக்குத் தேவை. இதுபற்றி அதிக நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே, வறுகடலை மீதுள்ள வரியை நீக்க வேண்டும். ஏழை மக்கள் விரும்பி வாங்கிச் சாப்பிடக் கூடிய பொருள் இது. கனம் அமைச்சர் அவர்கள் தொழிலாளிகளின் மீது அக்கறை கொண்டவர்கள், அவர்கள் தொழிலாளிகளுடைய தலைவராக இருந்தவர், ஆகவே அவர் இந்த வறுகடலை, பட்டாணி ஆகிய பொருள்களின் மீதுள்ள வரியை நீக்குவதற்குக் கட்டாயம் முன்வருவார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, நமது மாகாணத்தில் விற்பனை வரி வசூலிப்பதைக் கொஞ்சம் திறமையாகச் செய்து கொண்டு வருகிறோம். அதே சமயத்தில் சில தொல்லைகளும் ஏற்படுகின்றன. சமீபத்தில் உயர்நீதி மன்றம் "வீஷர்" "இல்லீகல்" என்று தீர்ப்பளித்திருக்கிறது. அதற்கு மேலே அரசாங்கம் அப்பீலுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. நல்லதா, கெட்டதா என்பதை எப்படி நீதி மன்றம் முடிவு செய்கிறதோ அதை ஏற்றுக் கொள்வோம். ஆனால், ஓரளவுக்கு அதிகமாகத் தொல்லை கொடுக்காமல் இருப்பது தான் நல்லது என்று கருதுகிறேன். வியாபாரிகளும் தவறு செய்கிறார்கள், இல்லை என்று சொல்லவில்லை. அவர்கள் ஒழுங்காகக் கணக்கைக் கொடுத்துவிட்டால் ஒன்றும் தொல்லை இல்லை. அவர்களும் கணக்குப் புத்தகங்களை அடுப்பங்கரையில் கொண்டு போய் வைத்திருப்பதால் தான் அதிகாரிகளும் அடுப்பங்கரை வரையில் போய் கணக்குப் புத்தகங்களைத் தேடவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதிகாரிகள் சில சமயங்களில் உள்ளே புகுந்து கணக்குப் புத்தகங்களை எடுக்கக் கூடிய நிலைமையில் வீட்டிற்கு பெண் கொடுத்தவர், வீட்டிலிருந்து பெண் எடுத்தவர், ஆகியோர் வீடுகளைச் சோதனை போடும்படியான சூழ்நிலை இருக்கும்பொழுது, அது பெரிய தொல்லையில் வந்து முடிகிறது. அந்த அளவுக்குத் தொல்லை கொடுத்து வரி வசூல் செய்ய வேண்டும் என்று நினைப்பது தவறு. வியாபாரிகள் அரசாங்கத்தினிடம் நியாயமான கோரிக்கைகளைத் தெரிவித்தால் அவைகளைப் பரிசீலனை செய்து என்ன நல்ல முறைகளைக் கையாள முடியுமோ, அதையெல்லாம் கையாளுவது சாலச் சிறந்தது என்று கருதுகிறேன்.

அடுத்தாற்போல், ஸேல்ஸ் டாக்ஸ் டிரிபியூனல் ஆபீஸுக்குப் போனால் அங்கே இடவசதி கிடையாது. உட்காருதவற்குக் கூட சரியாக நாற்காலி மேஜை கிடையாது. வரி வாங்கக்கூடிய இலாக்காக்களில் சர்க்கார் கொஞ்சம் கவனம் செலுத்தி, பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும் நல்ல இட வசதி செய்துகொடுக்க வேண்டும். நல்ல நாற்காலி, மேஜை, பெஞ்சு

[திருமதி டி. என். அனந்தநாயகி] [20th March 1965

வசதிகள் செய்துகொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் வியாபாரிகள் வந்து உட்கார்ந்து நல்ல முறையில் கணக்குகளைக் காட்டிவிட்டு மறுபடியும் திரும்பப் பெற்றுக்கொண்டு போக வசதியாக இருக்கும்.

சிறு சிறு வியாபாரிகளுக்குச் சில சமயங்களில் சில அதிகாரிகள் அதிகத் தொல்லை கொடுக்கிறார்கள். ஏதோ ரூ. 2,000 முதல் போட்டு ஒரு மளிகைக் கடை வைத்தால், அவருக்கு செக்ஷன் 7 படி கம்பவுண்டிங் ரேட்டுக்கு வசதி செய்து கொடுத்தால் அவர் கட்டிவிட்டுப் போய்விடுவார். அதற்கு மேலே அவர் கடையைச் சோதனை போட்டு, பருத்திக்கொட்டை வியாபாரத்தில் கமிஷனையும் அதில் சேர்த்து வரி போடுகிறார்கள். போன் நம்பர் எழுதி வைத்துக்கொள்வதற்குக் கூட சிறு வியாபாரிகள் பயப்படு கிறார்கள். அதன் மூலம் ஏதாவது வருமானத்தை அஸெஸ் செய்யப் போகிறார்கள் என்று பயப்படுகிறார்கள். சிறு வியாபாரிகளிடம் தவறான முறைகளைச் சில அதிகாரிகள் கையாளுகிறார்கள். 2,000 ரூபாய் முதல் போட்டு கடை வைத்திருந்தால் 2,100 ரூபாய் வரி போட்டுவிட்டால், முதலையே வரி ஒரேயடியாக அடித்துக்கொண்டுபோய்விடுகிற நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஏதோ கம்பவுண்டிங் வரி போட்டால் கொடுத்துவிடுவார்கள், வசதியாக இருக்கும். அதை விட்டுவிட்டு, "எஸ்கேப்டு அஸெஸ்மெண்டு" என்று சொல்லி, 2 சதவிகிதம் வரிபோட்டு, அதற்கு மேலே பெனல்டி போட்டு, $1\frac{1}{2}$ மடங்கு பெனல்டி விதிக்கலாம். அப்படி முழு பெனல்டியும் போட்டு அவர்களுக்கு வரி விதித்தால், அவர்கள் கடையையே மூடிவிட்டு ஓடிவிடக்கூடிய நிலைமை தான் ஏற்பட்டுவிடுகிறது. சிறிய வியாபாரிகளுக்கு இப்படித் தொல்லை கொடுப்பது சிறந்தது அல்ல. பெரிய பெரிய வியாபாரி களைப் பிடிக்க வேண்டும். "பிடித்தாலும் புளியம்கொம்பைப் பிடிக்க வேண்டும்" என்று சொல்வது போல பெரிய வியாபாரிகளைப் பிடிக்க வேண்டும். இப்படி ரூ. 2,000, 3,000 முதல் போட்டு வியாபாரம் செய்யக் கூடிய சிறு சிறு வியாபாரிகளுக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது மாதிரி எத்தனை கேஸ்கள் பிடித்திருக்கிறார்கள் ? கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஏதாவது தெரி யுமா ?

திருமதி டி. என். அனந்தநாயகி : இப்பொழுது கூட கையிலே ரெடி யாக ஒரு கேஸ் வைத்திருக்கிறேன். சில இடங்களில் இம்மாதிரி நடக் கிறது. பரவலாக இம்மாதிரி நடக்கிறது என்று நான் சொல்லவில்லை. சில அதிகாரிகள் இம்மாதிரிச் சிறு வியாபாரிகளிடம் தவறுதலான முறை களைக் கையாளுகிறார்கள், பிரயோகிக்கிறார்கள். பெரிய பெரிய வியாபாரிகள் வரியை ஏமாற்றக்கூடாது. அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும். அதிகாரிகள் ஆங்காங்கு இருக்கும் சிறு வியாபாரிகளிடம் தவறுதலாக நடந்துகொண்டால், அந்தத் தவறு அரசாங்கத்திற்கு தான் திருப்பி வந்து சேரும். ஆகவே, அரசாங்கம் இதைக் கவனத்தில் வைத்துக்கொண்டு சிறிய வியாபாரிகள் கஷ்டமில்லாமல் தங்களுடைய தொழிலை நடத்து வதற்கு, உற்சாகத்தோடு வியாபாரத்தை நடத்துவதற்கு வழி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செக்ஷன் 7 படி கம்பவுண்டிங் செய்து கொள்ளலாம் என்று சொல்லு கிற பொழுது அடித்தளத்தில் ரூ. 10,000 என்று லிமிட் வைத்திருக் கிறோம். கனம் உறுப்பினர் திரு. சங்கரன் அவர்கள் சொல்லியபடி அதை ரூ. 20,000 ஆக உயர்த்தினால் நலமாக இருக்கும். அதே மாதிரி ரூ. 50,000 என்று வைத்திருப்பதை ரூ. 75,000 ஆக மாற்றுவதற்கு வழி செய்தால் அதை வியாபாரிகள் வரவேற்பார்கள். கணக்கு வழக்கு வைத்துக் கொள்வதில் அதிகமாகத் தொல்லைகள் இருக்கின்றன, பல பேர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. கம்பவுண்டிங் ரேட்டில் வரி கொடுப்பதற்கு அதிக மாக ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

குறிப்பிட்ட தொகை விதித்திருப்பது தவறு என்று எண்ணிக்கொண்டு, வியாபாரிகள், டிரிபியூனலுக்குப் போகிறோம், அப்பீலுக்குப் போகிறோம் என்று சொன்னால், விதித்திருக்கும் வரியைக் கொடுத்து விட்டுதான் போக

20th March 1965] [திருமதி டி. என். அனந்தநாயகி]

வேண்டும் என்கிருர்கள். " கட்டுவதற்குப் பணமில்லாத காரணத்திஞல் தானே தங்களுடைய சொத்துக்களை செக்யூரிட்டியாகக் கொடுக் கிருேம் டிரிப்யூனலுக்குப் போகிருேம், அப்பீல் முடியும் வரை எங்கள் சொத்தை செக்யூரிட்டியாக வைத்துக்கொண்டு, வரியைக் கேட்பதைத் தள்ளி வையுங்கள்" என்று சொன்னுல், அதை அதிகாரிகள் கேட்பதில்லை. வரியைக் கட்டிஞல்தான் விடுவேன் என்கிருர்கள். அதனுல், அவர்கள் பாதிக்கப்படுகிருர்கள். சொத்துக்களை செக்யூரிட்டியாகக் கொடுத்தால் அப்பீல் முடியும் வரை அதை வைத்துக்கொண்டால் என்ன என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அப்பீல் முடிந்தவுடன் எவ்வளவு கட்ட வேண்டுமோ அதைக் கட்டுவதில் என்ன தவறு இருக்க முடியும் என்று தெரியவில்லை. அவர்கள் கட்ட வேண்டிய பணத்திற்கு மட்டும் ஏன் இவ்வளவு கெடுபிடி? நாம் கொடுக்க வேண்டும் என்ருல், ஏதாவது ரீஃபண்டு என்ருல், எவ் வளவு காலதாமதம் செய்கிருேம். ஆகவே, இப்படி நிர்ப்பந்தம் செய்வது நியாயம் இல்லை. இருதரப்பிற்கும் நியாயமாக இருக்கும் வழியைக் கையாள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்கள் அப்பீல் முடியவேண்டும், அஸெஸ்மெண்ட் சரியா இல்லையா என்று தீர்மானிக்கப் பட்ட பிறகுதான் அவர்கள் கட்ட வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் இருக் கிறது. ஆகவே, அப்படி அவர்கள் செக்யூரிட்டி கொடுத்தால் போதும் என்கிற நிலைமையை உண்டாக்க வேண்டும். அப்படித் திட்ட வட்டமாகச் செய்து விட்டால் இலாகாவின் தொந்தரவுகள் இல்லாமல் இருக்கும்.

அடுத்தபடியாக, எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸ் பற்றி ஒரு சில வார்த் தைகள் சொல்ல வேண்டும். பஞ்சாயத்து யூனியனில் 25 சதவிகிதம் உயர்த்திக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிருேம். சிலர் உயர்த்து கிருர்கள், சிலர் அப்படி உயர்த்துவது இல்லை. அப்படி உயர்த்தப் படாத இடங்களில் தான் டூரிங் சினிமாக்கள் போடுகிருர்கள். ஆகவே, இந்தவிதமான மாறுபாடு இல்லாமல் யூனிபார்ம் ஆக எல்லோரும் இவ் வளவுதான் போடலாம் என்று செய்து விட்டால், நியாயமாக இருக்கும். அது மட்டுமல்ல, டூரிங் சினிமா வைத்திருப்பவர்கள், மனுக்கூடக் கொடுத் திருக்கிருர்கள், எங்களுக்கு விதிக்கப்படும் இந்த வரி அதிகமானது என்று. இப்படி அதிகமாகப் போடுவதால்தான் அவர்கள் ஏமாற்ற வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஷோ டாக்ஸ், எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸ் எல்லாம் விதிக்கப்படுகிறது. இந்த இரண்டுக்கும் போக, மீதியில், கொட்டாய் போட்டு, டிஸ்ட்ரிப்யூட்டருக்குப் போக, அவர்களுக்கு என்ன மீதி யிருக்கப் போகிறது ? ஆகவேதான் அவர்கள் இந்த வரிகளை எப்படி ஏமாற்றலாம் என்று பார்க்கிருர்கள். இன்றைக்கு டூரிங் சினிமா வைத் திருப்பவர்கள் பெரும் பணம் போட்டிருக்கும் பெரும் முதலாளிகள் இல்லை. ஏதோ 10,000 அல்லது 15,000 போட்டு செய்கிறவர்கள். அவர் களை அதிகமாகக் கஷ்டப்படுத்திஞல், சாலச் சிறந்ததாக இருக்காது. ஆகவே கனம் அமைச்சர் இதை நல்ல முறையிலே ஆராய்ந்து, எந்த வகையில் அவர்களுக்கு அதிகக் கஷ்டம் இல்லாமல் இருக்குமோ அப்படி திருத்தி அமைக்க முன்வரவேண்டும். இன்றைக்கு டூரிங் சினிமாக்கள் தான் பஞ்சாயத்துக்களுக்கு நல்ல வருமானத்தைக் கொடுக்கின்றன. அதிலே என்டர்டெயிண்மெண்ட் டாக்ஸ் ஒரு சிறந்த வரியாக இருக்கிறது. ஆகவே, அதை எவ்வளவு நல்ல முறையில் போட முடியுமோ அப்படிச் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும். அதே நேரத்திலே (மணியடிக்கப்பட்டது). இந்த வரியை எல்லோருக்கும் ஒரே மாதிரிப் போடும் முறையை ஏற்படுத்திஞல் நலமாக இருக்கும். செல்வாக்கு உள்ளவர்களுக்கு அதிகமாகப் போடுவது என்பது நியாயமாக இருக்காது. அதனுல், ஒரே முறையாக இருந்தால், இன்னும் வருமானமும் அதிகமாக வரும், மக்களுக்கும் வசதியாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு, எனக்கு இந்த வாய்ப்புக் கொடுத்த சபா நாயகருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **புலவர் கா. கோவிந்தன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரியானது அரசாங்கத்திஞுடைய காமதேனு என்று போற்றப் படக்கூடிய நிலையில் இருக்கும் ஒரு வரி. அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையில் இந்த வரி ஆறு ஆண்டுக் காலத்தில் எவ்வளவு உயர்ந்

[புலவர் கா. கோவிந்தன்] [20th March 1965

திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டார்கள். அந்த நிகழ்ச்சி ஒரு அரசாங்கத்தின் பாராட்டுக்குரிய நிகழ்ச்சி அல்ல. காரணம், இந்த வரியைக் கொடுக்கிறவர்கள் யார் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெயர்தான் விற்பனை வரியே தவிர, வரியைக் கொடுக்கிறவர்கள், வாங்குகிறவர்கள் தான். ஒரு கடையிலிருந்து ஆறு ரூபாய்க்குப் பண்டம் வாங்கினால், பொருளின் விலை ரூ. 6 என்று போட்டு விட்டு, அதன் கீழே ஆறு ரூபாய்க்கு அறுகால் ஒன்றரை அல்லது, 6×3=18 பைசா என்கிற அளவில் தனியாக இந்த வரியை வாங்குகிறார்கள். ஆக, இந்த வரியை விற்கிறவர்கள் கொடுக்க வில்லை, வாங்குகிறவர்கள் தான் கொடுக்கிறார்கள் என்பதை மனதில் வைத்துப் பார்க்க வேண்டும். அந்த அளவில், இப்பொழுது அமைச்சர் அவர்கள் கணக்குப்படி, ஏறத்தாழ ரூ. 30 கோடி வரி கொடுக்கிறோம் என்றால், நம்முடைய நாட்டின் ஜனத்தொகை 3½ கோடி என்ற கணக்கைப் பார்த்தால், தலைக்கு ரூ. 9 அளவுக்கு ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் வரி கொடுக்கும் நிலைமை இருக்கிறது. சாதாரணமாக ஒரு பஞ்சாயத்து ஒரு வரியை எட்டு அணா கூட்டினால், அந்த எட்டு அணாவைக் கொடுக்க முடியாமல், மனுச் செய்து அதைத் தள்ளித் தரும் நிலைமை தான் இருக்கிறது. அப்படி இருக்கும் போது, இந்த வரியின் பயனாக, தமிழ் நாட்டில் ஒவ்வொருவரும் ஆண்டுக்கு ரூ. 9 என்று கொடுக்கிறோம் என்றால், இந்த வரியை நாம் கொடுக்கிறோமே என்று தெரியாமலே கொடுக்கிறோம் என்றால், அது நமக்குத் தெரியாமலே வாங்கப்படுகிறது என்றால், இந்த முறை, இந்த மறைமுக வரி முறை மிகக் கொடுமையானது, இது சாணக்கிய முறையில், வரி வாங்கும் முறை என்பதை நாம் உணர வேண்டும். இதை மனதில் கொண்டு, இதை மாற்றி அமைக்க வேண்டும் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். கேட்கலாம், வரியில்லாமல், பொருள் இல்லாமல் ஒரு அரசு நடக்க முடியுமா என்று. நிச்சயமாக நடக்க முடியாது. அப்படி நிச்சயமாக நடக்க முடியாது என்ற நிலையில், இந்த வரி வேண்டுமா வேண்டாமா என்று கேட்டால், நான் சொல்லுவேன், வரியை, அதுவும் விற்பனை வரியை வைத்து, அதன் மூலம்தான் நடக்க வேண்டும் என்று நினைக்கின்ற அரசு நல்ல அரசு அல்ல. அதிலும் இந்த வரியைப் போடுகிறவர் தொழில் அமைச்சர், அவர்கள் வரி மூலமாக அரசுக்கு வருமானம் தேடுகிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. நாட்டிலே பொருளாதார உயர்வைத் தொழில்கள் மூலம் ஏற்படுத்தி, வருமானத்தைப் பெருக்க வேண்டும். அதை விட்டு இப்படிப்பட்ட வரி மூலம் வருமானத்தைப் பெருக்குவேன் என்பது பொருந்தாத ஒன்று என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, இந்த வியாபாரிகள் படும் கஷ்டத்தைப் பற்றி இரண்டு தரப்பிலிருந்தும் எடுத்துக் கூறினார்கள். வியாபாரிகள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், நாங்கள் கொடுக்கும் கணக்கை அதிகாரிகள் ஏற்றுக் கொள்வதில்லை. " நீ கொடுக்கும் கணக்கை உண்மையானது என்று ஏற்றுக் கொள்வதற்கில்லை, என்று கூறிவிடுகிறார்கள். இந்த வாதம் எப்படிப் பொருந்தும் " என்று எண்ணிப் பார்க்கவேண்டும். இப்படிச் சொல்வதால், வியாபாரிகள் கணக்குகளை மறைக்க ஏதுவாக இருக்கிறது. அப்படி அவர்கள் கணக்குகளை மறைக்க வேண்டிய சூழ்நிலையை இன்றைக்கு அதிகாரிகளே உண்டாக்குகிறார்கள். எந்தெந்த வகையில் தப்புக் கணக்குகள் இருக்கின்றன என்று பார்த்து நடவடிக்கை எடுத்தால் சரியாக இருக்கும். அதை விட்டுவிட்டு, " உண்மைக் கணக்கையும், நம்பமாட்டேன், அதிகப்படியான வியாபாரம் நடந்திருக்கிறது, அதன் மேல் வரி போடுகிறேன் " என்று அதிகாரிகள் செய்தால், உண்மையாக நடக்கும், உண்மையான கணக்கு வைத்திருக்கும் வியாபாரியும், "நம் கணக்கை அதிகாரி ஏற்றுக் கொள்வதில்லை ஆகவே, நாமும் தப்புக் கணக்கு எழுதுவோம் " என்று தப்புச் செய்யும் சூழ்நிலைதான் உருவாகிறது. ஆகவே, அந்த முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். வியாபாரிகளைத் திருடர்களைப் போல மதிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்று பல கனம் அங்கத்தினர்கள் எடுத்துக் கூறினார்கள். சின்னச் சின்னக் கடைக்காரர்களுக்கும் இந்த அதிகாரிகள் தொல்லை கொடுக்கிறார்கள், அவர்களைத் தொல்லைக்கு உள்ளாக்குகிறார்கள். சாதாரணமாக நமக்குத் தெரியும்.

20th March 1965] [புலவர் கா. கோவிந்தன்]

கேரளா மாநிலத்திலிருந்து வந்தவர்கள் இந்த மன்றத்திலே பேசியிருக்கிருர்கள் ; " நாங்கள் அரிசி முதலிய உணவுப் பண்டங்களுக்கு விற்பனை வரி செலுத்துவது, நாங்கள் தமிழ் நாட்டோடு இணைந்த பிறகு தான், அதன் பிறகு தான் இந்த அவல நிலையில் இருக்கிறேம் " என்பதைப் பலரும் எடுத்துக் கூறியிருக்கிருர்கள். ஆக, உணவுப் பொருளுக்கு விற்பனை வரி போடுவதை அடியோடு கைவிட்டுவிட வேண்டும் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, விவசாயிகள் தங்களுடைய நிலத்திலே விளையும் மணிலாக் கொட்டையை சென்னையில் கொண்டு வந்து விற்க வேண்டும் என்று பஸ்ஸிலே, லாரியிலே கொண்டு வரும் போது, செக் போஸ்டிலே மடக்கி விடுகிருர்கள். அந்தப் பொருளின் மீது வரியைக் கட்டினுலொழிய கொண்டு போகக் கூடாது என்று பிடித்து வைத்து விடுகிருர்கள். அந்த அளவுக்கு விவசாயிகளுக்குத் தொல்லை கொடுக்கிருர்கள். இதை அமைச்சர் சிந்தித்துப் பார்த்து, அதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் குதிரைப் பந்தயத்தைப் பற்றி ஒரு கருத்துப் சொல்ல வேண்டும். குதிரைப் பந்தயத்தைத் தடை செய்ய வேண்டும் என்று எங்கள் பக்கத்திலிருந்து கூறிய நேரத்திலே, ஆளும் கட்சியைச் சேர்ந்த அம்மையார், மதுவிலக்கை விலக்க வேண்டும் என்று அவர்கள் சொல்லுவார்களோ என்ற கருத்துப்படப் பேசினுர்கள். இந்தக் குதிரைப் பந்தயத்தை எடுக்க வேண்டும் என்று எதிர்த் தரப்பிலிருந்து கேட்பதால் தான் ஆளும் கட்சிக்காரர்கள் அது வேண்டும், வேண்டும் என்று சொல்லுகிருர்களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. கனம் அம்மையார் மதுரையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சென்னையில் வாழ்ந்து, இந்தப் பந்தயம் நடக்கும் போது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் நடுத்தரக் குடும்பத்துப் பெண்கள் கண்ணீர் விடுகிருர்கள் என்பதைப் பார்க்க வேண்டும். குதிரைப் பந்தயம் வேண்டும். அதன் மூலம் கிடைக்கும் வரி வேண்டும் என்று கருத்துப்படச் சொல்லுவது, மிக மிகக் கேவலமானது. அதனுல் இந்த வரியை வைத்து நடத்துவோம் என்பதும் மிகவும் கேவலமானது. ஆகவே, அந்த முறையை மாற்றியமைக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. ஏ. பி. ஸி. வீரபாகு : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரிக்கும் முறையில் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் நான் கூற விரும்புகிறேன். மந்திரி அவர்கள், ஒரு கட்ட விற்பனை வரியைப் பல கட்ட விற்பனை வரியாக மாற்றுவதற்கு அபிப்பிராயம் கோரியிருக்கிருர்கள். ஒரு கட்ட விற்பனை வரியை ஆதரிக்கிறவன் நான். பல கட்ட விற்பனை வரியாக மாற்றக் கூடாது என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்ருல், பல கட்ட விற்பனை வரி விலைவாசியை உயர்த்திவிடுகிற நடவடிக்கையாக அமையும். அதோடுகூட, இப்பொழுது விற்பனை வரியிலே அதிகமான மறைப்பு இருக்கிறது ; அதைக் கண்டுபிடிப்பதிலே நாம் அதிகமாக முயன்று வருகிறேம். பல கட்ட விற்பனை வரியை ஏற்படுத்தும்போது, அம்மாதிரி " எவேஷனு "க்கு அதிகச் சந்தர்ப்பம் அது கொடுக்கும். நாமே பல சந்தர்ப்பங்களை ஏற்படுத்திவிட்டு, பிற்பாடு அதற்காக நடவடிக்கை எடுப்பது என்பது எவ்வளவு தூரம் பொருத்தம் என்பது எனக்குத் தெரியவில்லை. 11–a.m.

சென்னையிலே கூடிய வியாபாரிகள் கூட்டத்திலே பல கட்ட விற்பனை முறையை அவர்கள் ஆதரித்து, மந்திரி அவர்களிடம் கூறியதாக இங்கே சொல்லப்பட்டது. நானும் பத்திரிகையில் படித்தேன். ஆனுல், பொதுவாக அவர்கள் எல்லோரும் மான்யுபாக்சரர்ஸ். அதிக வருமானம் உள்ளவர்களுக்கு வருமான வரி கட்டுவதில் எந்தக் கஷ்டம் இருக்கிறதோ அந்தக் கஷ்டம் தான் இவர்களுக்கும் ஏற்படுகிறது என்று நினைக்கிறேன். அதிக வருமானம் வரும்போது, " நாம் இவ்வளவு வருமான வரி கட்ட வேண்டும் " என்பதை அவர்கள் கவனித்து ஒதுக்காமல், பின்னுல்

வருமானமான வரி செலுத்துவதற்குக் கஷ்டப்படுகிருர்கள். ஆனுல், வருமானம் வரும்போது, வருமான வரிக்கு என்று ஒதுக்கப்படாமல் தங்களுடைய பணம் போல் அதைச் செவழித்து விட்டு, பின்னுல் வருமான வரி கட்டுவதற்கு அவர்கள் கஷ்டப்படுகிருர்கள். அதன் மேல் அவர்களுக்குக் கோபம் கூட ஏற்படுகிறது. அம்மாதிரி மான்யுபாக்சரர்ஸ் 7 சதவிகிதம் வரி என்ருல், அதை வசூல் செய்து தான் கொடுக்கிருர்கள். இருந்தாலும், பெரிய வருமானமாக இருக்கிறது. அந்தப் பணத்தைப் பாதுகாத்து வைத்து அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய ஒரு சிரமம் இருக்கிறது. அந்தச் சிரமத்திற்கு ஒரு பாதுகாப்பாக இருக்கும் என்று அவர்கள் இந்த மாற்று யோசனையைத் தெரிவித்திருக்கிருர்கள் என்று நான் கருதுகிறேன். பல முனை விற்பனை வரியானது விலைவாசியை ஏற்றுவதாக அமைகிறது என்பது ஒன்று. மற்ருென்று வரியை டிமிக்கியடிக்க இது உதவிகரமான அம்சமாக இருக்கிறது. இந்தக் காரணங்களுக்காகப் பல முனை விற்பனை வரியைக் கொண்டுவர வேண்டாம் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் விற்பனை வரி வருமானத்தை ரெவ்யூ பண்ணும் போது, கிட்டத்தட்ட எட்டு கோடி ரூபாய் அளவுக்கு ஒரு வருஷத்திலே எக்ஸெஸ்ஸாக வந்திருப்பதாகச் சொன்னுர்கள். இந்த ஏற்றத்தைப் பார்க்கும் போது, இது தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு பெரிய அறிகுறியாகவும் இருக்கிறது. ஆனுல், அதே நேரத்தில் இம்மாதிரி ஒரு வருஷத்தில் எட்டு கோடி, பத்து கோடி ரூபாய் அதிக வருமானம் வரும்போது மந்திரி அவர்கள் என்ன சலுகை அளிக்கலாம் என்று சிந்திக்க வேண்டும். சலுகை அளிப்பதன் மூலம் இன்னும் அதிக வருமானம் பெறுவதற்கு என்ன ஏற்பாடு செய்யலாம் என்ற கண்ணேட்டத்தோடு இது பரிசீலனை செய்து முடிவு செய்யப்பட வேண்டிய ஒரு விஷயம்.

இரண்டு சதவிகிதம் என்று சொல்லும்போது, ஹோல் ஸேல் டீலர்களுக்கும் இரண்டு சதவிகிதந்தான் மார்ஜின் கொடுக்கிருேம். வியாபாரிகள் லாப விகிதத்தை நிர்ணயிக்கும் போது அரசாங்கம் இரண்டு சதவிகிதம் தான் லாப விகிதம் என்று நிர்ணயித்திருக்கிறது. பல முனை விற்பனை வரியிலே இரண்டு சதவிகிதம் விதித்து வியாபாரத்தில் எவ்வளவு உச்ச கட்ட லாபம் வரும் என்று எண்ணுகிருேமோ, அதைவிட அதிக வருவாயை வரியின் மூலமே பெற விரும்புகிறது என்று தான் அர்த்தம். பல கட்ட விற்பனை வரியிலே 16 சத விகிதம் வந்தால், அது நம்முடைய வருவாய்க்கு அதிகமாக உகந்ததாக இருந்தாலும், கன்ஸ்யூமர் டாக்ஸ் என்ற காரணத்தினுலே இதற்கு எந்த விதமான சலுகை கொடுக்க முடியும் என்பதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

உணவு தானியங்களைப் பொறுத்தவரையில் இதற்கு ஒரு விதி விலக்குக் கொடுக்கவேண்டும். 1958-ம் வருஷத்திலே கூட, அப்போதிருந்த நிதி அமைச்சர் "ஒரு சத விகிதம் என்று இருப்பதை "ப்ரொக்ரெஸிவ்"வாக அரை சதவிகிதம் அளவுக்குக் குறைத்து, பின்னுல், அதை மேலும் குறைப்பதற்கான வழிவகையை இந்த அரசாங்கம் காணும்" என்று இந்தச் சட்ட சபையிலே கூறியிருப்பதை இப்பொழுது நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். அதனுல் பெரிய அளவுக்கு வருமான பாதிப்பு இருக்காது. செய் பண்டங்கள் அதிகமாக இருக்கையில், ஒரு வருஷத்தில் எட்டுக் கோடி ரூபாய், பத்துக் கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் அதிகமாகியிருக்கும் நேரத்தில், சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்களுக்கு எந்த வகையில் சலுகை அளிக்க முடியும் என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். சாதாரண மக்களுக்குத் தேவையான சாமான்களைப் பொறுத்த வரையிலாவது ஏதாவது சலுகை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்தப் பல முனை வரித் திட்டம் பற்றிய "ப்ரபோஸலை"க் கைவிடுமாறு கேட்டு, என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

20th March 1965]

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் விற்பனை வரி மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு முனை வரிக்குப் பதிலாக பலமுனை வரி விதிக்கலாமா என்ற யோசனையைக் குறித்து கருத்துத் தெரிவிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். என்னுடைய அபிப்பிராயம், ஒரு முனை வரியை அறவே எடுத்து விட்டு, பல முனை வரி விதிப்பது தான் சாலச் சிறந்தது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு முனை வரி விதிப்பினால் நமக்கு வருவாய் எவ்வளவு வந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு முனை வரி போட்ட காரணத்தால் சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் எத்தனை மடங்கு கிடைத்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் 1959–ல் 1·88 கோடி கிடைத்தது. இப்பொழுது 6·70 கோடி கிடைத்திருக்கிறது. இது நான்கு மடங்கு அதிகரித்திருக்கிறது. மாநிலத்தின் வருமானம் 12½ கோடியிலிருந்து 25 கோடி ரூபாய் ஆகியிருக்கிறது. ஆக, இரண்டு மடங்கு ஆகியிருக்கிறது. ஆனால், மத்திய விற்பனை வரி நான்கு மடங்கு எப்படி ஆனது என்பதைப்பற்றிச் சிந்தித்தாக வேண்டும். மத்திய விற்பனை வரி நான்கு மடங்கு ஆனதற்குக் காரணம் மாநிலத்தில் ஒரு முனை வரி சிலவற்றிற்கு ஐந்து சத விகிதமும், சிலவற்றிற்கு எழு சதவிகிதமும் விதிப்பது தான். இப்படி ஐந்து சதவிகிதம், ஏழு சதவிகிதம் என்று ஒரு முனை வரி விதித்த காரணத்தால், நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாகும் பொருள்களெல்லாம் இங்கேயே விற்பதற்குப் பதிலாக அண்டை மாநிலங்களுக்குச் சென்று விற்பனையாகும் காரணத்தால் தான் நம்முடைய வருவாய் குறைந்திருக்கிறது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல முனை வரி விதிப்போமானால், இந்த மாநிலத்தில் எந்தப் பொருளை விற்றாலும் ஒரே சீரான வரி விதிப்பு இருக்கிறது என்ற காரணத்தினால், வியாபாரிகள் இந்த மாநிலத்திலே விற்பதற்கு முற்படுவார்கள் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இதற்கு ஒரு உதாரணம் சொல்லுகிறேன். அதிகமாகத் தேயிலை உற்பத்தியாகக் கூடிய நீலகிரி மாவட்டத் தேயிலை எல்லாம், இப்பொழுது ஒரு முனை வரி விதித்ததற்குப் பிறகு, பம்பாய் போன்ற வேறு மாநிலங்களுக்குப் போகிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், அங்கு ஒரு சதவிகிதம் தான் வரி விதிக்கப்படுகிறது. அதுவும் "ஸி" பாரம் வாங்கிவிட்டால் எங்களுக்கு எந்தவிதமான டாக்ஸும் இல்லை. அங்கே அவர்கள் கட்டிவிடுவார்கள். வேறு மாநிலத்தில் ஒரு சதவிகிதம் என்று இருக்கிறது. "ஸி" பாரம் ப்ரொட்யூஸ் செய்துவிட்டால் எங்களுக்கு எந்தவிதமான டாக்ஸும் இல்லாமல், அவர்களே ஒரு சதவிகிதம் வசூல் செய்து கட்டிவிடக்கூடிய நிலை இருக்கிறது. அதனால், என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இந்த மாநிலத்தில் விற்பதற்கு நாங்கள் முற்படுவதில்லை. அதன் காரணமாகத்தான் வேறொரு மாநிலத்திற்கு நாங்கள் அதிகமாக விற்பதற்கு முற்படுகின்றோம். அதே நிலையில் தான் மற்ற மாவட்டங்களில் இருக்கும் வியாபாரிகளும் இதிலே ஈடுபட்டிருப்பார்கள் என்று நம்புவதற்கு இது ஏதுவாக இருக்கிறது.

நீலகிரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், கொச்சிக்கும், பம்பாய்க்கும் விற்கப்படுகிற தேயிலையெல்லாம் முன்பு குன்னூர் ஆக்ஷனுக்கு வந்துகொண்டிருந்தது. குன்னூர் தேயிலை ஆக்ஷனுக்கு அனுப்பினால் 5 சத விகிதம் வரி கொடுக்கவேண்டும். கொச்சின், பம்பாய்க்குக் கொடுத்து விட்டால், ஒரு சதவிகித வரி கட்டினால் போதும். "ஸி" சர்ட்டிபிகேட் வாங்கினால் அது கூடக் கட்டவேண்டியதில்லை. இந்த நிலை இருக்கும்போது ஒரு வியாபாரி எங்கு அனுப்புவார் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே நம் மாநிலத்தில் விற்கப்படுகிற பொருள்களுக்கு நாம் பலமுனை விற்பனை வரியைக் கொண்டு வந்துவிட்டால் இன்றைக்கு 22 கோடி

[திரு. ஜே. மாதா கவுடர்] [20th March 1965

வருமானம் என்ருல் $1\frac{1}{2}$ சதவிகிதம் என்று பலமுனை விற்பனை வரியை வைத்தால் 30 கோடி ரூபாய்க்கு மேல் கிடைக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். பலமுனை விற்பனை வரியாகச் செய்தால் வருவாய் குறைந்துவிடும் என்ற அச்சம் வேண்டாம். நாம் எதிர்பார்ப்பதற்குமேல் கிடைக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

இந்த வரி விதிப்பில் உள்ள சிக்கல்களை ஏற்கனவே எடுத்துச் சொல்லியிருக்கிருேம். தேயிலையை எடுத்துக் கொண்டால் ஒரு பெட்டி 3·50 நயா பைசா அடக்கம் இருக்கும். ஆனுல் அதைப் பாக் செய்வதற்காக தயாரிக்கப்படுகிற டீல்வுட் பாக்ஸ் 5 ரூபாய் இருக்கும். டீல்வுட் பாக்ஸ் தயாரிக்கப்படுகிறபோது அதற்குத் தனியாக வரி வசூலித்துவிடுகிருர்கள். அப்புறம் தேயிலை அவற்றில் பாக் செய்யப்பட்டவுடன் இந்த 5 ரூபாய் பெட்டியையும் சேர்த்து ரூ. 8·50–க்கு வரி போடுகிருர்கள். பெட்டிக்கு இரண்டு முறை வரி விதிக்கப்படுகிறது, ஒருமுனை வரியாக இப்போது வைத்துக்கொண்டிருக்கிற போதே. ஆகவே, இவையெல்லா வற்றையும் பரிசீலித்து பலமுனை வரியே கொண்டு வந்து விடலாம் என்று சொல்ல விரும்புகிறேன். பலமுனை வரி என்று செய்துவிட்டால் இந்தப் பிரச்சினைக்கு இடம் இல்லை. ஒருமுனை வரி என்கிறபோது சிலவற்றிற்க்கு 3 சதவிகிதம் சிலவற்றுக்கு 5 சதவிகிதம், சிலவற்றுக்கு 6 சதவிகிதம் என்பதாக வியாபாரிகள் கணக்கு வைக்கவும், அதிகாரிகள் அதைப் பரிசீலிக்கவும், அவற்றில் பல சிக்கல்களும் ஏற்பட்டு வருகின்றன. "ஸி" பாரத்தை வாங்கிக் கொடுத்து வெளி ராஜ்யங்களுக்குக் கொண்டு சென்று விற்க வேண்டிய நிலையும் இருக்கிறது. ஆகவே இதில் எந்தவிதமான அரசியல் கண்ணோட்டத்திற்கும் இடம் கொடுக்காமல் பலமுனை விற்பனை வரியைக் கொண்டு வர வர்த்தக சமூகத்தார்களுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உணவு தானியத்தைப் பொறுத்தவரையில் விற்பனை வரி விதிப்பில் இருந்து விலக்குக் கொடுத்துவிடலாமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முழுக்க எடுக்காவிட்டாலும் $\frac{1}{2}$ சதவிகிதமாகக் குறைக்க முடியுமா என்பதையாவது சிந்திக்கவேண்டும். விற்பனை வரி மூலமாக நம்முடைய வருவாய் அதிகமாகிக் கொண்டிருக்கிறபோது, மக்களுடைய அன்ருடத் தேவைப்பொருள்களுக்காவது விலக்குக் கொடுப்பது நலமாக இருக்கும்.

இன்றைக்கு நியாய விலைக் கடைகள்—சென்னை நகரைப் பொறுத்து சொல்லவில்லை—வேறு இடங்களில் இருக்கின்றன. உணவு தானியம் கிடைக்காத காரணத்திஞல் மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்பதற்காகவே கூட்டுறவுச் சங்கங்கள் தனியாக ஒரு க்ளார்க் போட்டு அரிசி, கோதுமை போன்ற பண்டங்களை மக்களுக்கு வினியோகித்து வருகிருர்கள். விற்பனை வரிக்காக அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் கணக்கு எழுதிவைக்க வேண்டுமென்ருல் அதற்கென்று கிளார்க் போடமுடியாத நிலையில் இருக்கிருர்கள். இருக்கிற ஒரே ஒரு ஆளிஞலும் அவர்கள் கொடுக்கிற சம்பளத்தில் இந்த வேலைகளைச் செய்ய முடியாது. ஆகவேதான் உணவுப் பண்டங்களைப் பொறுத்தவரையிலாவது விற்பனை வரிச் சலுகை அளிப்பது மிகவும் உதவியாக இருக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்னொரு முக்கியமான விஷயத்திலும் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும். வியாபாரிகளை, வர்த்தக சமூகத்தினரை மொத்தமாகத் திருடர்களாகவோ, வரி ஏமாற்றுகிற்வர்களாகவோ கருதிவிடக்கூடாது. ஓரளவு கண்ணியமான முறையில் வியாபாரம் செய்கிற வியாபாரிகளும் இருக்கிருர்கள் என்கிற கண்ணோட்டத்தோடு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமே தவிர ஒரேயடியாக வர்த்தக சமூகத்தினரை நூறு சதவிகிதம் வரி ஏய்ப்பு செய்கிறவர்களாகக் கருதிவிடக்கூடாது. மேல் நாட்டில் உள்ளவர்களைப் போல் " ஒழுங்காக வரி செலுத்துவதிலே, நான்தான் அதிகமாகச் செலுத்தியுள்ளேன்" என்று பெருமைப்படுவதிலே சந்தோஷம் அடைகிறவர்களும் இருக்கிருர்கள். ஆகவே பொதுவாக எல்லா வியாபாரிகளுக்கும் தொல்லை கொடுக்கக் கூடாது.

20th March 1965] [திரு. ஜே. மாதா கவுடர்]

இன்னும் வியாபாரிகள் மாதா மாதம் விற்பனைக்கு ஏற்ற வகையில் வரியைக் கொடுத்து வந்துவிடுகிறார்கள். வருஷக் கடைசியில் மொத்த டர்ன்ஓவர் இவ்வளவு என்று கணக்கைக் காட்டி கட்டியுள்ள மொத்த வரிப்பணத்தையும், கட்டவேண்டியதையும் சரி செய்துவிடவேண்டும். அப்படிக் கணக்குப் பார்க்கிறபோது கணக்குக்கு அதிகமாக டர்ன்ஓவர் இருக்கக் கூடும். ஆகவே கூடுதலாக ஐநூறு கட்டுங்கள், ஆயிரம் கட்டுங்கள், கட்டிவிட்டு வேண்டுமானால் அப்பீல் செய்து கொள்ளுங்கள்'' என்று சொல்வது சரியல்ல. ஒரு கோர்ட்டிலே கூட 500 ரூபாய் அபராதம் போட்டால், அவர் மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொள்வதாக இருந்தால் இந்த 500 ரூபாய் அபராதத்தைக் கட்டாமல் இருக்க ஸ்டே பெற முடியும். ஆனால் விற்பனை வரியைப் பொறுத்தவரையில் பணத்தைக் கட்டிவிட வேண்டும், அப்புறம்தான் அப்பீல் செய்துகொள்ளவேண்டும் என்று சொல்வது உசிதமாக இருக்காது. ஆகவே இதைப் பரிசீலனை செய்து அப்பீல் முடியும் வரையில் ஸ்டே கொடுக்க மேல் அதிகாரிகளுக்கு அதிகாரத்தை வழங்கினால் இந்தப் பிரச்சினைக்கு இடம் இருக்காது என்று சொல்லிக் கொண்டு இந்த மானியத்தை ஆதரிக்கின்றேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த விற்பனை வரி மானியக் கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணையை ஒட்டி நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

இந்த விற்பனை வரி 1937-ம் ஆண்டு அரை சதவீதமாக ஆரம்பத்தில் இருந்து, இப்பொழுது ஒரு சில பொருள்களுக்கு 5 சதவிகிதமாகவும், ஒரு சில பொருள்களுக்குப் பலமுனை விற்பனை வரி என்ற பெயரில் 1 சதவிகிதம், 2 சதவிகிதம் என்று கூடிக்கொண்டே செல்கின்ற நேரத்திலே பொருள்கள் பல கைகளுக்கு மாறுகின்றபொழுது 10 சதவிகிதம் ஆகி, ஒரு பொருளின் விலை 100 ரூபாய் என்றிருந்தால், அது 110 ரூபாய் அல்லது 115 ரூபாய் என்று உயர்ந்து, கடைசியாக வாங்குவோர் கைகளுக்குச் செல்கின்ற நேரத்திலே 100 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டிய பொருளை 125 ரூபாய் கொடுத்து வாங்கக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தால், இந்த வரியினுடைய தன்மை நேர்முக வரியா, அல்லது மறைமுக வரியா, இது யார் யாரைப் பாதிக்கிறது என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வரியைப் பொறுத்தவரையில், ஒரு சில ஆடம்பரப் பொருள்களுக்கு விற்பனை வரியாகப் போட்டிருந்தாலும், அன்றாட வாழ்க்கைக்கு அத்யாவசியமான பொருள்களுக்கு இது மறைமுக வரியாகத்தான் விதிக்கப்பட்டிருக்கிறது. மறைமுக வரி என்றாலே அது ஏழை எளியவர்களை, பாட்டாளிகளைத்தான் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்த வரியினுடைய முழுப் பளுவும், ஏழை எளியவர்கள், பாட்டாளிகள் மீதுதான் சுமத்தப்படுகிறது. இப்படிச் சொல்கிற நேரத்தில் ஆடம்பரப் பொருள்களுக்கு விற்பனை வரி ஒன்றுமில்லையா என்று அமைச்சர் அவர்கள் கேட்கக்கூடும். நான் சொல்கின்ற இந்தக் கருத்து அத்யாவசியமான உணவுப்பொருள்கள், அதையொட்டிய உப பொருள்களாக இருக்கின்றவைகளுக்கு விற்பனை வரி விதிவிலக்கு அளித்தால் நிச்சயமாக நாட்டிலே உள்ள பாமர மக்கள் எல்லோரும், அத்யாவசிய உணவுப் பொருள்களை வாங்குகின்ற 100-க்கு 60 சதவிகிதத்தினர் இந்த அரசாங்கத்தை வாழ்த்துவார்கள் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே நேரத்திலே இந்த ஆடம்பரப் பொருள்களை உபயோகிப்பவர்கள் நடுத்தர நிலையிலே உள்ளவர்களும் மேல்மட்டத்திலே இருப்பவர்களும்தான். ஆகவே, அந்த ஆடம்பரப் பொருள்களின் மீதான விற்பனை வரியை ஒரளவு கணிசமாகவோ, அல்லது 100-க்கு 100 சதவிகிதமோ உயர்த்தலாம். ஏனென்றால் மேல்மட்டத்திலே இருப்பவர்களும், நடுத்தர நிலையிலே இருப்பவர்களும் தான் ஆடம்பரப் பொருள்களை உபயோகிப்பதால் அவர்கள் வரி கொடுக்கக்கூடிய சக்தியுள்ளவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு அந்த வரியைக்

கொடுக்கும் சக்தி நிச்சயமாக உண்டு. மேலும் இந்த ஆடம்பரப் பொருள்களின் பட்டியலில் சில பொருள்களைச் சேர்த்திருப்பதைப் பார்க்கலாம். இன்னும் ஒரு சில பொருள்களையும் அந்தப் பட்டியலிலே சேர்த்து வரியையும் அதிகரிக்கலாம். அப்படிச் செய்தால், உணவுப் பொருள்களின் மீதான வரிக்கு விலக்கு அளிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுவும் விலைவாசிகள் எல்லாம் உயர்ந்துவிட்ட இந்த நேரத்தில் அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட கருத்தை அறிவித்தால் மக்கள் அனைவரும் மட்டற்ற மகிழ்ச்சியடைவார்கள் என்பதில் எள்ளளவும் இந்தத் தரப்பிலோ அல்லது அந்தத் தரப்பிலோ சந்தேகம் இருக்காது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த விற்பனை வரியைப் பொறுத்த அளவிலே சிறுசிறு வியாபாரிகள் பெருத்த தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். பெரிய வியாபாரிகள் தொல்லைக்கு ஆட்படவில்லையா என்று கேட்கக்கூடும். ஒரு சில பெரிய வியாபாரிகள் தொல்லைக்கு ஆட்படுகிறார்கள். ஆனால் சிறிய வியாபாரிகளில் பெரும்பான்மையினர் தொல்லைகளுக்கு ஆட்படுகிறார்கள். சிறிய வியாபாரிகள் 2,000, 3,000 என்று முதல் வைத்துக்கொண்டு வியாபாரம் ஆரம்பிக்கிறார்கள். மற்றும் வேறு யாரிடமிருந்தாவது 2,000 3,000 என்று கடன் வாங்கி வியாபாரம் செய்கிறார்கள். அவர்கள் வியாபாரத்தில் நாணயமாக நடந்துகொண்டால் அந்த 4,000 ரூபாயை வைத்துக்கொண்டு, 4,000 ரூபாய் அளவுக்கு முதல் இல்லாமலே வியாபாரம் செய்யலாம். அப்படிப்பட்ட வியாபாரிகளைத் திடீரென்று சோதனை செய்து அவர்களுக்கு 4,000, 5,000 என்ற முறையிலே பெனல்டி, அதாவது அபராதம் விதிக்கப்படுகிறது. அதனால் மனம் உடைந்து தற்கொலை செய்து கொள்கின்ற அளவுக்கு வந்துவிடுகிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். சேலத்தில் ராமலிங்கம் என்பவர் இதனால் தற்கொலை செய்து கொண்டார் என்பதைப் பத்திரிகைகளில் பார்த்திருக்கிறோம். இதனால் வியாபாரிகளுக்கு ஆதரவு தரவேண்டும், அபராதம் விதிக்கக்கூடாது என்று யாரும் கருதிவிடக்கூடாது. போடப்படுகின்ற தொகை எவ்வளவு பொருள்கள் கைப்பற்றப்பட்டனவோ அந்தப் பொருள்களுடைய மதிப்பில் 1 சதவீதமோ அல்லது எந்த அளவுக்கு விதித்தால் போதுமென்று தோன்றுகிறதோ அந்த அளவுக்குத்தான், அதாவது 100, 200 என்ற முறையிலேதான் விதிக்கவேண்டுமே தவிர, அதிகாரிகள் இரண்டு, மூன்று மடங்கு அதிகமாக விதிக்கின்ற நேரத்திலே அவர்கள் முதல் வைத்திருக்கின்ற அளவை விட அதிகமான அளவுக்கு 10,000, 20,000 என்ற அளவுக்குப் பொருள்களை வைத்திருக்கின்ற காரணத்தால் திடீரென்று பிடிக்கப்பட்டு அதிகமான அளவுக்கு அபராதத்தைப் போட்டால் அவர்கள் வாழ்க்கையிலே இருள் சூழ்ந்துவிட்டது என்ற எண்ணத்தில் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். பத்திரிகைகளிலும் பார்க்கிறோம். ஆகவே, விற்பனை வரி ஒரு சிலருடைய தற்கொலைக்குக் காரணமாக இல்லாமல் இருக்கவேண்டுமானால் போடுகின்ற அபராதத் தொகை அதிகமாக இருக்கக்கூடாது. போடப்படுகின்ற அபராதத் தொகை இருக்கக்கூடிய சரக்குகளின் மொத்த மதிப்பிற்கு ஏற்றாற்போல் ஒரு புரகிரஸிவ் ரேட்டாக, ரூ 50,000 என்ற அளவுக்கு அதிகமாக இல்லாமல் இருந்தால் நன்றாக இருக்குமென்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அப்படியிருந்தால் வியாபாரிகள் தற்கொலை செய்துகொள்வதற்குத் துரத்தப்படாத நிலையில் இருப்பார்கள் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, விற்பனை வரி விதி முறைகள், பிலேட்டட் பேமெண்டுகளுக்கு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வரியைக் கட்டிவிட வேண்டும், அப்படிச் செலுத்தாத வியாபாரிகளுக்குப் பெனல்ட்டி போட வேண்டும், அவர்கள் அபராதம் கட்டவேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. அந்த விதிமுறையைச் சர்க்கார் எந்த அளவுக்குச் செயல் முறையில் நடைமுறையில் கொண்டு அதன்படி வசூல் செய்கிறார்கள் என்று பார்த்தால் நிச்சயமாக வருத்தப்படவேண்டியிருக்கிறது. சென்னை, சேலம், வேலூர் போன்ற நகரங்களில் உள்ள வியாபாரிகள் குறிப்பிட்ட காலத்திற்குப்

20th March 1965] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

பின்னுல்கூட வரியைச் செலுத்திஞல் அவர்களுக்குப் பெனல்ட்டி தொகை போடுவது கிடையாது. தாலூகா சென்டர்களில, அல்லது கிராமங்களிலே உள்ள வியாபாரிகள் குறித்த காலத்திற்குள் வரியைச் செலுத்தியே ஆகவேண்டும். அப்படிச் செலுத்தாவிட்டால் அவர்களுக்கு நிச்சயமாகப் பெனல்ட்டி உண்டு. அவர்களிடமிருந்து மட்டும் பெனல்ட்டி வசூலிக்கப் படுகிறது. ஆகவே, இந்த விதிமுறையில் முரண்பாடு இருக்கிறது. கிராமங்களிலே வரியைச் செலுத்தாவிட்டால் கண்டிப்பாக பெனல்ட்டி வசூல் செய்யப்படுகிறது; சென்னையைப் போன்ற நகரங்களிலே குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னுல் வசூல் செய்தாலும்கூட அபராதம் போடப்படுவதில்லை. இது சரியான நடைமுறைதானு? இது நியாயம்தானு என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிரேஸ் டைம் எல்லாம் போக, கிராமங்களிலே அபராதத் தொகை வசூலிக்கப்படுகிறது; நகரங்களிலே வசூலிக்கப்படுவது இல்லை என்ற வகையிலே பாகுபாடு செய்யப்படுகிறது. ஆகவே, இந்த விதி முறையிலே மாறுபாடு இருக்கக் கூடாது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல், எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸைப் பொறுத்தவரையில் அது அநேகமாக நகராட்சி மன்றங்களுக்கும், ஒன்றிப்பு மன்றங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் இருந்து வருகிறது. நகரங்களிலே சினிமாக் கொட்டகைகளிலே தணிக்கை செய்வதற்கு கமிஷனருக்கு அதிகாரம் இருக்கிறது. அவர் ஒருவர் தணிக்கை செய்யக்கூடியவராக இருக்கிற காரணத்தால் அவர் அநேகமாக அதிகமாகத் தணிக்கை செய்ய முடியவில்லை. ஆகவே, இந்த அதிகாரத்தைப் பரவலாக முனிசிபல் ஹெல்த் இன்ஸ்பெக்டர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ கொடுத்தால், கொடுத்தால் என்று சொல்லுகிற நேரத்தில், அவர்கள் ஷிப்டு முறையில் ஒவ்வொரு நாளும் சென்று தணிக்கை செய்யக்கூடிய அளவிலே அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்தால், வரி ஏய்ப்பே இல்லாத அளவுக்கு வந்துவிடும். மேலும், இதனுல் 2, அல்லது 3 மடங்கு அதிகமாக வரி கிடைக்கும். எல்லாச் சினிமாக் கொட்டகைக்காரர்களும் அப்படியே வசூலிக்கிற பணத்தையெல்லாம் உறுதியாகக் கொடுத்துவிட மாட்டார்கள் என்பதை உறுதியாகச் சொல்லலாம். ஒழுங்காகக் கொடுக்கிறவர்கள் ஒரு சில பேர் இருக்கலாம். இது ஏதோ தமாஷா வரி, தமாஷாகக் கொடுக்கக்கூடிய வரி என்று சொன்னுலும்கூட, வசூல் செய்யப்படும் பணம் யாருடைய இடத்திலே போய்ச் சேர வேண்டுமோ அங்குப் போய்ச் சேருகிறதா என்பதைப் பார்க்கவேண்டும். ஆகவே, தணிக்கை செய்வதற்குப் பரவலாக அதிகாரிகளை நியமித்து நல்ல முறையிலே தணிக்கை செய்தால் வரி ஏய்ப்பே இல்லாதபடி செய்து விடமுடியும். அப்படிச் சொல்கின்றபொழுது அந்த மன்றங்களுடைய வருமானம் அதிகரிக்கும். அந்த மன்றங்களுடைய வருமானம் அதிகரிக்குமானுல் சர்க்கார் அந்த மன்றங்களுக்குக் கொடுக்கக்கூடிய கிராண்டைக்கூட ஓரளவுக்குக் குறைத்துக்கொள்ள ஒரு வசதி ஏற்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே தணிக்கை செய்வதற்கான அதிகாரங்களைப் பரவலாக்கவேண்டும். அந்த அதிகாரங்களை யார் யாருக்குப் பரவலாக்கலாம் என்பதை நல்ல முறையிலே சிந்தித்துப்பார்த்து அதிகாரங்களைப் பரவலாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் குதிரைப் பந்தயத்தைப் பொறுத்தவரை அது நிச்சயமாக ஒழிக்கப்பட வேண்டிய ஒன்று. மது தீயது என்று அதை ஒழித்த அரசாங்கம் குதிரைப் பந்தயம் தீயது என்று ஏன் ஒழிக்க முன்வரவில்லை என்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. மது எப்படி தீயதோ அதே போன்று சூதும் தீயதுதான். சென்னையிலிருப்பவர்களைப் பார்த்தால் அதன் தீமையை நன்ருக உணர்ந்து கொள்ள முடியும். குதிரைப் பந்தயத்திற்குப் போகிறவர்கள் ரிட்டர்ன் டிக்கட் வாங்கிக் கொள்கிருர்கள். திரும்பி வருவதற்குக் கூட காசு இருக்காது என்ற நிலையில் அந்த மாதிரி டிக்கட் வாங்கி கொள்கிருர்கள். இந்த 1965-ம் ஆண்டிலே வருமானம் மற்ற வகைகளிலே பெருகக்கூடிய நிலையிலும் அதை விட்டு வைத்திருப்பது நல்லதல்ல. இது வருந்தக் கூடிய ஒன்று. குதிரைப் பந்தயத்தில் இருந்து வருகிற 11-30 a.m.

பொருள் எதுவும் நல்ல பொருள் அல்ல, அத்தகைய பொருள் வேண்டாம் என்று முடிவு செய்து "குதிரைப் பந்தயத்தை ஒழியுங்கள், ஒழியுங்கள்" என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ர. ஜீவரத்னம்: மதிப்புக்குரிய துணைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக்கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அமைச்சர் அவர்களுடைய ஆரம்ப உரையிலே பல நல்ல அம்சங்களையெல்லாம் சொன்னார்கள். பல விலைபொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விதி விலக்கு அளித்திருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். மகாத்மா காந்தியடிகளால் வகுக்கப்பட்ட கிராம உத்தியோக் பவனில் செய்யப்படுகிற பொருள்களுக்கெல்லாம் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதையும் வரவேற்கிறேன். சேல்ஸ் டாக்ஸ் போடும் பழக்கத்தை, சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்கு மாறாக ரத்து செய்து விடவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதையும் நான் வரவேற்கிறேன். அதே போன்று பொருள்களுக்கு ஒருமுனை வரி விதிப்பது நல்லதா அல்லது பல முனை வரி விதிப்பது நல்லதா என்பது பற்றிய கருத்தை இந்த மன்றத்திலுள்ள அங்கத்தினர்கள் கூற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். என்னைப் பொறுத்தவரை ஒரு முனை வரியை ரத்து செய்து விட்டுப் பல முனை வரியைப் போடுவதைத்தான் ஆதரிக்கிறேன். பலமுனை விற்பனை வரி என்றால் அதிகமாக ஒன்றும் போய்விடாது. இரண்டு அல்லது மூன்று கைதான் மாறும். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமாக வரி அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு போனால் பல சங்கடங்கள் ஏற்படும். சில இடங்களில் அதிகமான வரியை வசூலித்துவிடுவதைக்கூட நான் பார்த்து இருக்கிறேன். ஒரு முனை விறபனை வரியை மாற்றி வியாபாரிகளுடைய கோரிக்கைக்குச் செவி சாய்த்துப் பல முனை வரியாக ஆக்குவதோடு வரியின் அளவை அரை சத விகிதமாவது குறைத்தால் நல்லது என்று இந்தக் கட்டத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய தேசத்தின் ஜீவ நாடி விவசாயம், தொழில், வியாபாரம் ஆகிய மூன்றும் ஆகும். வியாபாரிகளிடத்தில் அரசாங்கம் அதிகமாக நம்பிக்கை வைக்கவேண்டும். அதே சமயத்தில் வியாபாரிகளும் தங்களுடைய கடமையை அரசாங்கத்திற்குச் செவ்வனே செய்ய வேண்டும். நான் ஒரு வியாபாரி என்ற முறையில் சொல்லிக் கொள்கிறேன். பொதுவாக வியாபாரிகள் தவறுதல் செய்யத் துணியமாட்டார்கள். பயந்த சுபாவம் உள்ளவர்கள் வியாபாரிகள். இன்று தென்னகத்திலுள்ள கோயில்களுக்கெல்லாம், கோயில் கோபுரங்கள் கட்டுவதற்கெல்லாம் வியாபாரிகள் தாராள சிந்தனையுடன் நன்கொடைகளை அளித்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட வியாபாரிகளிடத்தில் நம்பிக்கை வைத்து, அவர்கள் ஏதாவது தவறு செய்திருந்தாலும் அவர்களிடம் இன்னின்ன முறையில் தவறு செய்கிறீர்கள் என்று எடுத்துக் கூறினால் அவர்கள் கண்டிப்பாகத் திருத்திக் கொள்வார்கள் என்பதை அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சேல்ஸ் டாக்ஸை சரியானபடி வசூலிக்க அமைச்சர் அவர்கள் நல்ல அமைப்பை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஒவ்வொரு பகுதியிலும் செக் போஸ்ட் வைத்திருக்கிறார்கள். அந்தக் கண்காணிப்பு முறையை விரிவு படுத்த வேண்டும். அதோடு எந்த வியாபாரியாக இருந்தாலும் அவன் விற்கின்ற பொருள்களுக்கு மூன்று பில்கள் வைத்து ஒன்று கடையிலும், ஒன்று வாங்குகிறவர்களிடத்திலும், ஒன்று செக் போஸ்டில் காண்பிப்பதற்கும் என்ற முறையிலே மூன்று பில்களைக் கொடுக்கவேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அந்த மாதிரிப் பில்களுடன் வரும் சாமான்களுக்கு அதிகத் தொந்தரவு கொடுக்காமல், அந்த லாரிகளை அதிக நேரம் காத்திருக்க வைக்காமல் இருக்க வழி செய்ய வேண்டும். அதற்கு இந்த முறையிலே எந்தவிதமான ஏமாற்றமும் ஏற்பட முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

20th March 1965] [திரு. ர. ஜீவரத்னம்]

நம்முடைய மாகாணத்திலே விற்பனை வரி விதிப்பதிலே சத விகிதம் கூட்டிப் போடும் முறையைப் பற்றி மெம்பர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இந்த சதவிகித முறை இருப்பதால்தான் வியாபாரிகள் ஏமாற்றக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. நியாயமாக ஒழுங்கான கணக்கு களை வியாபாரிகள் கொண்டு போய்க் காண்பித்தால் கூட அதிகாரிகள், என்ன வியாபாரம் ஆகியிருக்கிறதோ அதற்கு மேல் 20 சத விகிதம் சேர்த்து அதற்குத் தக்கபடி வரி போட்டு விடுகிறார்கள். இதற்காக பத்து நாள், பதினைந்து நாள் அந்த ஆபீசுக்கு வியாபாரி அலைந்து கடைசியில் எதையாவது போட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லி அந்த வரியைக் கட்டிவிடுகிறான். இந்த முறை கூடாது. கணக்கில் இன்ன முறையில் தவறு இருக்கிறது என்று சுட்டிக் காட்டி அதன் பேரில் வரியைப் போட்டால் அதிலே தவறுதல் இல்லை. அந்த மாதிரிச் செய்தால் வியாபாரிகள் ஒழுங்காகக் கணக்கை வைப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

சில உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து நிவாரணம் அளிக்கவேண்டும். இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் எற்கெனவே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி இன்னும் தீவிரமாகச் சிந்தித்து இந்த ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் உணவுப் பொருள் களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும். அதற்காக மத்திய சர்க்காரிலிருந்து எதாவது மானியம் பெற முடியுமா என்று பார்த்து அதற்கும் முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விற்பனை வரித் துறைதான் நமது மாகாணத்திற்குப் பெரிய வருவாய்த் துறையாக இருக்கிறது. 30 கோடி ரூபாய்க்கும் அதிகமாக அதிலிருந்து வருகிறது. அந்த அலுவலகத்திற்குப் போதுமான கட்டிட வசதிகள் கிடையாது. பெரும்பாலான விற்பனை வரி அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. வியாபாரிகள் தங்கள் கணக்குப் புத்தகங் களை அங்கே கொண்டு போய் வைத்தால் ஒருவர் கணக்கை மற்றவர்கள் பார்க்கும் நிலைமை இருக்கிறது. பொதுவாக எந்த வியாபாரியும் தன்னு டைய கணக்கை இன்னொரு வியாபாரி பார்ப்பதை விரும்பமாட்டான்; அதே போல் தானும் மற்றவர்கள் கணக்கைப் பார்க்க விரும்பமாட்டான். ஆகவே, ரகசியங்கள் பாதுகாக்கப்படக் கூடிய முறையிலே நல்ல கட்டிடங் களை விற்பனை வரி அலுவலகத்திற்காக ஆங்காங்கு கட்டித் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். வியாபாரிகள் தங்களுடைய கணக்கு களை எடுத்துக்கொண்டு காலை $10\frac{1}{2}$ மணிக்கு அந்த அலுவலகத்திற்குச் சென்றால் திரும்ப மாலை $5\frac{1}{2}$ மணியாகி விடுகிறது. அங்கே அதுவரை உட்காரக்கூட வசதி கிடையாது. வியாபாரிகளுக்கும் கௌரவத்தைக் கொடுத்து, அவர்களும் சமூகத்தில் அந்தஸ்து உள்ளவர்கள் என்று நினைத்து, உயர்வான அந்தஸ்தை அளிப்போமானால் அவர்களும் நன்றாக நம்முடன் ஒத்துழைப்பார்கள் என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விற்பனை வரி சோதனைகளைப் பற்றியெல்லாம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு வழி இல்லாமல் வியாபாரப் பெருமக்கள் நடந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் தங்களுடைய கணக்குகளைக் கொடுப்பதற்காக அமைச்சர் அவர்கள் மூன்று மாதத் தவணை கொடுத்தார்கள். அந்தக் காலத்தை இன்னும் கொஞ்சம் தாராளமாக்கி, சந்தேகப்படக் கூடிய வியாபாரிகளை அழைத்து "உங்கள் மீது மனுக்கள் வந்திருக்கின்றன, நியாயமான முறையிலே கணக்குகளைக் கொண்டு வாருங்கள் என்றும அவ்வாறு கணக்குகளைக் கொடுத்தால் வேண்டிய உதவிகளைச் சர்க்கார் செய்யும்" என்றும் சொன்னால் அதற்கு எல்லா வியாபாரிகளும் செவி சாய்ப்பார்கள் என்று வியாபாரி என்ற முறை யில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த முறையைப் பரிசீலித்துப் பார்க்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

[20th March 1965

***திரு. செ. சீனிவாசன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தொழில் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த விற்பனை வரி மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் கூற முற்படுகிறேன். அமைச்சர் அவர்கள் தம் முன்னுரையில், தற்போது இருக்கும் ஒரு முனை விற்பனை வரியைப் பல முனை வரியாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது, அது குறித்து இங்கு சட்ட மன்ற அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தால் பின்னால் அது பற்றி சட்டம் இயற்றலாமா என்ற ஒரு காரியத்திற்கு உதவியாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டார்கள். நாம் மாவட்டம் தோறும் மாவட்ட விற்பனை வரி அட்வைசரி கமிட்டிகள் ஏற்படுத்தியிருக்கிறோம். அதில் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளும், வியாபாரிகளுடைய பிரதி நிதிகளும், சட்டசபை அங்கத்தினர்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அங்கு தரப்படும் வாதங்களை எல்லாம் கவனித்து முடிவாக என்ன கருத்துக்கு மாவட்டக் கமிட்டிகள் வருகிறதோ அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்கள் தமது உரையில் குறிப்பிடும்போது ஒரு சில ஐட்டங்களுக்கு விளக்கம் தருவதில் பெரிய தொந்தரவு இருக்கிறது, அதற்காகவாவது இந்த ஒரு முனை வரியை நீக்கிவிட்டுப் பல முனை வரியாக விதிக்கலாமா என்று சொன்னார்கள். பதங்களுக்கு வியாக்கியானம் கொடுப்பது என்ற பிரச்னை 1950-ம் ஆண்டு சட்டத்திற்கு மட்டும் ஏற்பட்டதல்ல. 1938-ம் வருடத்திய விற்பனை வரிச் சட்டத்திலேயே வொர்க்ஸ் காண்ட்ராக்ட் என்ற கட்டம் இருக்கிறது. அது பற்றி இன்று கூட ஹைகோர்ட்டில் கேஸ்கள் இருக்கின்றன. ரிட் எல்லாம் கூட பெண்டிங்காக இருக்கிறது. அச்சாபீஸ்கள், போட்டோ ஸ்டுடியோஸ் போன்றவை வொர்க்ஸ் காண்ட்ராக்ட் டெஃபனிஷனில் வருமா எந்தெந்த வகையில் வரும் என்பது பற்றி வக்கீல்களுக்கிடையேயும், அதிகாரிகளுக்கு இடையேயும் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. டிபார்ட்மெண்டி லிருந்து பலவித விளக்கங்கள் வருகின்றன. ஒரு சில வேலைகளுக்கு ரிபேட் கொடுப்பது மற்ற வேலைகளுக்குக் கொடுப்பதில்லை. எந்த ஷெட் யூலில் சேர்ப்பது என்பதற்காக மட்டுமல்ல. பலதரப்பட்ட வியாபாரிகள் இருக்கிறார்கள். உற்பத்தியாளர்கள், வாங்கி விற்பனை செய்யும் மொத்த வியாபாரிகள். சில்லரை வியாபாரிகள் இம்மூன்று பேர்களின் பிரச்னையும் இதில் அடங்கியிருக்கிறது. இந்த வரி எல்லாம் பொது மக்களிடம் இருந்து தான் வசூலிக்கப்படுகிறது. எல்லா நாடுகளிலும் அது தான் நடக்கிறது. வாங்குவோர் வரி, விற்பனை வரி எதுவாக இருந்தாலும் பிறரிடம் தள்ளி விடுவது தான் வியாபாரிகள் நோக்கம். ஆகவே இதனால் பொது மக்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நாம் பிரத்தியட்சமாகப் பார்க் கிறோம். ஆகவே மாவட்ட ரீதியாக இருக்கும் அட்வைசரி கமிட்டியில் இந்தப் பிரச்னையை எடுத்துச் சொல்லி அவர்கள் முடிவு செய்வதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அடுத்தபடியாக, அமைச்சர் அவர்கள் தம் உரையில் குறிப்பிடும்போது சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸில் 1965–66-க்கு 6 கோடி 40 லட்சம் ரூபாய் வருமானம் வரும் என்று எதிர் பார்க்கிறேன் என்று சொல்கிறார்கள். அதில் எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. சமீபத்தில் உணவு தான்ய கண்ட்ரோல் ஏற்படுத்திய பிறகு பல்லாயிரக்கணக்கான அரிசி வியாபாரிகள் அந்த வியாபாரத்தில் ஈடுபட முடியாமல் அல்லது வெளி மாநிலங்களிலிருந்து அரிசி கொண்டு வர முடியாத ஒரு நிலை இருக்கிறது. அந்நிலையில் இந்த ஐட்டத்தைப் பொறுத்த வரையில் லாஸ் இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே எதிர்பார்க்கிறபடி 6½ கோடி ரூபாய் வரும் என்று எதிர்பார்க்க முடியாது என்பது என் கருத்து. சம்பந்தப்பட்டவர்களுக்கு இது பற்றிக் கூடுதலாகத் தெரிந்திருக்கலாம். இது என் கருத்து. குறைவாகவே வரும் என்பது என் கருத்து. அடுத்தபடியாக, கிண்டி ரேஸ் பற்றி, பெட்டிங் டாக்ஸை ஒழித்துவிடவேண்டுமென்று சில அங்கத்தினர்கள் கூறினார்கள். அதைத் தீவிரமாக நான் ஆதரிக்கிறேன். இன்று மதராஸ், முக்கியமாக கிண்டி என்று சொன்னால், இட்டாலியில் உள்ள மாண்டிகார்லோ நகரம் என்று சொல்வார்களே அது போன்று அது ஒரு சூதாட்டப் பேட்டையாக மாறி விட்டது. அங்கு போகிறவர்களில் பணக்காரர்கள் மிகக் குறைவு.

20th March 1965] [திரு. செ. சீனிவாசன்]

நடுத்தர வகுப்பசைச் சார்ந்தவர்களும், ஏழை மக்களும்தான் ஏராளமான பேர்கள் அங்கு ரேஸுக்குப் போகிறார்கள். சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை ரேஸ் என்றால் டாக்ஸிகள் கிடைப்பதில்லை. ஆகவே இந்த ரேஸை ஒழித்துக் கட்டுவதினால் நமக்கு அதிகப்படி வருமானம் குறைந்தாலும் பரவாயில்லை, வேறு வரி போட்டாலும் கூடப் பரவாயில்லை, இதை கண்டிப்பாக ஒழித்தே தீரவேண்டும். ஊட்டிக்கு ஸீஸன் சமயத்தில் போனால் இருக்கவே முடிவதில்லை. இதனால் குதிரைகளின் தரம் வளரும் என்று ஒரு கருத்து சொல்லப்படுகிறது. அப்படிக் குதிரைகளின் தரம் உயருவதாக இருந்தாலும் சரி நாட்டு மக்களின் நல்வாழ்வுதான் முக்கியமானது என்று கருதும் இந்த அரசாங்கம் இந்தப் பந்தயத்தை எடுத்து விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்வதினால் எவ்வளவு வரி நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை. இதை எடுத்துவிட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டமன்றத்தில் பேசும்போது ஒரு கனம் அங்கத்தினர் பாரபட்டி ராஃபிள் தடைப்பட்டுப் போய்விட்டது என்று சொன்னார்கள். இன்னொரு அபாயம் தமிழ் நாட்டில் உலவுகிறது. அது இல்லஸ்ட்ரேட்டட் வீக்லியில் வரும் க்ராஸ்வேர்ட் பஸில். லிட்டரரி பாஸ்டைம் என்ற பெயரால் 10,000, 15,000 ரூபாய் என்று பரிசு வைத்துக் கொடுக்கப்படுகிறது. முன்பு தமிழ் நாட்டில் ஆனந்த விகடன் போன்ற பத்திரிகைகள் இப்படிப் பட்ட போட்டிகள் நடத்திக்கொண்டிருந்தன. ஆனால் இப்பொழுது தமிழ் நாட்டில் அப்படி எந்தப் பத்திரிகையும் கிடையாது. அப்படியிருக்க பம்பாயிலிருந்து வருகிற இந்தப் பத்திரிகைக்கு மட்டும் ஏன் தமிழ் நாட்டில் சலுகை கொடுக்கப்படுகிறது? ஏன் சர்க்கார் அதை அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இதனால் மக்கள் பாதிக்கப் படுகிறார்கள். நாட்டில் எந்தவிதமான போட்டியும் இல்லாமல் இருக்கச் செய்ய வேண்டும். இல்லஸ்ட்ரேட்டட் வீக்லிக்கு தமிழ்நாட்டில் இருந்து ஏராளமான பணம் போகிறது. அதையும் தடை செய்யவேண்டும். இல்லா விட்டால் இங்கும் பத்திரிகைகள் பகுத்தறிவுப் போட்டி நடத்துவதற்கு தடை இருக்கக்கூடாது. ஒரு சமமான கொள்கை வேண்டுமென்றுதான் சொல்கிறேன். டூரிங் சினிமாக்களுக்கு எண்டர்டெயிண்மெண்ட் டாக்ஸ் அதிகமாகப் போடப்படுகிறது என்று ஒரு கனம் அங்கத்தினர் கூறினார்கள். எப்படிப்போட்டாலும் டாக்ஸ் எவேஷன் இருக்கத்தான் செய்யும். டாக்ஸ் எவேஷன் இல்லாவிட்டால் பத்திரிகைகளிலும், பொது மக்களிடையேயும் கருப்புப் பணம் என்ற பேச்சே வந்திருக்காது. ஒன்று, இதற்கு முன்பு அதிகாரிகள் சரியாகக் கணக்குப் பார்க்காததால் கருப்புப் பணம் இருக்கவேண்டும். இல்லை எனில் கணக்குக்கு அதிகமாகச் சம்பாதித்திருக்கவேண்டும். ஆகவே, பெரிய பணக்காரர்கள் பணத்தை எப்படிச் சம்பாதித்து வைக்கிறார்கள் என்ற விவரங்கள் நல்ல அதிகாரிகளுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். எப்படித் தப்பித்துக் போகிறார்கள் என்பதும் அவர்களுக்கும் தெரியும். ஆகவே எதிர்காலத்தில் கருப்புப் பணம் என்ற பெயர் வராதபடி தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். கஸ்டம்ஸில் ஒரு வழி ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஹாலில் பிடிபடுகிற போது இவ்வளவு சத விகிதம் என்று பிடித்த அதிகாரிகளுக்குக் கொடுக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அம்மாதிரித் திட்டத்தை இங்கும் ஏற்படுத்தி சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகளுக்கு ஒரு ப்ரைஸ் ஸ்கீம் ஏற்படுத்தி, அப்படி ஒரு டெஸ்ட் ஏற்படுத்திப் பார்த்தால் நிறையக் கணக்குகளை அவர்கள் பிடிப்பார்கள். அரிசி போன்ற பொருள்களுக்கு வரியை நீக்கி விடலாம். அதிகாரிகளுக்கு நல்ல தெம்பும், பதவி உயர்வும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். முக்கியமாக இந்த விற்பனை வரி என்பது வியாபாரிகளால் கொடுக்கப்படுகின்றது என்று எண்ணிக்கொண்டிருந்தாலும், உண்மையில், மக்களிடத்திலிருந்து வரியை வாங்கி அதை அரசாங்கத்திற்குக் கொடுக்கும் ஏஜெண்டாகத்தான் வியாபாரிகள் பணி புரிகின்றார்கள் என்பதை நாம் தெரிந்துகொள்ள

[திரு. டி. கார்ச்சா கவுடர்] [20th March 1965

வேண்டும். விற்பனை வரி செலுத்துவதில் ஏன் ஏமாற்றுகின்றார்கள் என்பதிலுள்ள அடிப்படையைப் பார்த்தால், போடப்படுகின்ற வரியைக் கொடுக்கமுடியாமல் ஏமாற்றி வருகின்றார்களா அல்லது இதன் மூலமாக மத்திய அரசாங்கத்தால் போடப்படுகின்ற வருமான வரியை ஏமாற்றுவதற்கா அல்லது, சூப்பர் டாக்ஸ் போன்றவைகளை ஏமாற்று வதற்கா என்பதை பார்க்கவேண்டும். இவ்வளவு சேல்ஸ் டாக்ஸ் கட்டினால் இவ்வளவு வருமானம் வந்திருக்குமே, ஆகவே நீங்கள் இவ்வளவு வருமான வரி கட்டவேண்டும், இவ்வளவு வருமான வரியும், சூப்பர் டாக்ஸும் கட்டவேண்டும் என்று சொல்லும்போது, 85 சத விகிதம் அளவுக்கு சூப்பர் டாக்ஸ் கட்டவேண்டுமே என்று நினைத்துத்தான் சேல்ஸ் டாக்ஸ் செலுத்துவதிலும் ஏமாற்றிக்கொண்டிருக்கிற பழக்கம் இருந்து கொண்டிருக்கிறது என்பதை நம்மால் காண முடிகிறது. ஆனால் இந்தப் பழக்கம் எல்லா வியாபாரிகளிடத்திலும் இருக்கிறதா என்றால், தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, பல வியாபாரிகளும் ஒழுங்காக நடந்து கொள்கிறார்கள். பல சில்லரை வியாபாரிகள் தங்களுடைய கணக்கை ஒழுங்காக வைத்துக்கொள்கிறார்கள். ஆனால் அவாகள் தங்களுக்கு இவ்வளவு தான் "டர்ன் ஓவர்" என்று சொல்லி டாக்ஸை அஸஸ் செய்யப்போகும் போது, உண்மையாகவே இவ்வளவு தான் வியாபாரம் ஆகியிருக்கிறது என்று சொன்னாலும் கூட, விற்பனை வரி இலாகா அதிகாரிகள் இது சரியாக இல்லை, ஆகவே இதோடு 20 சத விகிதம் அல்லது 30 சத விகிதம் சேர்த்துப் போடுகிறேன் என்று சொல்லி அதிகமாகப் போட்டு விடுகிறார்கள். இதற்காக அந்த வியாபாரி ஒழுங்காகப் போயிருந்தும் பத்து பதினைந்து நாட்கள் அலைந்து நடந்தும் முடிவாக கம்பவுண்டு செல்கிறார்கள். இதன் காரணமாக ஒழுங்காக இருக்கும் வியாபாரிகள் கூட, அடுத்தவருடம் அஸெஸ்மென்ட்டுக்குப் போகும் போது, தங்கள் வியாபாரத்தைக் குறைவாகக் காட்டி, குறைவான டர்ன் ஓவரைக் காண்பிக்கவேண்டும் என்ற மன நிலை ஏற்படக் கூடிய கட்டாயத்தில் வந்து விடுகிறார்கள். ஆகவே, இதை அமைச்சர் அவர்கள் ஆலோசித்துப் பார்த்து, இப்பேர்ப்பட்ட ஒழுக்கமாக நடந்துகொண்டிருக்கும் வியாபாரி களுக்கு இம்சை கொடுக்காத முறையில் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விற்பனை வரியின் மூலமாக நமக்கு 30 கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்று அமைச்சர் அவர்கள் மதிப்பிட்டார் கள். இந்த 30 கோடி ரூபாயில் உணவு தான்யங்களிலிருந்து எவ்வளவு ரூபாய் வரியாகக் கிடைக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினால் நன்றாக இருக்கும். எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவலின்படி ஒரு கோடி ரூபாய் அளவுக்குத்தான் உணவு தான்யங்களிலிருந்து விற் பனை வரியாகக் கிடைப்பதாக தெரிகிறது. ஒரு கோடி ரூபாய் மட்டும் தான் இதிலிருந்து கிடைக்கிறது என்றிருந்தால், உணவுப்பொருட்களை மட்டும் பொறுத்தவரையில் விற்பனை வரியை நீக்கிவிட்டால் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் மக்களுக்கு நன்மை ஏற்படும், அரசுக்குப் பொருளாதார ரீதியில் கஷ்டங் களும் ஏற்படாது என்பதை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, "விற்பனை வரிக்கு விற்பனை வரி" என்ற ஒரு வரி முறையை நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். பலபேர் இதைப் பார்த்து நகைக்கும்படியான அளவுக்கு இந்த சர்க்கார் என்ன, விற் பனை வரிக்கு விற்பனை வரி என்று விதிக்கிறார்களே என்று பலர் அரசாங்கத்தை ஏசிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், நம்முடைய கனம் அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி சுப்ரீம் கோர்ட்டில் என்ன தீர்ப்பு அளித்திருந்தாலும் சரி பரவாயில்லை என்றெண்ணி, இந்த வரி முறையை நீக்கிச் சலுகை காட்டக்கூடிய வகையில், ஏப்ரல் மாதம் முதல் இதை நீக்குவதாக அறிவித்து இருப்பதற்காக மக்களின் சார்பாக அமைச்சர் அவர் களைப் பாராட்டிக்கொள்கிறேன்.

20th March 1965] [திரு. டி. கார்ச்சா கவுடர்]

அடுத்தபடியாக, எங்கள் ஜில்லாவில் தேயிலை உற்பத்தி சம்பந்தமாக கனம் மாதா கவுடர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு தேயிலை உற்பத்தி வடக்குப் பிரதேசத்திலும், வடகிழக்கு பிரதேசத்திலும், அஸ்ஸாம், டார்ஜிலிங் போன்ற இடங்களில் எல்லாம் பெருவாரியாகத் தேயிலை உற்பத்தி பெருகியிருப்பதால் நம்முடைய தேயிலையை விற்க முடியாத நிலைமை ஏற்பட்டு, இப்போது எங்கள் ஜில்லாவிலுள்ள பல பாக்டரிகளிலும் தேயிலை தேங்கிக் கிடக்கின்றன. போன ஆண்டு இதே நேரத்தில் ஒரு கிலோ 4 ரூபாய் 50 ந.பை. என்று மேட்–டீ. விற்றுக்கொண்டிருந்தது, இப்போது 3 ரூபாய் 25 ந.பை. என்ற நிலையில் யாரும் சீந்துவாரின்றி பல பாக்டரிகளிலும் பல ஆயிரக்கணக்கான கிலோ டீ அப்படியே தேங்கிக் கிடக்கின்றன. தேயிலை நமக்கு முக்கியமான பொருளாக இருக்கிறது. ஏறத்தாழ 18 கோடி ரூபாய் அளவுக்கு அந்நிய நாட்டுச் செலாவணியைச் சம்பாதித்துக்கொடுக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தப் பொருளுக்கு நாம் 5 சதவிகிதம் சேல்ஸ் டாக்ஸை பூராவும் தள்ளிக் கொடுத்தால் நலமாக இருக்கும். இப்போது விலை குறைவாக இருக்கிறது. ஆகவே இந்தத் தேயிலையைப் பொறுத்த வரையில் வரியை தள்ளிக் கொடுக்கவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பெட்டிங் டாக்ஸ் பற்றி கூறினார்கள். ஊட்டியைப் பொறுத்தவரையில் குதிரைப் பந்தயம் நீடிக்கவேண்டும் என்று தான் சொல்லவேண்டிய நிலைமையில் இருக்கிறேன். நான் ஒரு காங்கிரஸ் அங்கத்தினர், அந்த முறையில் காந்திஜியின் லட்சியப்படி குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவேண்டும் என்ற கருத்துடையவன்தான், என்றருந்தாலும், ஊட்டியில் இருக்கின்ற பிரச்னையைப் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்கள் நான் சொல்லுகின்ற கருத்தை ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். எங்கள் பகுதி பொருளாதார நிலையில் மிகவும் பிற்பட்ட பகுதி. டூரிஸ்ட் சென்டர் என்ற முறையில்தான் அந்த ஜில்லாவை அபிவிருத்தி செய்ய முடியும், அதல்லாமல் மற்ற சமவெளிகளில் செய்வதைப்போல் கைத்தொழில், அல்லது வேறு எந்தவிதமான தொழிலையோ ஏற்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கு முடியாது என்பதை அமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார்கள். இந்த நிலைமையில் நீலகிரிக்கு மக்கள் வருகிறார்கள் என்றால்—அதிலும் பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களிலிருந்தெல்லாம் மக்கள் வருகிறார்கள் என்றால்—பெரிய ஹெல்த் சென்டர், டூரிஸ்ட் சென்டர் என்ற காரணத்திற்காகத்தான். அதிலும் முன்பு அதாவது மதுவிலக்கு இல்லாமல் இருந்த நேரத்தில் கூட்டம் அதிகமாக இருந்தது. இதன் காரணமாக அந்த இடத்தில் ஆயிரக்கணக்கான ரூபாய் புழக்கத்திலிருந்த காரணத்தால் மக்களிடத்திலும் பொருளாதார அபிவிருத்தி அடைந்து உயர்ந்திருந்தார்கள். இப்போது மதுவிலக்குச் சட்டம் வந்ததற்குப் பிறகு நீலகிரிக்கு மக்கள் அதாவது யாத்ரீகர்கள் வருவது குறைந்துகொண்டே வருகிறது. இப்போது ஒன்றிரண்டு பேர்கள் வருகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் இந்தக் குதிரைப் பந்தயம் இருப்பது என்பது தான். அதோடு ரெஸ்ட் எடுத்துக்கொள்வதற்கும் ஒரு சில பேர்கள் வருகிறார்கள். இந்த நிலைமையில் அங்குள்ள குதிரைப் பந்தயத்தில் பெடிங் டாக்ஸாக கிடைப்பதை எல்லாம் அங்குள்ள முனிசிபாலிட்டிக்குக் கொடுத்துவிடலாம் என்கிற நிலையை ஏற்படுத்திக் கொடுத்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கட்டிடங்களைப் பற்றிச் சொல்லும்போது, ஊட்டியில் கட்டடங்களுக்குப் பெரும் நெருக்கடியாக இருக்கிறது. அனேக அரசாங்க ஆபீஸ்கள் தனிப்பட்ட கட்டிடங்களில் தான் நடந்துகொண்டு வருகின்றன. விற்பனை வரித் துறை அலுவலகமும் தனிப்பட்ட கட்டிடத்தில் தான் இருந்து வருகிறது. சர்க்கார் அலுவலகங்கள் தனிப்பட்ட இடங்களில் இருப்பதால், அதிகாரிகளோ, இன்ஜினியர்களோ வந்து குடியிருக்க இடம் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அங்கேயுள்ள எல்லா சர்க்கார் அலுவலகங்களையும் ஒரே கட்டிடத்தில் வைக்கின்ற முறையில், சர்க்காரே தனியாகக்

[திரு. டி. கார்ச்சா கவுடர்] [20th March 1965

கட்டிடம் கட்டி இந்த ஆபீஸ்களை எல்லாம் அந்த இடத்திலேயே ஏற் படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள் கிறேன்

* **திரு. கே. ஏ. மதியழகன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பொது விற்பனை வரி மானயம் குறித்து இன்றைய தினம் நடைபெற்ற இந்த விவாதத்தில் நான் கலந்துகொள்வதற்கு மிக்க மகிழ்ச்சி அடை கிறேன். இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த நமது கனம் தொழில் அமைச்சர் அவர்கள் இன்றைக்கு விற்பனை வரியின் மூலம் நம்முடைய மாநிலத்தின் கருவூலத்திற்கு எவ்வளவு நிதி கிடைத்திருக்கிறது என் பதையும் குறிப்பாக நடைமுறை ஆண்டில் விற்பனை வரி இலாகா அதிகாரி கள் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையின் காரணமாக ஆறு அல்லது ஏழு கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தி யையும் அறிவித்தார்கள். கடந்த வேனிற்காலம் முதல் கடந்த ஓராண்டு காலமாக பொது விற்பனை வரி சம்பந்தமாக இலாகாவின் வ்வகாரம் சம்பந்தமாக, பல்வேறு விவரங்களையும் நாம் நன்ருக அறிந்திருக் கிருேம். கடந்த ஏப்ரல் மாதம் வரி ஏமாற்றுகிறவர்களை விற்பனை வரி கட்டுவதிலிருந்து தப்பித்துக்கொள்கிறவர்களை—அதிலும் கனம் சகோ தரி அனந்தநாயகி அவர்கள் குறிப்பிட்டது போல்—இதை விற்பனை வரி என்று கூட சொல்லத் தேவையில்லை, வாங்கும் வரி என்று தான் சொல்ல வேண்டும்—அப்படிப்பட்ட வரியை மக்களிடமிருந்து வாங்கி அர சாங்கத்திற்குக் கொடுக்க மறுக்கும் சமூக விரோதிகளை, மக்கள் பகைவர்களை, பொது மக்களின் பணத்தை வாங்கிக்கொண்டு சர்க்காரின் கஜானுவையும் மக் களையும் இரண்டு பேரையும் ஏமாற்றிக்கொண்டிருக்கும் எத்தர்களைக் கண்டு பிடித்த அதிகாரிகளை நாம் எல்லோரும் மனதாரப் பாராட்டியிருக்கிருேம். எனக்கு நன்ருக ஞாபகம் இருக்கிறது. .. நமது தொழில் அமைச்சர் அவர் கள், இன்னும் இந்தத் துறையிலுள்ள அதிகாரிகளுக்கு மேலும் அதி காரங்களைக் கொடுத்து இதுபோன்ற சமூகவிரோதிகளைக் கண்டுபிடிக்க உதவ வேண்டும். இதற்காகத் தேவையான பிரச்சாரங்களை நடத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கிருேம் என்பதை இந்த மன்றத்தில் நான் பல முறை அழுத்தந் திருத்தமாக எடுத்துக் கூறியிருக்கிறேன். விற்பனை வரி மோசடியைக் கண்டுபிடிக்கும் திடீர் சோதனை நடவடிக்கைகள் துவங்கின. அந்த நடவடிக்கைகளால் பெரிய வர்த்தக சூதாடிகள், கொள்ளை லாபக் காரர்கள், கள்ள வணிகக்காரர்கள், கள்ளக் கணக்கு எழுதுகிறவர்கள் ஆகி யோர்களிடமிருந்து ஏப்ரல் மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரையில்
12-00 noon 6 கோடி ரூபாய், 7 கோடி ரூபாய் அளவுக்கு வரியைச் சேர்த்து தந்திருக்கிருர்கள். அதிலே நாம் பல பேர்களுடைய பட்டியலைப் பார்த் தோம். ஈரோட்டில் ஒரு வட நாட்டு எண்ணெய் வியாபாரி இரண்டு கோடி ரூபாய் டர்னுேவரை மறைத்திருந்தார். எவர்சில்வர் சக்ரவர்த்தி என்று சொல்லக் கூடிய மாபெரும் எவர் சில்வர் வியாபாரியிடமிருந்து ஒரு கோடி ரூபாய் டர்னுேவர் கண்டுபிடிக்கப்பட்டது. பல லட்சக்கணக்கான ரூபாய்களை சினிமாக் கம்பெனிகளுக்கு வட்டிக்கு மூலதனம் கொடுத்து வந்த நாட்டுக் கோட்டை செட்டியார் கம்பெனி ஒன்று கண்டுபிடிக்கப் பட்டது. வெளிநாட்டுக் கம்பெனி ஒன்று, கோடிக் கணக்கான ரூபாய், அன்னிய செலாவணியிலே முதலீடு செய்யப்பட்ட கம்பெனி கண்டுபிடிக்கப் பட்டது. அப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட நேரத்தில் மாதவரத்திற்குப் பக்கத் தில் ஒரு சம்பவம் ஏற்பட்டது. ஜெனித் லாம்ப்ஸ் அண்ட் எலெக்ட்ரிக்கல்ஸ் என்ற கம்பெனியைச் சோதனை செய்த நேரத்தில் சில சம்பவங்கள் நடைபெற்றன. கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அவர் கள் ஹைக்கோர்ட்டில் தாவா செய்தார்கள். அந்த தாவாவில் சொன்ன விவரங்கள், இப்போது ஹைக்கோர்ட்டில் தீர்ப்பு முடிந்திருக்கிற தாவாவில், இன்றைக்கு இருக்கிற ஜெனரல் ஸேல்ஸ் டாக்ஸ் ஆக்டானது அரசியல் சட்டத்திற்கு முரணுனது, அதிகமான அதிகாரங்களை அதிகாரிகளுக்குக் கொடுத்திருக்கிறது, இந்தச் சட்டம் சொத்தையானது என்று மூன்று வாதங்களை ஹைக்கோர்ட் முன்னுல் வைத்தார்கள். இந்த ஜெனித் லாம் ப்ஸ் அண்ட் எலெக்ட்ரிக்கல்ஸ் என்ற பெயரில் ஒரு கோடி ரூபாய் மூல

20th March 1965] [திரு. கே. எ. மதியழகன்]

தனத்தில் நடக்கும் இந்தக் கம்பெனிக்கு யார் சொந்தக்காரர்கள், யார் பின்னணியில் இருக்கிறார்கள் என்பதை ஆராய்வதற்கு முன்னால் ஒன்றை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். இன்றைக்கு உயர் நீதி மன்றம் கொடுத்திருப்பது சட்டப்படி சரியான தீர்ப்புதான். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். அந்தத் திர்ப்பிலே விற்பனை வரி அதிகாரிகளைப் பற்றி ஒன்றும் குற்றம் சொல்லவில்லை. அவர்கள் நட வடிக்கைகளைப் பற்றி ஒன்றும் குற்றம் சொல்லவில்லை. அவர்கள் சொன்ன தெல்லாம் தவறாகத் தமிழக அரசு சட்டம் செய்திருக்கிறது. சட்டத்திலே பலவீனம் இருக்கிறது; அந்தச் சட்டத்தின்படி, அந்தச் சட்டத்தின் விதி முறைப்படி அரசுக்கு எதிராக தீர்ப்புக் கூறுகிறோம் என்று சொல்லி யிருக்கிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் போடுவதாகச் சொன்னார்கள். அதைக் கேட்டு நான் மகிழ்ச்சி அடை கின்றேன். ஆனால் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனால் கூட இதே தீர்ப்புத் தான் கிடைக்கப் போகிறது. சட்டத்தைத் திருத்துவதைப் பற்றிப் பரி சீலனை செய்துகொண்டிருக்கிறோம் என்றும் சொன்னார்கள். இன்னொரு விவகாரத்தைப் பற்றிச் சொன்னார்களே, டாக்ஸ் ஆன் டாக்ஸ் இருப் பதை மாற்றச் சட்டம் கொண்டு வருகின்ற நேரத்தில், இதற்கும் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரவேண்டும். அப்படித் திருத்தும் போது முக் கியமாகத் திருத்தம் தேவைப்படுவதிலே, செக்ஷன் 41-ஐ அமைச்சர் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

'All accounts, registers, records and other documents maintained by a dealer in the course of his business, the goods in his possession, and his offices, shops, godowns, vessels or vehicles shall be open to inspection at all reasonable times by such officer :

Provided that no residential accommodation (not being a place of business-*cum*-residence) shall be entered into and searched by such officer except on the authority of a search warrant issued by a Magistrate having jurisdiction over the area, and all searches under this sub-section shall, so far as may be, be made in accordance with the provisions of the Code of Criminal Procedure, 1898.'

என்று 41-வது பிரிவில் (2)-வது பகுதி சொல்லுகிறது. அந்தப் பகுதி யில் பெரிய பலவீனம், சட்டத்தில் இருக்கும் சொத்தையான நிலைமை என்ன என்றால், மூலப் பகுதியில் "Shall be open to inspection" என்று தான் இருக்கிறது. ஸர்ச் செய்வதற்கு என்று இல்லாமல் "Shall be open to inspection" என்று மூலப் பகுதியில் போட்டு, ப்ரோவைஸோவில் "Shall be entered in to and searched" என்று இருக்கிறது. அதைத் தான் ஹைக்கோர்ட் எடுத்துச் சொல்லியிருக்கிறது. இங்கே இருக்கிற மயக்கத்தை தெளிவுக் குறைவை தீர்க்ககடைமைப்பட்டிருக் கிறோம். "பேட் ட்ராஃப்ட்டிங்," "சரியானவாசக அமைப்பு இல்லை" என்று ஹைக்கோர்ட்டிலே கூறியிருக்கிறார்கள். அதை ஒத்துக்கொண்டு தான் ஆக வேண்டும்.

மூன்றாவது பகுதியிலே " "If any such officer has reason to suspect that any dealer is attempting to evade the payment of any tax, fee, or other amount due from him under this Act, he may, for reasons to be recorded in writing, seize such accounts, registers, records or other documents of the dealer as he may consider necessary, and shall give the dealer a receipt for the same. The accounts, registers, records and documents so seized shall be retained by such officer only for so long as may be necessary for their examination and for any enquiry or proceeding under this Act."

[திரு. கே. ஏ. மதியழகன்] [20th March 1965

என்று இருக்கிறது. இதில் இருக்கிற தவறு என்ன என்றால்

"If any such officer has reason to suspect that any dealer is attempting to evade the payment of any tax, fee or other amount due from him . . . he may . . . seize such accounts registers, records or other documents . . . " என்று இருக்கிறது. எந்த அதிகாரியாவது சந்தேகப்பட்டாலே போதும். ஒரு ஏ.ஸி.டி.ஓ.-வோ அல்லது வேறு அதிகாரியோ சந்தேகப்பட்டாலே போதும் என்று இருப்ப தால் "too wide a power" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதே நேரத்தில் இன்கம்-டாக்ஸைப் பொறுத்தவரையில் விதி முறைகள் இப்படி இல்லை. ஒரு இன்கம்-டாக்ஸ் அதிகாரி ஸர்ச் செய்யவேண்டுமென்றால் இன்கம்-டாக்ஸ் கமிஷனருடைய எழுத்து மூலமான உத்திரவு வேண்டும். எழுத்து மூலமான உத்திரவு அதாவது "He must satisfy the Commissioner of Income-tax who will give an order in writing" விற்பனை வரியைப்பொறுத்தவரை அது இங்கு தேவை இல்லை. ஒரு ஏ.ஸி.டி.ஓ. சாதாரணமாக விருப்பு, வெறுப்பின் அடிப்படையில் சோதனை செய்யலாம் என்று இருப்பதால் "too wide a power" என்றும் "bad drafting" என்றும் சொன்னார்கள். நான்காவது பகுதியில்

"Any such officer shall have power to seize and confiscate any goods which are found in any office, shop, godown, vessel, vehicle, or any other place of business or any building or place of the dealer, but not accounted for by the dealer in his accounts, registers, records and other documents maintained in the course of his business." என்று இருக்கிறது. எவரெவர் சோதனைக்கு போகலாம் என்பதற்கு இன்னொரு ஆபத்தான விவரம் இருக்கிறது. எந்த அதிகாரி போகலாம் என்று நோட்டிஃபிகேஷனில் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் மிகவும் ஆபத்தானது. யார் யார் போய் சிறு வியாபாரிகளைத் துன்புறுத்து கிறார்கள் என்பதற்கு அட்டவணை இருக்கிறது. நோட்டிஃபிகேஷன் பிறப்பிக்கப்பட்டது. அதன் பயங்கரத் தன்மையை காண மன்றத்தினரை ஒரு நிமிஷம் அழைத்துச் செல்லுகிறேன்.

'Notification under section 41 conferring powers to order production of accounts and powers of entry, inspection, etc., S.R.O. No. A-1796 of 1959, dated 23rd March 1959 :—In exercise of the powers conferred by section 41 of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959) and in supersession of all the existing notifications on the subject the Governor of Madras hereby empowers—

(i) all Officers of the Commercial Taxes Department not lower in rank than an Assistant Commercial Tax Officer to require any dealer, for the purposes of this Act, to produce before him the accounts, registers and other documents, and to furnish any other information relating to his business;

(ii) all Officers of the Commercial Taxes Department not lower in rank than an Assistant Commercial Tax Officer, all officers of the Revenue Department not lower in rank than a Revenue Inspector and all Officers of the Police Department not lower in rank than a Sub-Inspector ......'

ரெவின்யூ இலாகாவில் இருக்கிற ரெவின்யூ இன்ஸ்பெக்டர், போலீஸ் துறையிலே ஒரு சப் இன்ஸ்பெக்டர், ஒரு ஏ.ஸி.டி.ஓ. நினைத்தால் போதும். தப்பு வேண்டியதில்லை, அவர் அப்படி நினைக்கிறார் என்றால் உள்ளே நுழையலாம் என்று நோட்டிஃபிகேஷன் இருக்கிறது. இவைகள் இன்றைக்குத் தவறு என்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். சுப்ரீம்

20th March 1965] [திரு. கே. ஏ. மதியழகன்]

கோர்ட்டுக்குப் போனாலும் இதே தான் நிலைமை வரப்போகிறது. இது "பேட் ட்ராஃப்டிங்" என்று ஒத்துக்கொண்டாக வேண்டும். இதை மாற்றுவதற்கு முன்வரவேண்டுமென்று சொல்லுகிற நேரத்தில் ஒன்றைக் குறிப்பாக குறிப்பிட விரும்புவேன். இதே மாதவரத்துக்காரர்கள், இந்த தாவாவைப் போட்டவர்கள், பெரிய இயக்கமே நடத்துகிறார்கள். வரியை ஏமாற்றுகிற வர்களுடைய பெயர்களைக் கேட்டால் பயங்கரமாக இருக்கும். அவர்கள் . .

கனம் உதவி சபாநாயகர் : கனம் அங்கத்தினர், அவர்கள் பெயர்களை எல்லாம் இங்கே சொல்லக்கூடாது.

Sri K. A. MATHIALAGAN : Sir, I want to emphasise the significance behind their action.

The Hon. Sri R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, Persons who are not in this House to defend themselves cannot be mentioned here. The hon. Member can speak anything except mentioning names.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தியாவிலேயே 10 கோடீஸ்வரர்களை எடுத்துக்கொண்டால், அந்த பத்து பேருக்குள்ளே வரும் ஒரு கோடீஸ் வரின் குடும்பம் மாதவரம் மோசடியில் சம்பந்தப்பட்டுள்ளது. சௌகார் பேட்டில் பிப்ரவரி 25-ம் தேதி வழக்கு முடிவு தெரிந்தவுடன் தீபாவளி மாதிரி தின்பண்டம் பரிமாறி வெற்றி கொண்டாடினார்கள் என்பதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அரசாங் கத்தை தோற்கடித்துவிட்டோம், இனி நம் இஷ்டப்படி கொள்ளை நடத்த லாம் என்று பெருமைப்பட்டுக்கொண்டார்கள். குதூகலத்துடன் இருந் தார்கள். அமைச்சர் அவர்கள் இதை மிகவும் நன்றாக அறிவார்கள். இந்த தாவா சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றால் பைசல் ஆக கட்டாயம் 4, 5 வருஷங்கள் ஆகும். 6 கோடி ரூபாய் 6 மாதங்களில் திடீர் சோதனை மூலம் வசூல் செய்ய முடிந்தது என்றால், இன்னொரு 6 மாதங்களில் அது ரூ. 12 கோடி ஆகியிருக்கும். இப்படி நிறுத்தப்பட்ட காரணத்தினால், மீண்டும் கருணை காலம், "கிரேஸ் பீரியட்" அவர்களுக்கு மறைமுகமாக கிடைத்துவிட்டது. கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் அவர்களாக முன் வந்து கள்ளக் கணக்கை எவ்வளவு பேர் ஒப்படைத்தனர் என்று கேள்வி கேட்டதற்கு, ஒன்றும் திருப்தி அளிக்கவில்லை, யாரும் கணக்குக் கொடுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். புலியின் வரிக்கோட்டை மாற்றிக்கொள் என்று சொல்ல முடியாது. பாம்பை கடிக் காதே என்று சொல்ல முடியாது, தேளை கொட்டாதே என்று சொல்ல முடியாது. கடலே! கடலே! அலையே! அலையே! வீசாதே என்று கட்டளையிட்ட கான்யூட் மன்னன் கதைபோல் கல்நெஞ்சருக்கு கருணை காட்டினீர்கள். ஆனால் அவர்கள் இன்று ஈடுபட்டுள்ள செயல்கள் என்ன? இன்றைக்கு 120 ரிட்கள் உயர்நீதி மன்றத்தில் இருக்கின்றன. இந்த விற்பனை வரியை கொடுக்காமல் ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் இன்று 120 ரிட்கள் போடப்பட்டிருக்கின்றன. பெரிய பண முதலைகள் அரசாங்கத்திற்கு எதிராக பண உதவி செய்து பெரும் இயக்கமே நடத்து கிறார்கள். அந்தப் பெரும் புள்ளிகளின் பெயர் விவரங்களைக்கூட என்னால் கூறமுடியும். 1962-ம் ஆண்டு தாவாக்கள் இன்னும் சுப்ரீம் கோர்ட்டில் தூங்கிக்கொண்டிருக்கின்றன. அரசாங்கம் தீவிர முயற்சி எடுக்காவிட்டால் இது சுப்ரீம் கோர்ட்டில் முடிவாவதற்கு 5 வருஷம் கூட ஆகலாம். இந்த இடைவெளிக் காலம் அவர்களுக்கு, கள்ள வணிகர்களுக்கு, சமூக புல்லருவி களுக்கு, மறைமுகமாக "கிரேஸ் பீரியட்" கருணைக்காலம் ஆகிவிடும். இன்றைக்கு உயர்நீதி மன்றம் அப்பீல் செய்துகொள்ள அனுமதி அளித் திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். சுப்ரீம் கோர்ட்டுக்கு போய்வரு வதற்கு நிச்சயம் 5 வருஷங்கள் ஆகிவிடும். "இன்டைரக்ட் கிரேஸ் பீரியட்" ஆகிவிடும். இதனால் எவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்படும் என்பதை சிந்

தித்துப் பார்க்கவேண்டும். நிச்சயமாக சொல்லுகிறேன், ரூ. 50 கோடி மொத்த நட்டமாகும். சுப்ரீம் கோர்ட்டில் தாவா தூங்கிக்கொண்டிருந்தால் அடுத்த வருஷம் விற்பனை வரி வருமானம் ரூ. 20 கோடியாகக் குறைந்துவிடும் என்று நான் அழுத்தந் திருத்தமாக சொல்ல முடியும். ஆகவே, இந்த திருத்த சட்டத்தை உடனடியாகக் கொண்டுவரவேண்டும். இந்த மாநிலத்தின் நிதி நிலைமையை சீராக்கும் நோக்கத்திற்காக விற்பனை வரி சட்ட மாறுதலை நான் வற்புறுத்திக் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இது மிகவும் அவசர முக்கியமானது. கருணைக் காலம் முடிந்து இந்த ஜனவரி மாதத்தில் விற்பனை வரி அதிகாரிகள் சோதனை போட தொடங்கினார்கள். அகப்பட்ட விவரங்கள் அதிசயம் நிறைந்தவை. சென்னை நகரத்தில் மட்டும் பல கோடி ரூபாய்க்கு கள்ளக் கணக்குகள் அகப்பட்டன. பல கிடங்குகள், வர்த்தக நிலையங்கள், தொழிலதிபர் வீடுகள் இவைகளையெல்லாம் சோதனை போட்டார்கள். ஒரு இடத்தில் கிளாஸ் ஜாடியில் திருட்டுத்தனமாக, கள்ளத்தனமாக பதுக்கிவைக்கப்பட்ட கை கெடிகாரங்கள் இருந்தன. இன்னொரு வீட்டில் ஒரு ஆபீஸர் உட்கார்ந்த குஷனுக்குக் கீழே பல லட்சக்கணக்கான ரூபாய்க்கு கள்ளக் கணக்கு ரகசிய எடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒரு பெரிய வியாபாரி வீட்டில், பழைய டிராம் தண்டவாளங்கள் ரூ. 5 லட்சம் வரை விற்றதற்கு கள்ளக் கணக்குகள் கண்டு எடுக்கப்பட்டன. நெவேதியா என்ற கம்பெனி, எண்ணெய் வியாபாரம் செய்கின்ற கம்பெனி, தம்புச் செட்டித் தெருவில் இருக்கிற கம்பெனி., ரூ. 2 கோடி அளவு வியாபாரத்தில் வரியை ஏமாற்றியிருக்கிறார்கள். ஜேய் ஹிந்த் கம்பெனி, பிரியகாந்த் கம்பெனி, ஈஸ்டு ஏஷியாடிக் கம்பெனி போன்ற கோடிக் கணக்கான ரூபாய் சம்பந்தமாக வரியை ஏமாற்றிய நிறுவனங்கள் இன்று சட்டத்தின் கரங்களிலே சிக்கிக்கொண்டுள்ளன. கனம் தொழில் அமைச்சர் அவர்கள், சர்க்காருக்கு பல கோடி ரூபாய் வருமானம் கிடைப்பதில் அக்கறை கொண்டவர்கள். இந்த பகற் கொள்ளையை 4, 5 வருஷம் அனுமதிக்கப் போகிறார்களா என்று கேட்கிறேன். இதிலே வழக்கு மன்றத்திலே பார்ப்பதற்கு என்ன இருக்கிறது, பரிசீலனை செய்வதற்கு என்ன இருக்கிறது ? திருத்த சட்டத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டும். சிறு வியாபாரிகள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்று திருமதி அனந்தநாயகி அவர்கள் குறிப்பிட்டார்கள். இது தவறான பிரச்சாரம். துன்புறுத்தப்படவில்லை. நான் தெளிவாகச் சொல்வேன். இதுவேண்டுமென்றே பெரிய வியாபாரிகள் விரித்து வைத்துள்ள வலையாகும். சர்க்கார் இரண்டு பேர்களுக்கு மத்தியில் பதில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறார்கள். மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்பது ஒரு பக்கம். வேறு ஒரு பக்கத்தில் செல்வாக்கான வணிகர்கள் என்ன சொல்லுகிறார்களோ, அவர்கள் அபிப்பிராயம் என்னவோ என்று இப்படி இக்கட்டான நிலைமையில் அமைச்சரும் இருக்கிறுகள். இந்த விற்பனை வரியை மட்டும் பூராவும் வசூல் செய்தால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக இந்த மாநிலத்தில் எந்த வரியும் போடவேண்டிய அவசியமே இல்லை, இப்படியே போய்க்கொண்டிருந்தால் விற்பனை வரி மூலம் மட்டும் ரூ. 40 கோடி, 50 கோடி ஆண்டு வருமானம் வரும் என்று திட்ட மதிப்பீடு கூறுகிறது. இப்பொழுது ரூ. 6 கோடி கிடைத்து இன்னும் 6 மாதங்கள் இப்படியே வசூல் செய்திருந்தால் இன்னும் ரூ. 6 கோடி கிடைத்திருக்கும், மொத்தம் ரூ. 12 கோடி ஆகியிருக்கும். சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனால் கட்டாயம் 4 வருஷம், 5 வருஷம் ஆகும், "ஏதோ இரண்டு வருஷங்கள் நாங்கள் பிழைத்துக் கொள்கிறோம், அடுத்த தேர்தல் வரையாவது நாங்கள் இப்படியே சர்க்காரை ஏமாற்ற அனுமதித்துவிடுங்கள் என்று வியாபாரிகள் உங்களுடன் ஓர் ஒப்பந்தத்திற்கு வந்து விட்டார்களோ என்ற நிச்சயமான சந்தேகங்கள், நியாயமான சந்தேகங்கள் எனக்குத் தோன்றுகிறது. அதை மறுப்ப தானால் இந்த திருத்த சட்டத்தை உடனடியாக கொண்டுவர வேண்டும். இல்லையேல் எனது சந்தேகம் உறுதிப்பட்டுவிடும். வரிகளை ஏமாற்றுபவர்கள் சமூகத் துரோகிகள். நாட்டு மக்கள், ஏழை எளிய மக்கள் வரியாகக் கொடுத்த பல கோடி ரூபாயை இடையிலே உள்ளவர்கள், இடைத்தரகர்கள் அதை அரசாங்கக் கருவூலத்திற்கு கொடுக்காமல், சர்க்காரிடம் சேர்க்

20th March 1965] [திரு. கே. எ. மதியழகன்]

காமல் பதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அரசியல் களத்திலும் தங்களுடைய செல்வாக்கை நிலைநாட்டிக் கொண்டு வருகிறார்கள். கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் நிச்சயமாகச் சொல்கிறேன், இதிலே அரசியல் கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள். இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால் சட்டமன்ற உறுப்பினர்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களின் இல்லங்கள் திடீர் சோதனை போடப்பட்டு, பல விவரங்கள் கிடைக்கப்பெற்று, அவர்கள் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பெயரை நான் சொல்ல விரும்பவில்லை. அவர்களுடைய நிர்ப்பந்தத்திற்கு தொழில் அமைச்சர் அவர்கள் பணியப் போகிறார்களா அல்லது நாட்டிலுள்ள கோடிக்கணக்கான மக்களுடைய நல்வாழ்க்கையைக் கவனிக்கப் போகிறார்களா என்பதே இப்பொழுது எழுந்துள்ள கேள்வி. இந்த விற்பனை வரி சட்டத்தை, திருத்த சட்டத்தை உடனடியாகக் கொண்டுவரவேண்டும் என்ற கோரிக்கைதான் சரியான பரிகாரமாகும்.

அடுத்தபடியாக "டாக்ஸ் ஆன் டாக்ஸ்" பற்றிச் சொன்னார்கள். சுப்ரீம் கோர்ட்டு ஜட்ஜ்மெண்டு பற்றிச் சொன்னார்கள். அதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. கனம் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்து பேசியபொழுது சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை ஏன் அமுல்படுத்தவில்லை என்று நான் கேட்டேன். சுப்ரீம் கோர்ட்டு ஜட்ஜ்மெண்டை அமுல்படுத்தாததினால் ஒரு கோடி ரூபாய்க்கு நமது வருமானத்தில் நட்டம் ஏற்பட்டது. 1962-ம் ஆண்டில் சுப்ரீம் கோர்ட்டு ஜட்ஜ்மெண்டு வந்தது. இரண்டு வருஷம் அதை அமுல்படுத்தாமல் இருந்துவிட்டார்கள். புதிய சட்டம் கொண்டுவரட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. அதை நான் வரவேற்கிறேன். "டாக்ஸ் ஆன் டாக்ஸ்" தேவையில்லைதான். ஆனால், சுப்ரீம் கோர்ட்டு ஜட்ஜ்மேண்டு சொன்னபிறகு இரண்டு வருஷம் காலம் கடந்துவிட்டது. பிறர் ஆதாயம் அடைய அனுமதித்துவிட்டார்கள். இதனால் டி.வி.எஸ். கம்பெனிக்கு ஆண்டுதோறும் ரூ. 10 லட்சம் ஆதாயம் கிடைத்திருக்கிறது. அதாவது 20 லட்சம் ரூபாய் டி.வி.எஸ். கம்பெனி கொடுக்க வேண்டிய வரி விதிவிலக்கு செய்யப்பட்டுள்ளது. இதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவராவிட்டால் நான் என்னுடைய கடமையைச் செய்தவனாகமாட்டேன். இன்னும் இதைப் போன்ற பெரிய கம்பெனிகள், வர்த்தக நிலையங்கள் ஆகியவைகளுக்கு சலுகை காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, ஏன் இந்தத் திருத்த சட்டத்தை உடனடியாக கொண்டுவரவில்லை, அல்லது இருக்கும் சட்டத்தை அமுல்படுத்தவில்லை என்பது தான் என்னுடைய கேள்வி.

இறுதியாக நான் ஒன்று சொல்லி முடிக்கிறேன். பல கட்ட விற்பனை வரியா, அல்லது ஒரு கட்ட விற்பனை வரியா என்றெல்லாம் பேசப்படுகிறது. எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் திரு. அழகமுத்து அவர்களும், திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், திரு. கரிவேங்கடம் அவர்களும் இதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் தனக்கு தனிக்கருத்துக் கிடையாது, சட்டசபையைக் கேட்பதாகச் சொல்லிவந்தார் என்று கூறப்படுகிறது. ஆனால் பத்திரிகை செய்தியைப் படித்ததிலிருந்து அமைச்சர் அவர்கள் அங்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

"Mr. R. Venkataraman, Industries Minister, said here last evening that the Government would soon introduce legislation to change the present single-point levy of Sales Tax to a uniform multi-point tax. Giving this assurance to the members of the Southern India Chamber of Commerce at the Chamber's quarterly meeting last evening, the Minister said he would seek the approval of the Legislature during the coming Budget session for framing the necessary legislation, after placing the suggestion of the business community for this change."

[திரு. கே. எ. மதியழகன்] [20th March 1965

அமைச்சர் அவர்கள் இப்பொழுது சொல்வார்கள், சட்டசபையைக் கேட்கிறேன் என்று தான் சொல்லிவந்தேன் என்று கூறுவார்கள். அவர்கள் சொன்ன இடம் எங்கே ? தென்னிந்திய வர்த்தக சபைக் கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஏழை எளிய மக்களை கலந்து ஆலோசிக்கவேண்டும். ரூ. 10,000, 20,000 அளவில் வியாபாரம் செய்பவர்களையெல்லாம் கலந்து ஆலோசிக்க வேண்டும். எனக்குக்கூட இது விஷயத்தில் திட்டவட்டமாக ஒரு அபிப்பிராயம் இப்பொழுது கிடையாது. இன்னும் அபிப்பிராயம் உருவாகாத நிலையில் தான் இருக்கிறேன். பல கட்ட விற்பனைவரியிலிருந்து நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு கட்ட விற்பனைவரிக்குச் சென்றோம். மறுபடியும் ஒரு கட்டத்திலிருந்து பல கட்டத்திற்கு வரவேண்டும் என்று சொல்லப்படுகிறது, சொல்லப்படும் இடம் தென்னிந்திய வர்த்தகசபை. ஏகபோகக்காரர் நிறைந்த இடம். அங்கு வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த சூழ்நிலையில் உடனே அங்கு இம்மாதிரி அஷ்யூரன்ஸ் கொடுத்தார்கள் ? அதற்கு காரணம் என்ன ? நண்பர் கரிவேங்கிடம் அவர்களும் கிருஷ்ணமூர்த்தி அவர்களும் இதுபற்றி மிகத் தெளிவுபட கூறியிருக்கிறார்கள்.

சிறு வியாபாரிகளுக்கு இதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. பல கட்டத்தைப் போடுவதால் கன்ஸ்யூமர்ஸ் உபயோகிப்போர் பொது மக்களும் கஷ்டப்படுவார்கள். ஆகவே இதையெல்லாம் யோசித்துச் செய்யவேண்டும் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். சுப்ரிம் கோர்ட்டு தீர்ப்பு 4, 5 வருஷத்தில் வராது. ஆகவே, இனி சட்டத்தை மாற்றி அமைக்காவிட்டால், 20 கோடி கூட வராது, முதலாளிகள் ஏமாற்றும் அளவிற்கு, கள்ளப் பணம், கறுப்புபணம் பெருகும் அளவுக்குத்தான் நிலைமை போகும். ஆகவே, பெரிய பொருளாதார சாம்ராஜியத்தை அமைத்து எப்படியாவது இந்த சர்க்காரை தோற்கடிக்க வேண்டும் என்று முதலாளிகள் விரித்துள்ள சதி வலையில் விழமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே உடனடியாக சட்ட திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கூறிக்கொண்டு என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

*** கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் மதியழகன் பேசும்போது, ஏதோ சர்க்காரைக் கண்டிக்கிறார் போல இருக்கிறது என்று எண்ணும் அளவுக்கு, அவ்வளவு உரக்க, அழுத்தம் திருத்தமாக, ஆர்வமாகப் பேசினார்கள். ஆனால் பேசினதெல்லாம், சர்க்கார் செய்ததையெல்லாம் சரி என்றுதான் பேசினார்கள். சர்க்கார் இன்றைக்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள், கணக்குகளை எங்காவது மறைத்து வைத்து ஏமாற்றுகிறவர்களைப்பிடிக்க செய்த முயற்சிகள் தான். அது சம்பந்தமாக நான் சொல்ல வேண்டியதையெல்லாம், கனம் மதியழகன் சொன்னதற்காக, அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்கிறேன். காங்கிரஸ் கட்சிக்கு பெரிய கவுரவத்தைக் கொடுத்தார்கள். தப்பு செய்தவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்களா என்றெல்லாம் பார்க்காமல், எந்த எந்த இடத்தில் தவறுகள் நடக்கிறதோ, அவர்களையெல்லாம் பிடித்தார்கள் என்பதைத்தான் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அந்த வகையில் நல்ல ஒரு ஆதரவு இருக்கிறது என்று நினைக்கிறேன். சட்ட சபையிலே ஏமாற்றுகிறவர்களைப் பிடிப்பதில் எடுக்கும் முயற்சிகளுக்கு, ஏமாற்றுகிறவர்களுடைய கணக்குகளைப் பிடிக்க செய்து வரும் ஏற்பாடுகளுக்கு எல்லாதரப்பிலிருந்தும் ஆதரவு கிடைத்திருக்கிறது. அது மாத்திரமல்ல, சாதாரணமாக காங்கிரஸ்காரர்களுக்கு சலுகை காட்டுகிறார்கள் என்று சொல்வதுகூட இந்த முறை சொல்லவில்லை என்பதில், மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அடுத்தபடியாக அவர்கள் சொன்னது, சுப்ரீம் கோர்ட்டுக்கு போனால் இதே தீர்ப்புத்தான் வரும் என்றார்கள். நான் ஒரு வக்கீல். மெட்ராஸ் ஹைகோர்ட்டில் ப்ராக்டீஸ் பண்ணினவன். அதோடு சர்வதேச நாடுகளில் ஒரு நிர்வாகப் பொறுப்பிலே, தீர்ப்புக்கொடுக்கக்கூடிய பொறுப்பு உள்ளவ

20th March 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

ளுக இருக்கிறேன். நானும் பல நல்ல உயர்ந்த, சீனியர் அட்வகேட்களையெல்லாம் கலந்தாலோசித்து இருக்கிறேன். என்னுடைய அபிப்பிராயம் என்னவென்ருல்,—கனம் மதியழகன் சொன்ன அபிப்பிராயம் இன்றைக்கு சபை நிகழ்ச்சியில் ரிக்கார்ட் ஆகும், ஆகவே என்னுடைய அபிப்பிராயத்தையும் சொல்ல விரும்புகிறேன்.—அப்பீல் வெற்றி பெற எல்லா வாய்ப்புகளும் இருக்கிறது என்பதுதான். (குறுக்கீடு) எல்லாவற்றையும் சொல்லுகிறேன். ஒன்றையும் விட்டுவிட மாட்டேன். நான் அப்படிச் சொல்வதற்கு காரணம் என்னவென்ருல், இன்றைக்கு **“Shall be open to inspection”** என்று சொன்ஞல், என்ன பொருள் என்பதைச் சாதாரணமாகப் பார்க்க வேண்டும். **“It shall not be open to inspection”** என்று சொன்ஞல், எந்தத் துறையிலும் போய்ப் பார்க்கமுடியாது. **“It shall be open to inspection”** என்று சொன்ஞல், அந்த முறையில் இன்ஸ்பெக்ஷன் செய்யலாம். அடுத்தாற்போல், எந்த ஒரு பண்டத்தையும் தேடி எடுக்க அதிகாரம் இருக்கிறது என்று சொன்ஞல், தேடாமல் எடுக்க அதிகாரம் இருக்கிறது என்று சொல்வதை நான் ஒத்துக்கொள்ள முடியவில்லை. அதற்கு மேல், அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. சட்டம் என்னுடைய அபிப்பிராயத்தில் சரியாகத்தான் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு வாதாடிய அட்டார்னி ஜெனரல், நம் ராஜ்யத்தவர் அல்ல, மத்திய சர்க்கார் அட்டார்னி ஜெனரல். அவர்களுடைய அபிப்பிராயமும் அப்படித்தான் இருக்கிறது.

அடுத்தாற்ப்போல், **“any officer”** போய் இம்மாதிரிப் பிடிக்கலாமா என்பதைப் பற்றி ஹைகோர்ட்டுத் தீர்ப்பை எடுத்துக் காட்டினுர்கள். ஏதோ நம்முடைய ராஜ்யத்தினுடைய எல்லையிலிருந்து, மற்ருெரு ராஜ்யத்திற்கு கடத்தல் நடக்கிறது என்ருல், கடத்தல் நடக்கும்போது, டெபுடி கமிஷனர் பர்மிஷன் வாங்கித்தான் செய்ய வேண்டும் என்ருல், அது “குதிரை ஓடிய பிறகு, லாயத்தைப் பூட்டிய” மாதிரித்தான் ஆகும்.

திரு. கே. ஏ. மதியழகன் : அட்டார்னி ஜெனரல், இது “பேட்லி ட்ராப்டட்” ஆக இல்லாமல், சரியாகத்தான் இருக்கிறது என்று அவர்களுடைய அபிப்பிராயத்தை எழுத்து மூலம் கொடுத்திருக்கிருர்களா, அப்படிப்பட்ட அறிக்கையை சபைமுன் வைக்க சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தேவையில்லை. ஒரு அட்டார்னி ஜெனரல் ஒரு கேஸ்சை ஆர்க்யூ பண்ணும்போது, சரியில்லை என்ருல் ஆர்க்யுமெண்ட் பண்ண மாட்டார்கள். அது சட்டத்திலே இருக்கக்கூடிய ஒரு நியதி, அது ஒரு **“Legal etiquette”**. அவ்வளவு உயர்ந்த பதவியில், பொறுப்பில் இருக்கிறவர்கள், சரியில்லை என்று சொன்ஞல், சரியென்று விட்டு விடுவார்கள். அவர்கள் வந்து வாதாடுவதுதான் அவர்களுடைய கவுரவத்திற்குச் சரியானது. அந்த மாதிரி உயர்ந்த பண்பில் இருந்து வந்திருக்கிருேம். பண்பு நம்முடைய நீதி, நியாயம் இவற்றை எடுத்து உரைக்கின்ற வாதிக்கும் தன்மையில் இருக்கிறது. ஏதோ எங்காவது ஸர்ச் செய்கிருேம், ஸீஸ் செய்கிருேம் என்ருல், எங்கே செய்கிருேம் ? பொதுவாக நம்முடைய எல்லையை விட்டு ஓடிவிடுவது, திடீரென்று கணக்குகளை ஏரோப்ளேனில் ஏற்றி அப்புறப்படுத்த ஏற்பாடு செய்வது, திடீரென்று மறைக்க வழிவகை செய்வது, இந்த சந்தர்ப்பத்தில் தான் செய்கிருேம். அப்பொழுது, கமிஷனர் ஆப் கமர்ஷியல் டாக்ஸஸ் அவர்களைக் கேட்டு அதன்பிறகுதான் எதையும் செய்யவேண்டும் என்ருல், அதற்குள் கணக்குகள் எல்லாம் ஓடிப்போய்விடும். ஆகவே, நிர்வாகத்திலே இருக்கும் கஷ்டத்தையும் பார்க்கவேண்டும். பீனல் கோடை எடுத்துக் கொண்டால். **“Any Police officer may arrest without a warrant if an offence is to be committed”** என்று இருக்கிறது.

ஒரு குற்றம் நடக்கப்போகிறது என்கிற நிலைமை இருக்கும்போது, ஒரு ஹெட் கான்ஸ்டபிள் குற்றம் செய்ய இருப்பவரை அரெஸ்ட் செய்து விடலாம். அவரிடத்தில் சொல்ல முடியாது, “நீர் சாதாரண ஹெட் கான்ஸ்டபிள்தானே, ஐ. ஜி. பர்மிஷன் வாங்கிக் கொண்டுவந்து என்னை

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [20th March 1965

அரெஸ்டு செய்யும்" என்ற வகையில். அப்படியென்றால் குற்றத்தைத் தடுக்க முடியாது. ஆகவே, என்னுடைய அபிப்பிராயத்தில், சர்க்கார் அபிப்பிராயத்தில், அப்பீல்போடுவதில் நல்ல சூழ் நிலை இருக்கிறது என்றுதான் முடிவு செய்திருக்கிறோம்.

சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று சொன்னால், இப்பொழுது பெரிய அதிகாரி உத்தரவு வாங்கித்தான் எந்தவிதமான ஸர்ச், ஸீஷர், செய்ய வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் பல கணக்குகள் கண்டு பிடிக்க முடியாமல் போய்விடும். இன்கம்டாக்ஸுக்கும் ஸேல்ஸ் டாக்ஸுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. இன்கம்டாக்ஸிலே, இன்றைக்கு கணக்குகள் வரவு செலவுசெய்து, லாப நஷ்டம் பார்த்து, எஞ்சியிருக்கும் வருமானத்திற்கு வரி. ஆனால், ஸேல்ஸ் டாக்ஸில் அப்படியில்லை. எந்த ஒரு ட்ரான்ஸாக்ஷன் நடந்தாலும், அதற்கு வரி. அதனால், எதாவது ஒரு ட்ரான்ஸ்ஸாக்ஷனை மறைக்க முற்பட்டால், அதை உடனே தடுக்காவிட்டால் நமக்கு நஷ்டம் வரும், சர்க்காருக்கு நஷ்டம் வரும். இன்கம்டாக்ஸ் அப்படியில்லை. ஒவ்வொரு ட்ரான்ஸ்ஸாக்ஷனுக இல்லாமல், பொதுவாகக் கணக்குப் பூராவாக எழுதி, வருகிற வருமானங்களையும் செலவாகிற தொகைகளையும் கூட்டிக் கழித்து, பாக்கியிருக்கின்ற அளவுக்கு வரி போடுகிறோம். அது சம்பந்தமாக ஒரு பெரிய அதிகாரியிடம் போய் சர்ச்சை செய்ய நேரம் அவகாசம் உண்டு. ஆனால் திடீர் திடீர் என்று ட்ரான்ஸாக்ஷன் நடக்கும்; அடுத்த ராஜ்யத்திற்கு உடனே கணக்குகளை மாற்றுவது; இப்படியெல்லாம் இந்த வருமானவரியில் இல்லை. ஆகவே இந்த விற்பனை வரி சம்பந்தமாக, யாரோ ஒருவரைப் பார்த்து, பர்மிஷன் வாங்கித்தான், அதன்பிறகுதான் போய்பிடிக்கவேண்டும் என்றால் நான் முன்பு சொன்னதுபோல், குதிரை திருட்டு போன பிறகு, கொட்டகையைப் பூட்டிக் கொண்டிருக்கும் நிலைதான் உண்டாகும். அதைத்தான் பரிசீலனை செய்கின்றோம். சர்க்கார் பரிசீலனை செய்வது எது என்றால்
12-30 p.m. இம்மாதிரி நம் அதிகாரத்தை வருமானவரி சட்டத்திலே இருக்கும்படியான நிலைமைக்கு இதை மாற்றியமைப்பது சரியா, அப்படி மாற்றியமைத்தால் அதனால் எதாவது நன்மை ஏற்படுமா, நாம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் அதனால் வெற்றிகரமாக இருக்குமா என்பதைத்தான் நாம் பரிசீலனை செய்கின்றோம். "எதோ ஒருவர் சொல்லிவிட்டார், உடனே மாற்றிவிடு" என்றால், அது பழைய கதையாகப் போய்விடும். **Old man, his son and the donkey"** என்ற கதை ஒன்றுண்டு. பிறர் சொன்னதையெல்லாம் நாம் செய்தால், கழுதையைத் தூக்கிக் கொண்டு போன கதையாகிவிடும். கழுதையை நாமே தூக்கிக்கொண்டு போகாத அந்த நிலையிலே சர்க்கார் இன்றைக்குப் பரிசீலனை செய்துக்கொண்டிருக்கிறது. இந்த ராஜ்யத்திற்கு கிடைக்கவேண்டிய நேர்மையான நியாயமான வரி வகைகள் சரியான முறையில் கிடைப்பதற்கு எல்லா முயற்சிகளையும் சர்க்கார் எடுத்துக்கொள்ளும். எடுத்துக் கொண்டு வருகிறது. இதில் விருப்பு, வெறுப்போ, பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடோ கிடையாது என்பதை நான் குறிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விற்பனை வரியையும் சேர்த்து ட்ரான்ஸாக்ஷன் மீது வரி போடலாம் என்ற தீர்ப்பு சுப்ரீம் கோர்ட்டிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் ஆரம்பத்தில் சொன்னபடி நம்முடைய ராஜ்யத்தின் வர்த்தகத்திற்கு அது சரியானதல்ல என்று நாம் முடிவு செய்தோம். காரணம் என்னவென்றால், தமிழ் நாட்டில் நாங்கள் விற்பனை வரி விதிக்கும்போதெல்லாம் "இந்த வரியை மக்கள்தான் கொடுக்கின்றார்கள். வியாபாரிகள் கொடுக்கவில்லை" என்று அழுத்தந்திருத்தமாகச் சொன்னோம். அந்த வரியை வியாபாரிகள் கொடுக்கவில்லை, மக்கள்தான் கொடுக்கின்றார்கள் என்ற நிலைமை வருகிறபோது, விற்பனை வரியைச் சேர்த்து, அதற்கும் வரி போட்டால் அதை வியாபாரிகள்தான் கொடுக்க வேண்டும். உதாரணமாக, ஒருவருக்குப் பத்தாயிரம் ரூபாய் வியாபாரம் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம், அந்தப் பத்தாயிரம் ரூபாய் வியாபாரம் செய்கின்றபோது, ரூ. 200 விற்பனை வரியாக வாங்கியிருப்பார். சர்க்கார் ரூ. 10,200-க்கு வரி போட்டால், 200 ரூபாய்க்குப் போகின்ற விற்பனை வரியை வியாபாரிதான் கொடுக்கும்படியாக இருக்கும். இந்த நிலை கூடாது. இது நாம் ஏற்படுத்திக்கொண்ட

20th March 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

கொள்கைக்கு விரோதமானது. நாம் ஏற்படுத்திக்கொண்ட கொள்கை என்னவென்ருல், விற்பனை வரியை மக்களிடமிருந்துதான் வசூலிக்க வேண்டும் என்பது. "வியாபாரிகள் ஏஜெண்டுகள்தான், ரெவின்யூ கலெக்ஷனுக்காக நாம் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை சம்பளம் கொடுத்து வைத்திருக்கின்ருேம். ஆனுல், வியாபாரிகளாகிய உங்களை சம்பளம் இல்லாத ஏஜெண்டுகளாக அரசாங்கம் வைத்துக்கொண்டிருக்கிறது. எங்களுடைய விற்பனை வரியை நீங்கள் வசூல் செய்து கொடுத்தால் போதும். அதற்கு மேல் நீங்கள் உங்கள் கையிலிருந்து கொடுக்க வேண்டாம்," என்று நாங்கள் வியாபாரிகளிடம் சொல்லியிருக்கிருேம். இந்த நிலையில், வியாபாரிகள் அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய விற்பனை வரிப் பணத்தைக் கொடுக்காமல் ஏமாற்றுவார்களானுல், அவர்கள் வெறும் ஏமாற்றுகிறவர்கள் மட்டுமல்ல, மிஸ்அப்ரோபிரியேஷன் செய்யக்கூடிய எண்ணம் அவர்களுக்கு இருப்பதாகத்தான் நினைக்க வேண்டியிருக்கிறது என்று நான் அடிக்கடி வற்புறுத்திச் சொல்லியிருக்கிறேன். சர்க்காருக்குக் கட்ட வேண்டிய வரி என்று பிறரிடம்சொல்லி வாங்கி அதைத் தாங்களே உபயோகப்படுத்திக்கொண்டிருந்து, சர்க்காருக்குக் கட்டாமலிருந்தால், அது எவ்வளவு தவருகும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதனுல் ஏதோ டி.வி.எஸ்.-க்கு லாபம் என்று கனம் அங்கத்தினர் ஒருவர் சொன்னுர்கள். டி.வி.எஸ். சாதாரணம். அதைவிட அதிகமான அளவுக்கு வியாபாரம் செய்தவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிருர்கள். எல்லோருக்கும்தான் லாபம். நீதிமன்றத் தீர்ப்பினுல் யாரோ ஒருவருக்கு லாபம், மற்றவர்களுக்கு லாபம் இல்லை என்பது போல் சட்டசபையில் பேசுவது நன்ருக இருக்காது. கனம் அங்கத்தினர் மொத்தமாக எல்லோருக்குமே லாபம் என்று விளக்கமாகப் பேசியிருந்தால் இதைப் பற்றியே நான் பேசியிருக்க மாட்டேன். ஒருவரை மட்டும் குறிப்பிடுவானேன் ? மற்றவர்களுக்கும் பலன் கிடைக்கவில்லையா ? எத்தனையோ கம்பெனிகள் ட்ரான்ஸ்போர்ட் நடத்துகிருர்கள். அவர்களுக்கெல்லாம்கூட தீர்ப்பின் சலுகை கிடைக்கிறது.

நாங்கள் இன்றைக்கு எடுத்த முடிவு என்ன காரணத்தினுலே என்ருல் விற்பனை வரியை வியாபாரிகள் தங்கள் கையிலிருந்து கட்டக் கூடாது கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்பதற்க கத்தான். அந்த விதமான நிலைமைதான் உருவாக வேண்டும். சர்க்காருக்கு எப்படியாவது பணம் வர வேண்டும், பணம் வருவதற்கான வேலைகளையே செய்கிருர்கள் என்ற எண்ணத்தையே இது மாற்றும். சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு சாதகமாக இருந்தால்கூட, நாம் எடுத்துக்கொண்ட கொள்கை சரியாக இல்லை என்று நாம் விட்டுக் கொடுக்கக்கூடிய அளவிற்கு இருக்கிருேம். ஏன் ? வியாபாரிகள் கையிலிருந்து வரியைக் கேட்கக் கூடாது என்ற லட்சியத்தை வைத்து விற்பனை வரி இலாகா இயங்க வேண்டும் என்ற காரணத்தினுல் தான். இந்தத் திருத்தம் செய்வதை அக்டோபர் 1-ந் தேதியிலிருந்தே கூடச் செய்ய முடியும். ஆனுல், சில இடங்களில் வசூல் செய்திருப்பார்கள். பணத்தை ரீபண்ட் செய்ய வேண்டியது ஜாஸ்தியாக இருக்கும். பணத்தை வாங்கிய பின் அதை ரீபண்ட் செய்வதில் உள்ள சில தொல்லைகளைத் தவிர்ப்பதற்காக ஏப்ரல் முதல் தேதியிலிருந்து வைத்துக்கொள்ளலாம், அவர்கள் விற்பனை வரி total turnover including sales-tax க்குக் கொடுக்கத் தேவையில்லை என்று சட்டம் கொண்டுவருவதாக நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், கனம் உறுப்பினர் திரு. அழகமுத்து அவர்கள் பேசும்போது, இந்த விற்பனை வரி சோஷலிஸ கொள்கைக்கு மாருனது. பணக்காரர்களிடமிருந்து வரியை வாங்கி ஏழைகளுக்கு செலவழிப்பது தான் நியாயமான சோஷலிஸம் என்று சொன்னுர்கள். அவர்கள் சொன்னது Welfare State-இல் ஏற்படக் கூடியது. பணக்காரர்களிடத்திலிருந்து வரி வாங்கி ஏழைகளுக்குச் செலவழிப்பதென்பது க்ஷேம நல சர்க்காரிலே ஏற்படக்கூடியது. ஆனுல், சோஷலிஸ சர்க்கார் என்ருல் அதிலே எல்லோருக்கும் பங்கு உண்டு. எல்லோருக்கும் பங்கு உண்டு

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [20th March 1965

என்னும்போது, ஏழைகளாக இருந்தாலும், பணக்காரர்களாக இருந்தாலும், ஒவ்வொருவரும் ஓரளவு கட்டித்தான் ஆக வேண்டும். அறுபது ரூபாய் செலவழிப்பவர் மாதத்திற்கு ரூ. 1·20 கொடுக்கலாம். ரூ. 600 செலவழிப்பவர் மாதத்திற்கு ரூ. 12 கொடுக்கலாம். ரூ. 6,000 செலவழிப்பவர் மாதத்திற்கு ரூ. 120 கொடுக்கலாம், ரூ. 150-ம் கொடுக்கலாம். இப்படி நாட்டிலிருக்கும் மக்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு சிறிதளவாவது கொடுத்து இந்த நாட்டினுடைய நிர்வாகத்தை நடத்துகிறோம் என்ற நிலைமையை உண்டாகக வேண்டும். அதற்காகத்தான் இந்த வரியைப் போட்டிருக்கிறோம். ஏழைகள்கூட இந்த வரி அதிகமாக இருப்பதாகச் சொல்ல முடியாது. காரணம் என்னவென்றால், அவர்கள் இன்று எந்த அளவுக்குச் செலவழிக்கிறார்களோ, அந்த அளவுக்குத்தான் வரி. நாற்பது ரூபாய் செலவழித்தால் அந்த அளவுக்குத்தான் வரி. நாலாயிரம் ரூபாய் செலவழித்தால் அந்த அளவுக்கு அதிக வரி கொடுக்கிறார்கள். ஆகவே அதை ஒரு பெரிய குற்றச்சாட்டாக நாம் எடுத்துக்கொள்ள முடியவில்லை.

"வரியை ஏய்க்கிறவர்களுக்கு **Moratorium** கொடுத்தீர்களே, அது சரிதானா ?" என்று ஒரு கனம் அங்கத்தினர் கேட்டார். ஒரு நாட்டிலே நாம் ஒரு காரியத்தை எடுத்து சரியாக நடத்த வேண்டுமென்றால், மக்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டியது அவசியம். சில சோதனைகள் நடந்தன. அதன் காரணமாகச் சிலர் வந்து, இந்தச் சோதனைகளை நிறுத்திவிட்டால், நாங்களே வலிய வந்து எங்களிடத்தில் இருக்கும் கணக்குகளைக் கொண்டுவந்து கொடுத்துத் தீர்த்துக்கொள்ளத் தயாராயிருக்கிறோம் என்று சொன்னார்கள். மாட்டேன் என்று சொல்வதா ? சேம்பர் ஆப் காமர்ஸ் பிரதிநிதிகள் வந்து, எங்களுக்கு அவகாசம் கொடுத்தால் நாங்களே கணக்குகளைக் காண்பித்து, என்ன கட்ட வேண்டுமோ அதைக் கட்டிவிடுகிறோம் என்று சொன்னார்கள். "முடியாது, உங்கள் கணக்குகளைச் சோதனைதான் போடுவோம், அப்படித்தான் பிடிப்போம்" என்று சொல்வது ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல. அதனால்தான் அவர்களுக்கு அவகாசம் கொடுத்துப் பார்த்தோம். அவகாசம் கொடுத்ததில் அதிகமான நன்மை ஏற்படவில்லை. கணக்குக் கொடுக்கவில்லை. ஆனால், சிலர் நியாயமான வழியில் செல்ல வேண்டுமென்று நினைத்தால் கூட, பலர் இதில் இருக்கும் லாபத்தை உத்தேசித்து அதற்கு உடன்படவில்லை என்பதுதான் தெளிவாகிறது. ஆகவே, மாரடோரியம் கொடுத்ததில் தவறில்லை. மத்திய சர்க்கார் நிதி அமைச்சர் அவர்கள் கூட, "யார் கறுப்புப் பணம் வைத்திருக்கிறார்களோ, அவர்கள் தங்களிடமுள்ள கறுப்பு பணத்தைக் குறித்து கணக்குக் கொடுத்துவிட்டால், வரியை எடுத்துக் கொண்டு பாக்கியை அவர்களிடமே விட்டுவிடுவோம்" என்று சொல்லியிருப்பது நல்லதொரு லட்சியம். நியாயமாக நடந்துகொள்ளக்கூடிய அளவிற்குச் சந்தர்ப்பம் அளிப்பதிலே தவறு ஒன்றுமில்லை. சந்தர்ப்பமே அளிக்கக் கூடாது என்ற கொள்கையை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

"சோதனை போட்டதற்குச் செலவு அதிகமாகிவிட்டது" என்று ஒரு கனம் அங்கத்தினர் சொன்னார். நமக்கு இருக்கும் staff-ஐ விட இன்னும் அதிகமாகப் போட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. கணக்குப் புத்தகங்களைச் சோதனையிடுவதற்காக அதிகமாகப் பணம் செலவாகவில்லை. கணக்குகளை எடுத்தவுடன் அவற்றைப் பரிசீலனை செய்வதற்கு நாம் அதிகமாக ஆடிட்டர்களைப் போட வேண்டியிருக்கிறது. கணக்குகள் எல்லாவற்றையும் பார்ப்பதற்கு அதிக ஆடிட்டர்கள் நியமிப்பதற்கான செலவு கூடியிருக்கிறது.

"ஒரிஸா பாராபட்டி—லாட்டரி சீட்டு மீது என் வரி வாங்கவில்லை ?" என்று கேட்டார்கள். சட்டப்படி அதன் மீது வரி வாங்க முடியுமா என்று நான் பரிசீலனை செய்து பார்த்தேன். லாட்டரி சீட்டு என்னும்போது அது Sale of Goods Act பிரகாரம் goods என்ற வார்த்தைக்கு என்ன definition கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதற்குள் வரவேண்டும். Actionable claim ஆக இருக்கலாம். அதனால், பாராபட்டி டிக்கட் மீது வரி போட முடியாது.

20th March 1965]

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். நம்முடைய ராஜ்யத்தில் லாட்டரி சீட்டு நடத்தக் கூடாது என்று நாம் தடை செய்திருக்கிறோம். அப்படியிருக்க, எதற்காக ஒரிஸா லாட்டரி சீட்டு நடத்துவதை இந்த ராஜ்யத்தில் நமது அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்? அதன் மீது வரி போடுவதா, கூடாதா என்பது ஒரு புறமிருக்க, அதை நாம் என் இங்கே தடை செய்யக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது மற்றொரு கேள்வி. முன்னால் டிக்கட்கெட்டுகளுக்கு ஏன் வரி போடக் கூடாது என்று சொன்னார்கள். நான் போட முடியாது என்று சொன்னேன். இப்போது டிக்கெட் விற்பனை செய்வதை ஏன் தடை செய்யக் கூடாது என்கிறார்கள். முன்பு ஒரிஸா சர்க்கார் கேட்டுக்கொண்டதன் காரணமாக நமது சர்க்கார் அனுமதித்தது. இப்போது அதையும் புனராலோசனை செய்துகொண்டிருக்கிறோம். அந்த அனுமதியை நீடிப்பதா, வேண்டாமா, என்பது ஆலோசனையில் இருக்கிறது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் நீடிப்பது இல்லை என்று முடிவு செய்து விட்டதாகச் சொல்கிறார்கள். இனி எந்த விதமான லாட்டரி சீட்டுகளும் நம் ராஜ்யத்தில் விற்க அனுமதி இருக்காது.

அடுத்து குதிரைப் பந்தயம் வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி நீண்ட காலமாக சர்ச்சை இருந்துகொண்டிருக்கிறது. குதிரைப் பந்தயம் இருப்பதன் காரணமாகத்தான் குதிரை வளர்ச்சியில் அதிகமாக ஆர்வம் காட்டப்படுகிறது. குதிரைப் பந்தயத்தை தடை செய்துவிட்டால் குதிரை வளர்ச்சியில் ஊக்கம் குன்றிவிடும். நமக்கு ராணுவத்திற்குத் தேவையான குதிரைகள் கிடைக்காமல் போய்விடக் கூடும், அதனால் தேசப் பாது காப்புக்குக் குந்தகம் ஏற்படலாம் என்பதான ஒரு கருத்து உலகத்தில் உள்ள எல்லா நாடுகளிலும் இருக்கிறது. அதையொட்டி நாம் குதிரைப் பந்தயத்திற்குத் தடை செய்தால் நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையில் கேடு வந்துவிடுமோ என்று பயந்து அதைத் தடுக்கவில்லை. ஆனால் அதிலிருந்து வருகிற வரியைச் சரியாக வசூல் செய்துகொண்டிருக்கிறோம். புக்கீஸ் டிக்கெட் விற்கிறார்கள். அவர்களிடத்திலிருந்து இப்போது 15 சத விகிதம் வாங்கிக்கொண்டிருக்கிறோம். அந்த 15 சத விகிதத்தை வாங்கிக் கொடுப்பதற்காக நாம் ஒரு சத வீதம் கமிஷன் கொடுக்கிறோம். இல்லாவிட்டால் நாம் ஆட்கள் போட்டு வசூல் செய்ய வேண்டும். நாம் ஆள் போட்டுச் செய்வதாக இருந்தால், இப்போது என்ன செலவாகிறதோ அதைவிட அதிகமாகும். இந்தக் கமிஷன்கூட இல்லாமல் நீங்களே வாங்கிக் கொடுங்கள் என்று சொன்னால் அவர்கள் மாட்டேன் என்று சொல்லலாம். எவேஷன் ஏற்படும். இப்போது அதை வசூல் செய்வதற்கு நமக்கு குறைவாகத்தான் செலவாகிக்கொண்டிருக்கிறது. ஆகவே இந்த ஒரு சத வீதம் கொடுப்பதுதான் நமக்கு லாபமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சில கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள், "ரேட்டைக் குறைத்து விட்டால் எவேஷன் குறைந்துவிடும்" என்பதாக. அதில் எனக்கு நம்பிக்கை இல்லை. உணவுப் பொருள்களுக்கு 2 சத வீதம் போட்டு இருந்தோம். கனம் அங்கத்தினர்கள் சொன்ன யோசனைப்படி ஒரு சத வீதமாகக் குறைத்தோம். முன்பு நமக்கு எவ்வளவு வசூலாகிக்கொண்டிருந்ததோ அதில் சரி பாதிதான் இப்போது வருகிறது. அதிகமாக ஒன்றும் வருவதில்லை. ஆகவே ரேட்டைக் குறைத்துவிட்டால் எவேஷன் குறைந்துவிடும் என்று சொல்ல முடியாது. வரி கொடாமல் இருப்பதே சிலருடைய வழக்கம். ரேட்டைக் குறைத்தால் அதிலும்கூட எவ்வளவு ஏமாற்றலாம் என்றுதான் பார்ப்பார்கள். வரி கொடுப்பதும், கொடாமல் இருப்பதும், வரியின் ரேட்டைப் பொறுத்திருப்பதாக நான் நினைக்கவில்லை. எவ்வளவு அதிகம் போட்டாலும் உண்மையில் வரி கொடுப்பவர்கள் கொடுத்துக் கொண்டுதான் இருப்பார்கள். வரி கொடுக்கக் கூடாது என்ற மனப்பான்மையும், எதிலும் கொஞ்சம் குறைத்து அதிக லாபம் சம்பாதிக்கலாம் என்று நினைப்பவர்களும் இருக்கத்தான் இருக்கிறார்கள். ஆகவே வரியின்

[திரு ஆர். வெங்கட்டராமன்] [20th March 1965

ரேட்டைக் குறைப்பதன் மூலம் எவேஷன் நின்றுவிடும் என்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் வரியின் ரேட்டைக் குறைக்கலாம் வேறு காரணங்களுக்காக. எவேஷனுக்காக என்று சொல்ல முடியாது.

அடுத்து 25 ஆயிரம் ரூபாய் வரையில் எக்ஸம்ப்ஷன் கொடுக்கலாம் என்று கருத்து சொல்லப்பட்டது. இருபத்தையாயிரம் வரையில் விதி விலக்குக் கொடுப்பது என்றால் இன்றைக்கு தங்களுடைய வர்த்தகத்தைப் பிரித்து பலர் பேரிலே போட்டு விதி விலக்குக்குத் தங்களை உள்ளாக்கிக் கொள்ளும் நிலைமை உண்டாக முடியும். உதாரணமாக லட்சம் ரூபாய் ஒருவருக்கு வியாபாரம் என்று வைத்துக்கொள்வோம், எ. பி. வி. டி. என்பதாக நான்கு பேர்கள் பேரிலே கடை வைத்து, கணக்குகளை அவர்கள் மூலமாகப் போட்டு எக்ஸம்ப்ஷன் லிமிட்டில் வரி கொடுக்காமல் தப்பித்துக் கொண்டு போய்விட முடியும். வரி எய்ப்புக்கு இடம் கொடுக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நாம் 50 ஆயிரம் ரூபாய் வரையில் கம்பௌண்டிங் செய்துகொள்ள வசதி செய்து கொடுத்திருக்கிறோம். பத்து ரூபாய், பதினைந்து ரூபாய், 25 ரூபாய் என்பதாக முதலிலேயே தங்களுடைய வியாபாரத்திற்கு ஏற்ப கம்பௌண்டிங் செய்துகொள்ள வசதி செய்து கொடுத்திருக்கிறோம். அதுமாத்திரம் இல்லை. முழுக் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. பர்சஸ் பில்களைக் காண்பித்தால் அவர்களுக்கு அதை வைத்துக் கணக்குப் பார்த்து அவர்களுடைய வியாபாரம் 25 ஆயிரம் ஸ்லாபில் வருகிறதா, 30 ஆயிரம் ஸ்லாபில் வருகிறதா என்று நிர்ணயித்து வரி போட்டுவிடலாம்.

அடுத்து அடிஷனல் எக்சைஸ் ட்யூடி என்ற வகையில் சர்க்கரை புகையிலை, இன்னும் துணி ஆகிவற்றின் மூலம் வருகிற வருமானம் ஒரே அளவாக இருந்து கொண்டிருக்கிறதே, இப்போது அதிகமாக விறபனை செய்யப்படுகிற அளவுக்கு அதிகமாக வரவில்லையே என்பதாக திரு. சங்கரன் அவர்கள் சொன்னார்கள். அந்தக் காரணத்ினால்தான் அவர்கள் அடிஷனாக மற்ற வேறு சில பொருள்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதாக விருப்பம் தெரிவித்த போதிலும் நாம் அதற்குச் சம்மதிப்பதில்லை. மற்ற பண்டங்களில் இருந்து ஐந்து வருஷத்திற்கு முன்பாக ஐந்து லட்சம் வந்தது என்றால், இந்த ஐந்து வருஷங்களில் அந்தப் பண்டங்களின் உற்பத்தி எவ்வளவு அதிகரித்திருக்கிறதோ அதற்கு ஏற்ற வகையில் இப்போது அதிக வரி கிடைக்கிறது. அந்த மாதிரி சர்க்கரை, புகையிலை, துணி ஆகியவற்றின் உற்பத்தியும், விற்பனையும் இப்போது எவ்வளவு அதிகரித்திருக்கிறதோ அதற்கு ஏற்றவகையில் மத்திய சாககார் நமக்கு அடிஷனல் எக்சைஸ் ட்யூடியாகப் பணம் கொடுப்பதில்லை. இதைப் பற்றி மத்திய சர்க்காரிடமும் நாம் பலமுறை சொல்லியிருக்கிறோம். இன்னும் பல பண்டங்களை அடிஷனல் எக்சைஸ் ட்யூடி போட கொடுத்து விடுங்கள் என்று கேட்டபோதுகூட—அவற்றில் இருந்து நமக்கு இந்த 1965–ஆம் வருஷத்தில் என்ன வந்து கொண்டிருக்கிறதோ அந்தப் பணத்தைத்தான்—அவற்றில் இருந்து நிச்சயமாக 1970-இல் அதிகமாக வரக்கூடும் என்றாலும் 1970–லும் கொடுப்பார்கள். இன்னும் ஒன்று சொல்கிறேன். பேசிக் எக்சைஸ் ட்யூடி நமக்கு உண்டு. அடிஷனல் எக்சைஸ் ட்யூடியாக இன்னும் பல பண்டங்களை அவர்களுக்குக் கொடுத்து விட்டால், நமக்கு வருவாய் இல்லாமல் போய்விடும். ஏதோ ஓரிரு பண்டங்களை விட்டுக் கொடுக்க ஒத்துக் கொண்டோமே தவிர, எல்லாப் பண்டங்களுக்கும் அவர்கள் அடிஷனல் எக்சைஸ் ட்யூடி விதிக்க நாம் அனுமதித்து விட்டால் நம்முடைய வருவாயே குறைந்து விடும். ஏற்கெனவே ராஜ்யங்களுக்கு இருக்கக்கூடிய நிதி வசதி குறைவு. அதிலும் எலாஸ்டிக்காக, நெகிழ்ச்சி உடையதாக இருக்கக் கூடிய வரி விதிப்பு இனம் சேல்ஸ் டாக்ஸ் தான். இதுவும் பாதிக்கப்படக் கூடிய வகையில் வேறு பண்டங்களுக்கும் அடிஷனல் எக்ஸ்சைஸ் ட்யூடி போட நாம் அனுமதிக்க முடியாது என்று சொல்ல விரும்புகிறேன்.

கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒன்று சொன்னார்கள். அந்த அந்த வியாபாரிகளிடம், "நீங்கள் 500 ரூபாய் கட்டி விடுங்கள், நீங்கள் 1,000 ரூபாய் கட்டிவிடுங்கள்" என்பதாக மொத்த

மாகச் சொல்லிவிட்டால் போதும். அவர்கள் கட்டிவிடுவார்கள். கணக்கு கள் பார்க்க வேண்டிய அவசியம் இருக்காது என்ருர்கள். அதற்கு மேலும் வரி கட்டக்கூடிய அளவுக்கு வியாபாரம் ஆனுல் அவர்களே எடுத்துக் கொள்ளட்டும் என்று விட்டு விடுவதா என்ன? அப்படித்தான் வெள்ளைக்காரர்கள் ஜமீன்தாரி சிஸ்டத்தையே உண்டாக்கிஞர்கள். லாண்ட் ரெவின்யூவைப் பார்த்து, "சரி, நீங்கள் இவ்வளவு கொடுத்து விடுங்கள், அதற்கு மேல் எவ்வளவு வசூல் செய்தாலும் நீங்கள் எடுத்துக் கொள் ளுங்கள்" என்பதாகச் சொல்லி—ஜமீன்தாரி முறையை உண்டாக்கிஞர் கள். நாம் இப்போதும்—இந்த விற்பனை வரி சம்பந்தமாக ஒரு ஜமீன் தாரி முறையைக் கொண்டு வந்து விடுவதா என்ன? (திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி எழுந்திருந்தார்).

கனம் உதவி சபாநாயகர் : கனம் அங்கத்தினர் நடுவில் குறுக்கிடக் கூடாது. ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால் முடிவில் சொல்லலாம்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர் கொஞ்சம் கவனிக்காமல் சொல்லி விட்டார். அதனுல் நான் அதை வேடிக்கை பண்ணுகிறேன். ஒருவரைப் பார்த்து "நீங்கள் 500 ரூபாய் கட்டுங்கள் போதும்" என்று எப்படிச் சொல்வது, அவருக்கு லட்ச ரூபாய்க்கு மேல் வியாபாரம ஆயிற்று என்ருல்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இப்போது நடக்கின்ற முறை அதுதான். டி.ஸி.டி.ஓ., ஏ.ஸி.டி.ஓ., எல்லாம் வியாபாரிகளுடைய கணக்கைப் பார்க் காமலேயே, "உங்களுக்கு இவ்வளவு வியாபாரம் ஆகியிருக்கலாம் அல்லவா, ஆகவே, இவ்வளவு கட்டிவிடுங்கள்" என்றுதான் சொல்கிருர் கள். அன் அபிஷியலாக இப்படி நடப்பதைத்தான் ரெகுலரைஸ் செய்து விடுங்கள். அதனுல் வருமானம் குறையாது, வியாபாரிகளுக்கும் கஷ்டம் இருக்காது என்று சொன்னேன். இது ஜமீன்தாரி சிஸ்டம் இல்லை.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : லீகலைஸ் பண்ணிஞலே ஜமீன்தாரி சிஸ்டம்தான் வரும். ஆனுல் கூடுதலாகப் போடுகிருர்கள் என்று சொன் ஞல் நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தகுந்த காரணம் இல்லாமல் கூடுதலாகப் போடக்கூடாது; ஆதாரத்துடன்தான் போட வேண்டும். கூடுதலாகப் போட்டால், அவர்கள் அப்பீல் செய்வதற்கு அஸிஸ்டெண்ட் கமிஷனர் வைத்திருக்கிருேம். சேல்ஸ்டாக்ஸ் அப்பெல்லட் டிரிபியூனல் வைத்திருக்கிருேம்; அதற்குமேல் ஹைகோர்ட் இருக்கிறது. அவர்கள் அதைப்பற்றி புகார் செய்து கொள்ளலாம்.

அடுத்தபடியாக இந்தச் சட்டத்தைப்பற்றி விவாதிக்கின்ற பொழுது எல்லா அங்கத்தினர்களும் சொன்ஞர்கள், அரசாங்கம் இதிலே தலையிடா மல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று. நான் கொண்டு வந்திருக்கக் கூடிய பில்லையும், நிறைவேற்றிய சட்டத்தையும் பார்த்தோமாஞல், ரிவிஷ ஞக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் சரி எல்லாம் கவனித்துக் கொண்டுதான் வந்திருக்கிருேம். சட்டசபை செலக்ட் கமிட்டிக் கூட்டத் திலே, சேம்பர் ஆப் காமர்ஸ் கூட்டத்திலே எல்லோரும் கூறிஞர்கள். அசெஸ்மெண்டிலே சர்க்கார் தலையிடாமல், அதை ஜுடிஷியல் அதாரட் டிக்கே விட்டுவிட வேண்டுமென்று சொன்ஞர்கள். பின்பு அதை நாங்கள் உட்கார்ந்து பரிசீலனை செய்து பார்த்ததில் அஸிஸ்டெண்ட் கமிஷனருக்கு டைரக்ஷன் கொடுக்க முடியாது; சேல்ஸ்டாக்ஸ் அப்பெல்லட் டிரிப்யூனல், அதாவது டிஸ்டிரிக்ட் ஜட்ஜ், நம்முடைய கண்ட்ரோலில் இல்லை; ஆகையால் அவரிடம் கொடுக்க முடியாது. ஆகவே, யாருக்காவது அசெஸ்மெண்டில் தவறு இருக்கிறதென்ருல், சட்டப்படி அப்பெல்லட் டிரிப்யூனலுக்குப் போகவேண்டுமே தவிர சர்க்காரிடம் வந்து சொல்வது தவறு. அசெஸ் மெண்டுக்குச் சரியான வழி வகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே அவர்கள் செல்வார்கள். எந்த நியதி உண்டோ அதன் பிரகாரம் தான் அவர்களுக்குக் கிடைக்கும். அதனுல் அசெஸ்மெண்டில் தகராறு செய்கிருர்கள் என்று சர்க்காரைக் குற்றஞ் சாட்டுவது பொருந் தாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கனம் உறுப்பினர் அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள் ; ஸ்டே முதலியவைகள் கிடைப்பதில்லை. அதனால் கஷ்டம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். நம்முடைய ராஜ்யத்திலே 1964 வருஷம் செப்டம்பர் மாதம் 30ம் தேதி வரை பழைய பாக்கி சேல்ஸ் டாக்ஸ் 2 கோடி ரூபாய். அந்த 2 கோடி ரூபாயிலே இந்த வருஷம் சுமார் 79 இலட்சம் போக, மீதியுள்ளது சுமார் 1 கோடியே 21 லட்ச ரூபாய். இதிலே அப்பெல்லட் டிரிபியூனலினால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஸ்டே கொடுக்கின்ற உரிமை இருக்கிறதே அது சர்க்காருக்குக் கிடையாது. கோர்ட்டுகளுக்குத்தான் உண்டு. அஸிஸ்டெண்ட் அப்பெல்லட் கமிஷனருக்கும், அப்பெல்லட் டிரிபியூனலுக்கும், ஹைகோர்ட்டுக்கும் ஸ்டே கொடுக்க உரிமை இருக்கிறது. அவர்கள் ஸ்டே கொடுக்கவில்லை என்றால், அந்தக் கேஸிலே நியாயமில்லை என்ற காரணத்தால் கொடுக்காமல் இருக்கலாம். ஜுடிஷியல் அதாரிட்டி ஸ்டே கொடுக்கவில்லை என்று சர்க்காரிடத்திலே எப்படிப் புகார் பண்ண முடியும் ? நியாயமாக இருந்தால் கொடுப்பார்கள். நியாயம் இல்லையென்ற இடத்திலே ஸ்டே கொடுக்காமல் இருந்திருக்கலாம். ஸ்டே கொடுப்பது சர்க்காரல்ல. ஸ்டே கொடுக்காமல் இருப்பதை யெல்லாம் தவிர்க்க வேண்டும் என்பது நாம் எந்தக் கொள்கையை ஒத்துக் கொண்டோமோ அந்தக் கொள்கைக்குச் சரியானதல்ல. ஆகவே அதையெல்லாம் ஹைகோர்ட்டும், கோர்ட்டுகளைச் சேர்ந்த அதிகாரிகளும்தான் தடுக்க வேண்டுமென்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சில சாதாரணமான சிறு சிறு விஷயங்கள் எல்லாம் சொல்லப்பட்டன. வறுகடலைக்கு வரி விலக்கு இல்லை, உணவுப் பொருட்களுக்கு இல்லை, டீக்கு விலக்கு வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். வரியே இல்லாமல் சர்க்கார் நடத்த முடியுமானால் அது ரொம்ப நல்லது. புலவர் கோவிந்தன் அவர்கள் சொன்னார்கள் ; இது என்ன சர்க்கார் ; வரியில்லாமல் அரசாங்கம் நடத்த முடியும் ; தொழில்களை யெல்லாம் நாமே நடத்தினால், அதனால் வரும் லாபத்தை வைத்து சர்க்கார் நடத்தலாம் என்று சொன்னார்கள். அதை இன்னும் கொஞ்சம் நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால் உண்மைகள் புரியும். வரி இல்லாமல் சர்க்கார் நடத்துகின்ற நாடுகள் எங்களுக்குத் தெரியும். தொழில்களிலிருந்து வருகின்ற லாபத்தை வைத்து சர்க்கார் நடத்துகின்ற நாடுகளையும் நாங்கள் பார்த்து இருக்கிறோம். அந்த நாடுகளில் என்ன செய்கிறார்கள் என்றால், உற்பத்திப் பண்டத்தின் மேலே ரூ. 10 அதிகமாக வைத்து விற்பனை விலையாகச் செய்து விடுகிறார்கள். உதாரணமாக ஒரு பொருளைச் செய்வதற்கு ரூ. 100 ஆகிறதென்றால், அதன்மேல் ரூ. 10 கூட்டி வைத்து விற்பனை விலையாகச் செய்து விடுகிறார்கள். நாம் அப்படிச் செய்யாமல் அந்தப் பத்து ரூபாயை வரி என்று போட்டு வாங்குகிறோம்.

புலவர் கா. கோவிந்தன் : நம்முடைய தொழில் நிலையங்களில் உற்பத்தியாகின்ற பொருள்கள் நம்முடைய நாட்டிலேயே விற்கப்பட்டால் தான் அமைச்சர் அவர்கள் சொல்கின்ற நிலை ஏற்படும். ஆனால் இங்கு உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களை வெளி நாடுகளுக்கு விற்கக் கூடிய முறையிலே அந்த நிலை இருக்காது என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்த நாட்டில் அதனுடைய அயல்நாட்டு வியாபாரம் 10 சத விகிதத்திற்கு மேல் இருக்காது. உள்நாட்டு வியாபாரம்தான் 90 சத விகிதம். வெளிநாட்டு வியாபாரம் 10 சத வீதம் தான். அப்படி எல்லா அயல்நாடுகளுடனும் போட்டி போட்டுத் தேவையான வரிகளையெல்லாம் வாங்கிவிடலாம் என்று நினைப்பது, ஏதோ கற்பனை செய்து கதை எழுதினால் எப்படி யிருக்குமோ அந்த விதமாகத் தான் இருக்கும். நான் இதைப் புலவர் கோவிந்தன் அவர்களுக்காகச் சொல்லவில்லை. பொதுவாக இந்தத் தவறான கருத்து வெளியிலேயும் நிலவுகிறது. சர்க்கார் அதிகமாகத் தொழில்களை எடுத்து நடத்திவிடலாம் என்றும் அதனால் சர்க்காருக்கு நல்ல லாபம் கிடைத்துவிடும் என்றும் பலர் நினைக்கிறார்கள். உற்பத்திச் செலவுக்குமேல் அதிகமாக விலையை

நிர்ணயித்தால்தான் மார்ஜின் கிடைக்கும். அந்த மார்ஜினை விலையாகப் போட்டால் என்ன ? அல்லது வரியாகப் போட்டால் என்ன ? சர்க்காரிலே பஸ் சார்ஜ் பேர் கிலோ மீட்டருக்கு 3 ந. பை. என்று போட்டால் இன்னும் 25 லட்சம் அதிகமாக லாபம் காணலாம். ஆகையினால் இந்த லாபத்தை தொழில்களிலிருந்து பெற்று விடலாம், வரிகளுக்கு வழியில்லாமல் சர்க்கார் நடத்தமுடியும் என்பது சரியாகாது என்று நினைக்கிறேன். அடுத்தபடியாக சோதனை போடுவதால் சிறு வியாபாரிகள் பாதிக்கப்படு கிறார்கள் என்று சொன்னார்கள். நான் தயவு செய்து கேட்டுக் கொள் கிறேன். என்னிடத்திலே அந்த விவரத்தைக் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்திருக்கிறோம், சிறிய வியாபாரிகள் தவறு செய்தாலும் சரி, மூடிவிட்டாலும் சரி, வேறு வழியில்தான் வசூல் செய்ய வேண்டுமே தவிர, அவர்களைச் சோதனை போட்டு வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. அதேபோல் எனக்கு நன்றாகத் தெரியும். பார்டரிலே நெல், அரிசி, வாழை முதலிய வைகளைக் கொண்டு போகிறார்கள். பார்டரைக் கிராஸ் பண்ணிக்கொண்டு போகிறார்கள். அதைக்கூட நாம் விட்டுவிடுகிறோம். இந்த நிர்வாகத்தைக் குறை சொல்ல வேண்டுமென்று நினைக்கின்ற பாதிக்கப்பட்ட பெரியவர்கள் தான் சிறிய வியாபாரிகளை முன்வைத்து " பாதிக்கப்படுகிறார்கள், பாதிக்கப் படுகிறார்கள் " என்று பிரச்சாரம் பண்ணுகிறார்கள். சிறிய வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அவர்களே என்னிடத்தில் வந்து சொல்ல லாம். அவர்கள் என்னிடத்தில் அடிக்கடி வருகிறார்கள். ஆனால், இதைப்பற்றி அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள், விற்பனை வரி கஷ்டமாக இருக்கிறது, நஷ்டமாக இருக்கிறது, நாங்கள் என்ன செய்வது நீங்கள் பார்த்துச் செய்யவேண்டுமென்று நேரிடையாக என்னிடம் வந்து, எழுதிக் கொடுக்கிறார்கள். உதாரணமாக, வால்டாக்ஸ் ரோடிலே சிறிய பக்கெட்டுகள் செய்யும் வியாபாரிகள் சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் போட்ட வுடனே என்னிடம் வந்து அதிகமாக டாக்ஸ் வந்துவிடுகிறது என்று சொன்னார்கள். நான் சொன்னேன், நீங்கள் எல்லோரும் சேர்ந்து தானே சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் வேண்டுமென்று கேட்டீர்கள் என்று சொன்னேன். அதற்கு அவர்கள் சொன்னார்கள், நாங்கள் சொல்வதற்கு வாய்ப்பு எங்கே இருக்கிறது ; சக்தி எங்கே இருக்கிறது ; ஆர்கனைசேஷன் எங்கே இருக்கிறது ; ஸ்தாபனம் எங்கே இருக்கிறது ; நாங்கள் ஏதாவது கஷ்டம் வந்தால் நேரிடையாகப் பார்க்கக்கூடிய மந்திரியை உடனே பார்க்கிறோம். இல்லையா னால் கொஞ்சம் காத்துக்கொண்டு இருந்து பார்க்கிறோம். அவ்வளவு தான் வித்தியாசம் என்று சொன்னார்கள். அதனாலே சிறு வியாபாரிகள் பாதிக்கப் பட்டார்கள் ; துன்புறுத்தபட்டார்கள் என்பதெல்லாம் பாதிக்கப்பட்ட பெரிய வியாபாரிகள் சொல்கிற வாதம் என்று தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். சிறு வியாபாரிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறோம். அதற்கு மேல் நாம் நடத்திய "சர்சஸ்" பற்றி எடுத்துப் பேசப்பட்டது. 6,300 கணக்குகள் சோதனை போடப்பட்டன. எத்தனை இடங்களில் என்ற எண்ணிக்கை ஞாபகம் இல்லை. 6,300 accounts were seized. அதைப் பரிசீலனை செய்ததில் 22 கேஸ்களில்தான் " எவே ஷன் " இருக்கிறதா இல்லையா என்று எங்களால் கண்டு பிடிக்க முடிய வில்லை. அதிலே இருக்கிறதோ இல்லையோ எங்களுக்குத் தெரியாது. 22 கேஸ்களில்தான் " We could not establish evasion " ஆகவே இதிலே தவறாக ஒரு பெரிய கிளர்ச்சியாக செய்து விட்டார்கள் என்று சொல்வதற்கு இடம் இல்லை.

1–30 p.m.

கடைசியாக ஒரு முனை விற்பனை வரி, பல முனை விற்பனை வரி விதிப்பது பற்றிக் கூற விரும்புகிறேன். கனம் மதியழகன் அவர்கள் படித்த ரிப்போர்ட்டிலேயே "லெஜிஸ்லேச்சரில் சம்மதம் கொடுத்தால்தான் அது பற்றி முடிவு செய்யப்படும் " என்று இருக்கிறது. அதிர்ஷ்டவசமாக நம் முடைய நாடு இன்னும் ஜனநாயக நாடாகத்தான் இருந்து கொண்டி ருக்கிறது. ஒருவர் பார்த்து என்ன செய்ய வேண்டுமென்றாலும் செய்ய முடியும் என்ற நிலைமைக்கு வந்து விடவில்லை. (திரு. இராம. அரங் கண்ணல் : வராது என்று நினைக்கிறேன்). எனக்குச் சந்தேகமாக இருக் கிறது. இந்த நிலைகளைப் பற்றியெல்லாம் விசாரணை செய்து எல்லோருடைய

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [20th March 1965

அபிப்பிராயத்தையும் தெரிந்து அதன் பிறகு தான் முடிவுசெய்ய வேண்டு மென்று அவர்களிடத்தில் கூறினேன். நாட்டிலே எப்படி இதைப் பற்றி ஒரு குழப்பமான அபிப்பிராயம் இருக்கிறதோ அதேதான் நம்முடைய சட்டசபையிலும் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். திட்டவட்டமாக இன்றைக்கு ஒருமுனை வரிதான் வேண்டும் என்று சொல்வதற்குச் சரியான சாத்தியக் கூறுகள் இல்லை. திட்டவட்டமாகப் பலமுனை வரிதான் நன்மை பயக்கும் என்று சொல்வதற்கு இடம் இல்லை. இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால் நிர்வாகத்திலே எதைச் செய்தாலும் சிலருக்காவது பாதகம் ஏற்படாமல் இருக்கமுடியாது. நாட்டிலே எந்த நிகழ்ச்சி நடந்தாலும் சிலர் லாபம் அடைவார்கள்; சிலருக்குப் பாதகம் ஏற்படும். ஆனால் ஏற்படக்கூடிய அந்தப் பாதகம் எவ்வளவு குறைவாக இருக்கவேண்டுமென்று பார்த்து அதைத்தான் செய்யவேண்டும். மேற்கொண்டு இதை சேல்ஸ்டாக்ஸ் அட்வைசரி கமிட்டி யிலே வைத்துப் பரிசீலனை செய்யலாம் என்று இருக்கிறேன். சர்க்காருக்கு ஏதோ இதை மாற்றுவதன் மூலமாக ஏராளமான வருவாய் வரும் என்ற காரணத்தால் மந்திரி பல முறை வரி போடலாம் என்று சொல் கிறார் என்று நினைப்பது தவறு. இப்போதே சர்க்காருக்கு நிறைய வருமானம் வருகிறது. இதை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. வர்த்தகம், தொழில் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்பதற்காக மாற்றவேண்டுமென்று சொன்னால் மாற்றுவதற்கு இந்தச் சர்க்கார் தயங் காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வரி போடுவதில் பலவிதமான பண்டங்களைப் பற்றிக் கனம் அங்கத்தினர் சங்கரன் அவர்கள் கூறினார்கள். "பால் பேரிங், போல்ட்" போன்றவற்றுக்கு பத்து சதவிகிதம் வரி என்று இருக்கிறது. வேறு சிலவற்றுக்கு வேறு விதமாக இருக்கிறது. இந்த மாதிரி ஒவ்வொன்றிலும் சிக்கல்கள் ஏற் படுவதன் பயனாக "கிளாரிபிகேஷன்" வருகிறது என்ற பிரச்னை எழுகிறது. அந்த கிளாரிபிகேஷன் எதிலே வருகிறது என்று சொல்வதற்குச் சர்க்கா ருக்கு அதிகாரம் கிடையாது. திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 200 பொருள்களுக்குக் கிளாரிபிகேஷன் கொடுத்து விடலாம் என்று சொன்னார் கள். சர்க்கார் கிளாரிபிகேஷன் கொடுத்து ஹைகோர்ட்டில் சரியில்லை என்று சொல்லிவிட்டால் வரி வசூல் செய்ய முடியாது.

"பாடி பில்டிங்கை" எடுத்துக் கொள்ளுங்கள். "இது ஒர்க்ஸ் காண்ட் ராக்ட்; அதனால் சேல்ஸ்டாக்ஸ் வாங்கக் கூடாது" என்று ஹைகோர்ட்டில் சொன்னார்கள். உடனே நாங்கள் "பாடி பில்டிங்குக்கு வரி" கிடையாது என்று ஒரு உத்தரவு போட்டோம். இன்னொரு ஹைகோர்ட்டில் "பாடி பில்டிங்குக்கு வரி வாங்க வேண்டியதுதான் என்று சொன்னார்கள். அதற்கு பிறகு "சுப்ரீம் கோர்ட்" டிலும் வரி போடலாம் என்று சொல்லி விட்டார்கள். இப்போது "நீங்கள் வரி கொடுங்கள் என்று கேட்டால், "நீ தானே வரி கிடையாது என்று சொன்னாய்" என்று கேட்கின்றார்கள். சட்டப்படி, There is no estoppel against Government where tax is due. வரி கொடுக்க வேண்டுமென்று சொன்னால், நாங்கள் தவறான அபிப் பிராயம் சொல்லியிருந்தால், "நீதான் சொன்னாய்; அதனால் கொடுக்க முடியாது" என்று சொல்ல அதிகாரம் கிடையாது. வர்த்தகத்தில் ஏற் படுகின்ற குழப்பம் எவ்வளவு என்று பார்க்க வேண்டும். சர்க்கார் எவ் வளவு குறைவாக கிளாரிபிகேஷன் போன்றவைகளை கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்குக் குறைவாகக் கொடுக்கவேண்டுமென்பதைத்தான் விரும் புகிறது. அதிகமாகக் கிளாரிபிகேஷன் கொடுப்பதை விரும்பவில்லை. அது மல்டி பாயிண்ட் டாக்ஸாக இருந்தால், பால் பேரிங் கான்ட்யூட் பைப்ஸ் ஸ்க்ரூஸ், போல்ட்ஸ், எதுவாக இருந்தாலும், அதிலே 2 சதவீதம் என்ற நிலைமை இருக்கும். சர்க்காருக்கு கிளாரிபிகேஷன் கொடுக்கவேண்டிய அவ சியம் ஏற்படாது. இந்த ஒரு நன்மை வர்த்தகத்திற்கு இருக்கும். அவர் களுக்கும் என்னதான் வரி என்பது நிச்சயமாகத் தெரியக்கூடிய நிலைமை இருக்கும். கனம் அங்கத்தினர்கள் சொன்ன எல்லாக் கருத்துக்களுக்கும் எனக்குத் தெரிந்த அளவில் அதற்கு வேண்டிய பதில் கூறியிருப்பதாக நினைக்கிறேன். இந்த மானியக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

20th March 1965]

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் அமைச்சர் அவர்கள் சுப்ரீம் கோர்ட்டிலே சாதகமாகத் தீர்ப்பு கிடைக்கும் என்று சொன்னார்கள். அப்படிக் கிடைத்தால் அதிலே அவர்களைவிட நான் மகிழ்ச்சியடைவேன். தன்னுடைய 15 வருஷ அனுபவம், திறமை எல்லாவற்றையும் பற்றிச் சொன்னார்கள். நான் சொன்னது " மதியழகனுடைய கருத்து அல்ல " அவர்களை விட அதிகமாக இல்லாவிட்டாலும் அவர்களுடைய அனுபவத்தை ஒட்டி இருக்கிற நீதிபதியின் கருத்தைத்தான் நான் எடுத்துக் காட்டினேன். சுப்ரீம் கோர்ட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டாலும் கூட அமைச்சர் அவர் களுடைய காவலையெல்லாம் கடந்து ஏரோப்ளேனில் சந்திர மண்டலத்திற்கே கணக்குகளை எடுத்துச் செல்கிற நிலைமை கூட ஏற்பட்டு விடும்போல் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் தயவு செய்து இதைப் பற்றி விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

" That the allotment of Rs. 1,06,42,900 under Demand No. III--General Sales Tax and Other Taxes and Duties--Administration be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 1,06,42,900 under Demand No. III—General Sales Tax and Other Taxes and Duties—Administration."

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and ment again at 2-00 p.m. on Monday, the 22nd March 1965.

The House then adjourned. 1–07 p.m.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

* 162. *Notifications issued with G.O. Ms. No.* 5841, *Industries, Labour and Co-operation (Co-operation), dated 24th December* 1964 *amending the Madras Co-operative Societies Rules*, 1963, *published with the Industries, Labour and Co-operation Department S.R.O. No. A.* 865 *of* 1963, *dated the 30th August* 1963, *at pages* 1 *to* 50 *of the Supplement to Part V of the* Fort St. George Gazette, *dated the 4th September* 1963. [*Laid on the Table of the House under section* 119(4) *of the Madras Co-operative Societies Act*, 1961 (*Madras Act* 53 *of* 1961)]

B. Reports Notifications and other Papers.

† 72. *A Review of the Working of Minor Ports in Madras State (Tamil).*

† 73. *A Review on Irrigation in Madras State*—1964–65 *(English and Tamil).*

† 74. *A Review on Road Development and Building Programme in the Madras State*—1964–65 *(English and Tamil).*